KALKI
14.6.87
ரூ. 1.50

கல்கி



விசு: விவேகமா: விகடமா?

ஓ! அப்படி ஒரு தெளிவான செயல்பாடு...



இதை நிரூபிக்க வார்த்தையேதும் தேவையில்லை.

XII LIIXII XIIXIO LIIXOU XIIXIIU XIILXI
OUXII XIIOI XIIO XIIXO LIIXOU XIIXO
UXII XIIO XIIO XILI XIILU XIIU XIIXI LIXU
XII LIXII XIIOU XIIXO LIIXOIIX

XILI LIIXIILI XII XIIIXII XIIL XIO LIIO XIIO
XII LIIXII XIIXIO LIIXOU XIIXIIU XIILXI
OUXII XIIOI XIIO XIIXO LIIXOU XIIXO
UXII XIIO XIIO XILI XIILU XIIU XIIXI LIXU
XII LIXII XIIOU XIIXO LIIXOIIX

OUXII XIIOI XIIO XIIXO LIIXOU XIIXO
UXII XIIO XIIO XILI XIILU XIIU XIIXI LIXU
XII LIXII XIIOU XIIXO LIIXOIIX

CROWN-TV

வேறு எந்த டிவி-ஐயும்விட அதிக
இல்லங்களில் காணப்படும் ஒரே பெய

மேலும் கிடைக்கிறது மாடல் சிடி-701 எம்
(ரிமோட் கண்ட்ரோலுடன்)


"எல்லாப் பிரச்னைகளுக்கும் பெண்கள்தான் காரணம்!"



தமிழ்நாட்டில் டி.வி. வேரூன்றாத காலம்.... ஞாயிறு மாலைகளில் சபாக்களில் அரங்கேறும் நாடகங்களுக்கு நிறைய கூட்டம் — அதுவும் விசு நாடகம் என்றால் அநேகமாக ஹவுஸ் ஃபுல்தான். குடும்பக் கதை — அது பளிச்சென்று சொல்லப்படும் விதம்; குடும்பப் பிரச்னைகளை அலசும் நறுக்கென்ற வசனங்கள். இந்த அறிவுபூர்வமான அலசலுடன் இழையோடும் நகைச்சுவை — எல்லாம் கலந்த ஒரு ஃபார்முலா விசுவுடையது. நடுத்தர வர்க்கத்தைக் கட்டிப் போட்ட ஃபார்முலா. இப்படிப்பட்ட ஃபார்முலா நாடகம்தான் 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது.

சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் இயக்குனர் பாலச்சந்தர், 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' நாடகத்தைப் பார்த்தார். "நாடகக் கதை எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் என்னை இரண்டு மணி நேரம் கட்டிப் போட்டு-விட்டீர்கள்! அந்தத் திறமையை நான் மதிக்கிறேன்" என்று விசுவிடம் அவர் கூறி, திரையுலக வாசலின் கதவுகளைத் திறந்துவிட்டார். அதன் பிறகு, 'பட்டினப்பிரவேசம்' நாடகத்தின் விமர்சனத்தைப் படித்துவிட்டு, நாடகத்தைப் பார்க்கும் முன்னரே அக்கதையைப் படமாக்க விரும்புவதாகக் கூறி விசுவிடமிருந்து வாங்கிக் கொண்டார் பாலச்சந்தர். விசுவின் சினிமாப் பிரவேசம் பட்டினப் பிரவேசம் மூலம் ஆரம்பித்தது.

சினிமாத் துறையிலும் விசு ஃபார்முலா தொடர்ந்தது. அதே மாதிரி



குடும்பக் கதைகளை அதேவிதத்தில் சொல்லலானார். தயாரிப்பாளர்களின் வற்புறுத்தலின் பேரில் சில M.G. (**minimum guarantee** — டான்ஸ், சண்டை, இதர கிளுகிளு காட்சிகள்) விஷயங்களை மட்டும் சேர்த்துக் கொண்டார். இவரது நாடகங்களிலிருந்து அதிகம் வேறுபடாத இவரது சினிமாக்கள், நாடகங்கள் கண்ட வெற்றியையே காணும் என்ற அவரது கணிப்பு சரியாகவே இருந்தது. குடும்பத்தோடு பார்க்கக் கூடிய படங்கள் என்ற முத்திரையை இவர் படங்கள் பெற்றன. 'சம்சாரம் அது மின்சாரம்' ஜனாதிபதியின் தங்கப் பதக்கத்தையும் ஏராளமான ரசிகர்களின் பாராட்டையும் பெற்றுத் தந்தது.

விருது பெற்ற விசுவைச் சந்தித்து, வாழ்த்தி விட்டுப் பேட்டியைத் தொடங்கினோம். அந்த நீண்ட நேர பேட்டியும் ஒரு சிறு நாடகம் போலவே அமைந்துவிட்டது. வசனம் பேசும் பாணியிலேயே வேகமாக, குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் பேசினார் விசு.

கே: உங்கள் சினிமாக்களில் நாடகத்தனம் அதிகமாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்கிறீர்களா?

ப: எனது படங்கள் நாடகத்தனமாக இருக்கின்றன என்று யாராவது சொன்னால் ரொம்ப சந்தோஷப்படுவேன். அப்படி இருக்க வேண்டும் என்பதுதான் என் குறிக்கோள். அதனால் அதை ஒரு குற்றச்சாட்டு என்பதை விடப் பாராட்டு என்றே கருதுவேன்.

கே: நாடகத்தனமான சினிமாக்கள் எடுப்பதைக் காட்டிலும் நாடகங்களை நடத்திக் கொண்டிருக்கலாமே?

ப: நடத்தியிருக்கலாம். ஆனால் நாடகங்களை என் சொந்தப் பணத்தில் நடத்தி நஷ்டப்பட்டேன். இப்போது, சினிமா எனக்குப் பணத்தோடு, முன்னிலும் அதிகமாகப் பேரும் புகழும் வேறு பெற்றுத் தருகிறது.

கே: நாடக உலகத்திற்காக நீங்கள் ஏங்கவில்லையா? நாடகக் கலைஞன் பார்வையாளர்களின் திருப்தி அல்லது அதிருப்தியை உடனே அறிகிறான். இருவருக்குமிடையே ஓர் அணுக்கம் ஏற்படுகிறது. இதை சினிமாவில் பெற முடியாதே?

ப: உண்மைதான். நாடக உலகத்துக்காக நான் ஏங்கத்தான் செய்கிறேன். நீண்ட நாள் பழக்கமுள்ள ஒருவன் சிகரெட் பிடிக்காமல் இருப்பது மாதிரி அவஸ்தைப்படுகிறேன். ஆனால் நான் நாடகத் துறையிலிருந்து இப்போது முழுதும் விலகியிருக்கக் காரணம் பார்வையாளர்களின் அதிருப்திதான்.... ஆமாம்! ஷூட்டிங் முடிந்து சபாவுக்கு நான் வந்து சேர்வதற்குள் ரொம்ப தாமதமாகி விடும். இது குறித்துப் பார்வையாளர்கள் தங்களது அதிருப்தியை ஒளிவு மறைவின்றி வெளியிட ஆரம்பித்ததும் நானும் இனி அவர்களைச் சோதிப்பது நியாயமில்லை என்று தீர்மானித்து, சினிமாவுடன் நிறுத்திக் கொண்டுவிட்டேன்.

கே: இனிமேல் நாடக மேடைக்குத் திரும்ப மாட்டீர்களா?

ப: நானே தயாரிப்பாளராகவும், இயக்குனராகவும் இருந்து படங்களைத் தயாரிக்கும் காலம் வரும் வரை என் நேரம் என்னுடையதாக இராது. அப்படி ஒரு காலம் வரும். அது வரும்போது நாடகத்துக்கென்று நிச்சயமாக நேரம் ஒதுக்குவேன். என் இயக்கத்தில் நடிக்க வரும் நாடகக் கலைஞர்கள் (எஸ்.வி.

சேகர், ஒய்.ஜி. மகேந்திரா போன்றோர்) மாலை நாடகம் இருக்கிறது என்று சொன்னால் அவர்களைப் பொழுதோடு அனுப்பி வைத்து உதவுவது மட்டுமே நாடக உலகிற்கு இப்போது நான் செய்து வரும் சேவை!

கே: உங்கள் படங்கள் எல்லாவற்றிலும் ஒரே மாதிரியான குடும்பக் கதைகளையே சொல்லி வருகிறீர்களே. மாறுதலான கதையம்சம் கொண்ட படங்களை ஏன் தயாரிப்பதில்லை?

ப: 'கெட்டி மேளம்'; 'சிதம்பர ரகசியம்' போன்றவை மாறுதலான முயற்சிகள். ஆனால் அவை வரவேற்பு பெறவில்லை. 'நீ குடும்பப் படங்களையே எடு. உனக்கேன் இந்த வித்தியாசமான பரீட்சையெல்லாம்' என்று ரசிகர்கள் என்னைக் கட்டுப்படுத்தி விட்டார்கள்.

கே: இப்போது அரசியல் சம்பந்தமாகவும் அரசியலை அடிப்படையாகக் கொண்டும் படங்கள் எடுக்கப்பட்டு மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகின்றன. அது போன்ற ஆழமான பிரச்னைகளை வைத்து நீங்கள் ஏன் படம் எடுப்பதில்லை?

ப: நீங்கள் சொல்கிற மாதிரி 'அரசியல் கதை' எனக்குள் இதுவரை உதிக்கவில்லை. ஆனால் என் குடும்பப் படங்களும் தேசிய பிரச்னைகளைத்தான் சொல்கின்றன. தேசம் குடும்பத்தில்தானே ஆரம்பிக்கிறது. வரதட்சணையும், கூட்டுக் குடும்ப அமைப்பும் இன்று நாடளாவிய பிரச்னைகளாகத்தானே இருக்கின்றன. குடும்பத்தைச் சித்திரிக்கும்போது ரசிகர்கள் — குறிப்பாகப் பெண்கள் அந்தக் கதையோடு சுலபத்தில் ஒன்றி விடுகிறார்கள்.

கே: அப்படியென்றால் பெண்களைக் கவரும் கதைகளாகத் தேர்ந்தெடுத்துப் படம் எடுக்கிறீர்களா?

ப: ஓரளவுக்கு இது உண்மை. ஆனால் படம் இரண்டு வாரங்கள் ஓடிய பிறகுதான் பெண் பார்வையாளர்கள் அதைப் பார்க்க வர ஆரம்பிக்கிறார்கள். அந்த முதல் இரண்டு வாரங்களும் அப்படத்தை ஓடச் செய்வதில்தான் வெற்றியே இருக்கிறது. அதனால் பெண்களை மட்டும் மனத்தில் கொண்டு படம் எடுக்க முடியாது.

கே: அந்த முதல் இரண்டு வாரங்கள் படத்தை ஓடச் செய்யத்தான் மசாலா விஷயங்களைச் சேர்க்கிறீர்களா?


ப: ஆமாம். அடிப்படையில் பணம் முதலீடு செய்யும் யாருக்குமே நஷ்டத்தைப் பற்றிய பயம் இருக்கும். அதனால் சில **minimum guarantee** சமாசாரங்களைச் சேர்க்கத்தான் செய்வார்கள். அதை நான் தவறு என்றும் சொல்லி விட மாட்டேன்.

கே: அப்படியே ஒவ்வொரு தயாரிப்பாளரும் நினைத்து கவர்ச்சி நடனங்களையும் டூயட் சீன்களையும் சேர்த்துக் கொண்டிருந்தால் திரையுலகம் எப்படி முன்னேறும்? ரியலிசம் எப்போதுதான் வரும்?

ப: முன்னைக்கிப்போது ரியலிசம் இருக்கத்தான் இருக்கிறது. பாரதிராஜா போன்றவர்கள் ஆரம்பித்த ஒரு புதிய மார்க்கத்தில் இன்னும் பலர் வரத் தொடங்கியுள்ளனர். ஆனால் ரியலிசத்தை மட்டுமே சினிமாவில் காட்டினால் அதை மக்கள் ஏற்றுக்கொள்வார்களோ மாட்டார்களோ என்ற பயம் திரையுலகில் இன்னும் எல்லோருக்கும் இருக்கிறது. மக்கள் முன்னேறித்தான் இருக்கிறார்கள். ஆனால் எங்கள் பயம்தான் விலகவில்லை. இருந்தும், ரொம்ப நாட்களுக்குப் பிறகு பாடல்களே இல்லாத இரண்டு படங்கள் வர இருக்கின்றன. அவ்வப்போது புதிய முயற்சிகளில் இறங்கத்தான் செய்கிறோம்.

கே: தமிழில் சிறந்த கலைப்படம் ஒன்று உருவாக வாய்ப்பே இல்லையா? நீங்கள் அப்படி ஒரு படம் தயாரிக்கும் திட்டம் எதுவும் வைத்திருக்கிறீர்களா?

ப: ஆர்ட் ஃபிலிம் என்பதெல்லாம் சுத்த 'ஹம்பக்' என்பதுதான் என் அபிப்ராயம். தமிழில் அப்படிப்பட்ட படத்தை யாரும் எடுக்க மாட்டார்கள் — இதுவரை, எடுத்ததில்லை. நம் தமிழ்நாட்டில் ஒரு ஜனரஞ்சக நடிகரும் ஒரு கலையுணர்வு மிக்க இயக்குனரும் சேர்ந்து ஓர் இடத்துக்குப் போனால் நடிகரைச் சுற்றித்தான் கூட்டம் மொய்க்கும். இயக்குனரை யாரும் கண்டு கொள்ளவே மாட்டார்கள். அதுதான் இன்றைய தமிழ் சினிமாவின் தலையெழுத்து. இத்தனைக்கும் முப்பது சதவிகித திறமையேயுள்ள ஒரு நடிகரை மெருகேற்றி முழுமைப்படுத்துவது ஓர் இயக்குனர்தான். இங்கே ஒரு நடிகருக்கு



இருக்கும் பிரபை அபாரமானது. அதனுல் தான் நடிகர்கள் அரசியலில் சக்கைப் போடு போடுகிருர்கள்.

கே: வீடியோவில் சினிமாவுக்குப் பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்கிருர்கள். இருந்தாலும், 'சம்சாரம் அது மின்சாரம்' இவ்வளவு நாட்கள் ஓடியிருக்கிறதே?

ப: வீடியோ இல்லாமலிருந்தால் இன்னும் அதிகமான நாட்களுக்கு ஓடியிருக்கும். சினிமாவை அழிக்கப் புறப்பட்டுள்ள சாதனம் வீடியோ.

கே: இப்போது புதிது புதிதாக நடிக நடிகையர்கள் வந்த வண்ணம் இருக்கிருர்கள். இவர்களுக்குப் படவுலகப் பிரவேசம் சுலபமாக இருக்கிறதே? பஸ் ஸ்டாண்டுகளிலும் பள்ளிக் கூடங்களிலும் இவர்களைத் தேடுகிருர்கள்....?

ப: கண்ணில் பட்டவர்களையெல்லாம் நடிக்க வைப்பதில்லை, வைக்கவும் முடியாது. ஓரளவு கவர்ச்சியும் திறமையும் வேண்டும்.

கே: கவர்ச்சி அவ்வளவு முக்கியமா? திறமை அதிகமாகவும் அழகு இல்லாமலும் இருக்கும் ஒருவருக்கு வாய்ப்பே கிடைக்காதா?

ப: ரசிகர்கள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

கே: பாலசந்தரிடம் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

ப: சினிமா இயக்கத்தைப் பொறுத்த வரை எல்லாமே அவரிடம் கற்ற பாடம் தான் — ஒரு கதாபாத்திரத்தின் மீது தமது ஆளுமையை இயக்குனர் திணிக்கக் கூடாது; நடிகனின் தன்மை அறிந்து அவன் திறமையை முழுவதுமாக வெளிக் கொணர வேண்டும்; கதாபாத்திரங்கள் மூலம் கதையை இயல்பாய் நகர்த்திச் செல்ல வேண்டும். இவை சில அடிப்படைப் பாடங்கள். இவை தவிர, சரியென்று தோன்றுவதைச் செய்வது. தோல்வி கண்டு துவளாமை, முன்கோபம் போன்றவையும் அவரிடம் கற்ற பாடங்கள் தான்.

கே: சம்சாரம் அது மின்சாரம் இவ்வளவு வெற்றிகரமாக ஓடும் என்று எதிர்பார்த்தீர்களா?

ப: ஐம்பது நாட்கள் நிச்சயம் ஓடும் என்று எதிர்பார்த்தோம். ஆனுல் படத்தின் முடிவு நாங்கள் எதிர்பார்த்ததைவிட மிக அதிகமாக மக்களைக் கவர்ந்தது. அதனுல்தான் இப்படம் இவ்வளவு அமோகமாக ஓடியது. இத்தனைக்கும் அதன் கதைக் கரு எளிமையானது. குடும்பத்தில் பெண் சரியாக இருந்தால் எல்லாம் சரியாக இருக்கும் என்ற கரு — ஏற்கெனவே பல முறை சொல்லப்பட்ட விஷயம்.

கே: அப்படியென்ருல் பிரச்னைகளுக்குக் காரணம் பெண்கள்தான் என்கிறீர்களா?

ப: அனேகமாக அப்படித்தான். பெண்கள் வீட்டில் அமைதியாக இருந்தால் போதும். கணவன் ஆய்ந்து ஓய்ந்து வீடு திரும்பும்போது, பளிச்சென்று சிரித்த முகத்துடன் வரவேற்க வாசலில் காத்திருந்தாலே போதும்; பாதிப் பிரச்னைகள் தோன்றவே தோன்ருது. பெண்கள் கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் மீதிப் பிரச்னையும் தீர்ந்து விடும்.

கே: அதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? பிரச்னைகளுக்கு நிறையக் காரணங்கள் இருக்கின்றன. ஒரு சராசரி ஆணுக்குப் பெண் தான் பிரச்னைக்குக் காரணம் என்று பழி சுமத்துவது சுலபமாக இருக்கிறது. அதனுல் பெண் பலியாடு ஆகிருள். மேலும் பெண் மட்டுமே ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்?

ப: தியாகம் செய்வதற்கென்றே பிறந்தவள் பெண்.

கே: ஆண்கள்தானே தங்கள் ஆதிக்க பலத்தால் அப்படி அவர்களை வைத்திருக்கிருர்கள்.

ப: இல்லை. இயற்கையே அப்படித்தான் விதித்திருக்கிறது. பெண்தான் குழந்தையைப் பெறுகிருள்.

கே: அதனுல்....?



"எம்.எல்.ஏ. ஏன் வருத்தமாக இருக்கிருர்?"


"இத்தனை நாட்களாகச் சினிமாவில் நம் கித்தாப்பு கொடி கட்டிப் பறந்ததே. இனி அது இருக்காதோ என்ற கவலை தான்!"

— வனிதா செல்லப்பா

"இந்தக் கல்யாண மண்டபத்துல எல்லா வசதியும் இருக்காமே!"

"ஆமாம்; திடீர்னு சம்பந்திகளுக்குள்ள ஏதாவது சண்டை வந்தா உடனே குறுக்கிட்டுத் தடுத்து, நியாயம் வழங்க நடுவர்கள் கூடத் தயாரா இருக்காங்க....!"

— ஒவ். கே. சங்கர்



வியர்க்குருவினின்று நிவாரணம் பெற டால்கம் பவுடர் போதாது, நைஸில் வேண்டும்.



GLL/8806

நைஸில் உபயோகியுங்கள்

வியர்க்குருவினின்று விரைவில் நிவாரணம் பெறுங்கள்.



நைஸில், மருந்துக்கலவையுள்ள பவுடர் ஆகும். வியர்க்குருவின் எந்தவிதத் தொல்லையிலிருந்தும் உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கென்றே விசேஷமுறையில் தயாரிக்கப்பட்டதாகும். டால்கம் பவுடர்களைப் போலன்றி, பிரச்சினை மோசமாவதனின்றும், பரவுவதனின்றும் எதிர்த்துக் காக்கிறது இது.

1. அளவுக்கு மீறிய வியர்வையைத் தடுக்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இதமளிக்கிறது.

ப: அவளுக்கு எதையும் சாதிக்கும் சக்தி இருக்கிறது. ஒரு மந்திரி லஞ்சம் வாங்குகிறார் என்றால் அவரது மனைவி நினைத்தால் அதைத் தடுத்து நிறுத்த முடியும். ஆனால் அப்படி யாரும் செய்யக் காணோம். இன்று பல ஆண்கள் பெண்களின் தொல்லை தாங்காமல், அதை மறக்க, கள், சாராயத்தை நாடுகிறார்கள்.

கே: லஞ்சம் வாங்கத் துணியும் ஒருவனுக்கு மனைவியின் வார்த்தை ஒரு பொருட்டாக இருக்குமா என்ன? மேலும் கள், சாராயத்தை ஆண்கள் நாடக் காரணம் பெண்களால் எழும் பிரச்னைதான் என்று நீங்கள் பொது விதியாகச் சொல்வதை எப்படி ஏற்க முடியும்?

ப: நீங்கள் ஏற்காவிட்டாலும் என் கருத்து அதுதான். இவ்விஷயத்தில் நாம் கருத்து மாறுபாடு கொண்டிருப்பதாகக் கருதலாம். அவ்வளவே. என் கருத்துப்படி பெண்ணுக்கு எல்லா இடங்களிலும் ஆணுக்கு இணையான உரிமை தரக் கூடாது. சில இடங்களில் ஐம்பது சதவிகிதம், இன்னும் சிலவற்றில் எண்பது சதவிகிதம் என்று உரிமை தர வேண்டும்; தருகிறோம் — சில இடங்களில் சம உரிமை தருகிறோம். இதுவே முறை.

கே: உங்கள் மனைவிக்கு எத்தனை சதவிகிதம் உரிமை தருகிறீர்கள்?

ப: அவளால் எனக்கு எந்தப் பிரச்னையும் கிடையாது. அதனால் சதவிகிதக் கணக்கெடுப்பு தேவையே இல்லை. எனது படங்கள் தொடர்பாக அவளிடம் அபிப்ராயங்கள் கேட்பேன். சில விஷயங்கள் சரியாக இல்லை என்று அவள் சுட்டிக் காட்டினால் யோசித்துத் திருத்துவதோ மாற்றுவதோ உண்டு. சம்சாரம் அது மின்சாரம் படத்தின் முடிவில் குடும்பங்கள் இணைவதா, பிரிவதா என்று எங்கள் யூனிட்டில் நிறைய வாக்குவாதம் நடந்தது. குடும்பங்கள் பிரிவதுதான் சரி என்று என் மனைவி அடித்துச் சொன்னாள். நானும் அந்த முடிவுக்கே வந்திருந்தேன்.


கே: சம்சாரம் அது மின்சாரம் படத்துக்கு விருது கிடைத்தபோது மிகவும் சந்தோஷப் பட்டிருப்பீர்களே?

ப: விருது கிடைத்தால் யாருக்குமே சந்தோஷமாகத்தான் இருக்கும். ஆனால் நான் வெற்றிக்கு அளவுகோலாகக் கொள்வது விருதுகளை அல்ல! பத்திரிகைக்காரர்களின் பாராட்டையும் அல்ல! **DCR (Daily Collection Report)** ஐ மட்டும்தான் நான் வெற்றிக்கு அளவுகோலாகக் கொள்கிறேன். மக்கள் தீர்ப்பு எனக்குச் சாதகமாக இருந்தால் போதும்.

பேட்டி: **எஸ். சந்திரமௌலி**

மேலட்டை வண்ணப்படம்,
புகைப்படங்கள்: **யோகா**

அடுத்த இதழில்...



குட்டிச் சுவரான ஆரம்பக் கல்வி

— கவர்ஸ்டோரி

பிரச்னைகள் தீர்ந்ததா? எந்த அளவில்?

— தருமபுரி மாவட்ட ரீ விசிட்


இலவசம்!
farex the first choice.
பாப்பாவுக்கு ஒரு பளிங்குக் கிண்ணம்
-பாசத்துடன் அளிப்பது ஃபாரெக்ஸ்.
Delicious
Farex
CEREAL WITH MILK
அழகான பயனுள்ள ஒரு
பளிங்குக் கிண்ணம்—
அதிலே, பாப்பா மிகவும்
விரும்பி உண்ணும். உங்களது
பாப்பாவின் சுவைமிக்க
சத்துணவு ஃபாரெக்ஸ்
வாங்குந்தோறும் இலவசம்
இப் பளிங்குக் கிண்ணம்.
இப்போது கிடைக்கிறது
தேர்ந்தெடுத்த இடங்களில்!

25/203 TML.



கல்கி

1987 ஜூன் 14
மலர் 45 இதழ் 46
பிரபவ வைகாசி 31




கடற்படையை அனுப்புங்கள்!

ஈழப் பிரச்னை தொடர்பாகப் பல தவறுகள் நடந்துவிட்டன. முத்தரப்பிலும் தவறுகள் உள்ளன. 'இந்தியா இலங்கைக்கு ராணுவத்தை அனுப்பாது என்றும், தனி சுதந்திர ஈழ நாடு கோரிக்கையை ஆதரிக்காது என்றும், மத்திய அரசு தெளிவாகக் கூறிய பிறகும், விடுதலைப் புலிகள், பேச்சு வார்த்தைகளைப் புறக்கணித்து விடுதலைப் போரில் இறங்கியிருக்க வேண்டுமா? ஏதேனும் ஒரு கட்டத்தில் தரப்படுகிற சலுகைகளை ஏற்று, அமைதிக்கு வழி கண்டிருக்கக் கூடாதா?' என்ற கேள்விகள் எழவே செய்கின்றன. இம்மியும் விட்டுக் கொடுக்காத இவர்கள் பிடிவாதத்தால், அப்பாவித் தமிழர்கள் பலர் சிங்கள ராணுவத்தின் குண்டு வீச்சுக்கு ஆளாகி உயிர் பலியாகியிருக்கிறார்கள்.

இதற்கு மறுபுறமாக இந்திய அரசு, ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக உலக அபிப்ராயத்தை உருவாக்குவதில் பரிதாபகரமான தோல்வி அடைந்திருக்கிறது. ஜெயவர்த்தனவிடம் கண்டிப்புக் கறாராகப் பேசாததால் அவருக்குக் குளிர் விட்டுப் போக உதவியிருக்கிறது. விடுதலைப் புலிகளுக்கும் அழுத்தம் திருத்தமாக நல்லதை எடுத்துச் சொல்லி, அவர்கள் போக்கின் பின்விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதை இந்திய அரசு உணர்த்தியிருக்க வேண்டும் — தவறி விட்டது.

ஒருபக்கம் ஈழப் போராளிகளுக்கு ஆதரவு தருவதுபோல் பலவிதமாகக் காட்டிக்கொண்டு, அதே சமயம் படையெடுப்பு இல்லை என்றும் தனி ஈழத்துக்கு ஆதரவு இல்லை என்றும் கூறி, குட்டையைக் குழப்பியதில், விடுதலைப் புலிகள் ஒரு தவறான கணிப்புக்கு வந்தார்கள். 'யுத்தம் முற்றினால், அப்பாவித் தமிழர்கள் சிங்கள ராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளானால் எப்படியும் இந்தியா மனிதாபிமான அடிப்படையிலாவது ராணுவத்தை அனுப்பி விடும்' என்று கணக்குப் போட்டார்கள். இந்திய அரசின் இதே மெத்தனப் போக்கும் இரண்டுங்கெட்டான் கொள்கையும்தான், ஜெயவர்த்தன அரசுக்கு ராணுவத்தைப் பலப்படுத்திக் கொள்ளவும் தாக்குதலுக்கு அதனைத் தயார் நிலையில் வைக்கவும் வசதி செய்து தந்தது. ஆகக் கூடி, மத்திய அரசின் போக்கினால் ஜெயவர்த்தனவின் நரித்தனமே இதுவரை வெற்றி அடைந்து வந்துள்ளது. 'நாட்டைத் துண்டாட விட மாட்டேன்' என்றும் 'போராளிகளுடன் மட்டுமே போராடுகிறேன்' என்றும் திரும்பத் திரும்பக் கூறியபடியே, ஒரு பாவமும் அறியாத ஏராளமான அப்பாவித் தமிழர்களைக் குண்டு வீசிக் கொன்று குவித்திருக்கிறார்.






இந்த நரித்தனத்தையெல்லாம் தூக்கியடிக்கும் ஓநாய்த்தனத்தை இப்போது காண்பித்திருக்கிறார் ஜெயவர்த்தன. விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டுத் தாக்குதல்களுக்கு ஆளாகிச் செத்தும் சாகாமலும் இருக்கும் ஈழத் தமிழர்களுக்கு உதவ, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இந்தியா அனுப்புகிற உணவு, உடை, மருத்துவ உதவி முதலியவற்றைக் கூடக் 'கரை சேர விடமாட்டேன்' என்று தடுத்து நிறுத்தி, திருப்பி அனுப்பும் ஜெயவர்த்தனவின் ஆணவப் போக்கு, வேறு ஓர் உண்மையை உணர்த்துகிறது. அது, சிங்கள ராணுவத் தாக்குதலில் அப்பாவித் தமிழர்கள் அதிகம் பேர் சாகவில்லை என்றும் பொருட்சேதமும் அதிகமில்லை என்றும் உலகை நம்ப வைக்க ஈழ அரசு அரும்பாடு பட்டுக் கொண்டிருக்கிறதல்லவா? இந்தப் புனித வேஷம் கலைக்கப்பட்டு, அசுர முகம் அம்பலமாகி விடும் என்கிற பயம்தான் இந்த மனிதாபிமான உதவிக்குக் கூட முட்டுக் கட்டை போடுகிறது.

இந்தச் சூழலில் மத்திய அரசு மேலும் காலந்தாழ்த்தாமல் ஒரு காரியம் செய்ய வேண்டும். மனிதாபிமான அடிப்படையில் அனுப்பப்படும் உணவு, உடை, மருத்துவ உதவி ஆகியவற்றுக்குக் கடற்படையின் பாதுகாப்பை அளித்து, மீண்டும் அனுப்ப வேண்டும். 'எங்கள் நோக்கம் யுத்தமல்ல, நிவாரணப் பணியே; ஆனால் அதற்குத் தடை விதித்தால், தடுக்க வருகிறவர்களைத் தாக்க எங்களுக்கு உரிமை உண்டு' என்று கூற வேண்டும்.

'எங்கள் அனுமதி இருந்தால்தான் உள்ளே நுழையலாம்' என்கிறார் ஜெயவர்த்தன. சாதாரண காலத்தில் இந்த வாதம் சரிதான் — இலங்கை வேறு நாடு என்பதால். ஆனால் பக்கத்து வீட்டுக்காரன், மனைவியை அடித்து நொறுக்கும்போதும் பட்டினி போட்டுக் கொல்லும் போதும் மனிதாபிமான அடிப்படையில் நமக்கு அவ்வீட்டுக்குள் நுழைய அனுமதி உண்டு. அதுவும், பக்கத்து வீட்டில் பரிதவிக்கிறவள் நமது சகோதரியாக இருந்துவிட்டாலோ அந்த உரிமை பல மடங்கு அதிகமாகவே உண்டு.

ஈழத் தமிழர்கள், இந்திய மக்களின் சொந்தச் சகோதரர்கள் என்பதைப் பிரதமர் மறக்கலாகாது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.





மு. அபுல்ஹசன்

வைதேகி காத்திருக்க வேண்டாம்!

— கோவை கலெக்டர் எடுத்த நடவடிக்கைகள்

கடந்த 23.11.86 நாளிட்ட கல்கி வார இதழில் வெளியாகியுள்ள பேட்டி மூலம் இம்மாவட்டத்தின் பல்வேறு பிரச்னைகளை எனது கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்பிரச்னைகள் தொடர்பாக, எனது அலுவலர்கள் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்துத் தங்களுக்கு இக்கடிதம் மூலம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

●● தண்ணீர் வரிக்கான பட்டியல்களைக் கோவை மாநகராட்சி மூலம் கடந்த ஜனவரி முதல் இரண்டு மாதத்திற்கொருமுறை கணக்கெடுத்து அவ்வப்போதே உபயோகிப்பாளர்களிடம் அதற்கான கேட்பினை கொடுக்கப்பட்டுத் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாநகராட்சிப் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் மூன்றும் பகுதி வேலைகள் தற்போது நடந்து வருகின்றன. மாநகராட்சி கட்டணக் கழிப்பிடங்களில் ஒப்பந்தக்காரர்கள் கட்டணத்தைக் கூடுதலாக வசூலிக்கிறார்கள் என்ற குறை தெரிவிக்கப்பட்டிருந்ததையடுத்து, 1986—87 ஆம் ஆண்டில் குத்தகைக்கு விடப்பட்டுள்ள கழிப்பிடங்களில் ரசீது இல்லாமல் கூடுதல் கட்டணம் வசூலித்து வந்ததற்காக ஒவ்வொரு குத்தகைக்காரருக்கும் ஏல நிபந்தனைகளின் படி ரூ 200/— அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏல நிபந்தனைகளை மீறியதற்காக ஏழு கழிப்பிடங்களின் குத்தகையினை ரத்து செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. கழிப்பிடங்களில் புகார் புத்தகம் ஒன்றும் வைக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

●● சத்தியமூர்த்தி நகரில் குடியிருக்கும் ராதாமணி என்பவர் தம் வீட்டிற்கு அடுத்த வீட்டில் நடைபெறும் ஒர்க் ஷாப்பின் தொந்தரவு குறித்துப் புகார் செய்ததன் பேரில், விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி ரெங்கசாமி (த/பெ. கிருஷ்ண ஆசாரி) என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு ரூ 75/— அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

●● பாரதியார் பல்கலைக் கழகம் செல்பவர்களின் வசதியைக் கருதி, பி.எஸ்.ஜி. கலை அறிவியற் கல்லூரியிலிருந்து புதிய வழித்தடம் ஏற்படுத்தப்பட்டு சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் விடப்பட்டு வருகின்றன.

●● கோவைநகரிலுள்ள ஆட்டோரிக்ஷாக்களில் மீட்டருக்கு மேல் அதிகப்படியான கட்டணம் வாங்கப்படுகிறது என்ற புகாரையடுத்து, மாவட்ட காவல்துறை (நகரகம்) மூலம் பொது மக்கள் தெரிவிக்கும் புகாரின் மீது அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

●● கடந்த 83—ஆம் வருடம் முதல் 86 ஜனவரி முடிய வரப் பெற்ற ஆட்டோரிக்ஷா அனுமதி கேட்ட விண்ணப்பங்கள்

அனைத்தையும் பரிசிலித்து, முறையே 31.1.86, 3.2.86, 4.2.86, 11.2.86, 12.2.86 ஆகிய நாட்களில் நேர்முகக் கூட்டங்கள் நடத்தி, 215 நபர்களுக்குப் புதிய ஆட்டோ ரிக்ஷா அனுமதி வழங்கப்பட்டது. நேர்முகப் பேட்டியில் தாங்கள் கூறியபடி, குறிப்பாக ஆட்டோ ரிக்ஷா பெர்மிட் வாங்க ஆர்.டி.ஓ. ஆபீசில் பணம் தர வேண்டியிருக்கிறது என்கிற மாதிரியான எந்த விதமான புகார் மனுக்களும் இவ்வலுவலகத்திற்கு வரவில்லை. அவ்வாறு புகார்கள் ஏதும் வந்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று போக்குவரத்து அலுவலர் விளக்கம் அளித்திருக்கிறார்.

●● வடவள்ளி கிராமத்தை ஒட்டியுள்ள சில இடங்களையும் காலி செய்யச் சொல்வதாகக் கூறியிருக்கும் புகார் தொடர்பாக, வீட்டு வசதி வாரிய செயற் பொறியாளர், "கோவை வீட்டு வசதிப் பிரிவுக்காகக் கோவையில் நில ஆர்ஜிதம் செய்யப்படும் பகுதியில், அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவுகளில் கட்டப்பட்டுள்ள வீடுகள் மற்றும் மனைகள் பற்றிய இறுதி முடிவு ஏதும் வாரியத்தாலோ அல்லது அரசாலோ எடுக்கப்படவில்லை. ஆயினும் இந்த வீடுகளை அகற்றும் நடவடிக்கைகள் இப்பொழுது எடுக்கப்படவில்லை'' எனத் தெரிவித்துள்ளார்.

●● திருப்பூருக்குப் பவானி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டத்தின்படி, சுத்திகரிப்பு நிலையம், நீர் உந்து நிலையங்கள், சுத்த நீர் கொண்டு வரும் 55 கி.மீ. நீளத்திற்கான பி.வி.சி. குழாய்கள் மற்றும் திருப்பூர் நகரின் பகிர்மானக் குழாய்கள் அனைத்தும் 2011—ஆம் ஆண்டு வரை செயல்படுமாறு மதிப்பீடுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டம் நவம்பர் 89—க்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 96—ஆம் ஆண்டில் 31.37 மில்லியன் லிட்டரும், 2011—ஆம் ஆண்டு 43.91 மில்லியன் லிட்டரும் குடிநீர் வழங்க இத்திட்டம் வழி வகை செய்கிறது.

●● கோவை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் நிறுத்தப்படும் மிதிவண்டிகளுக்குப் பாதுகாப்புக் கருதி, ஸ்டேண்ட் அமைத்து அதில் விடும் வண்டிகளுக்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பொதுப் பணித் துறையின் மூலம் விடப்பட்ட ஏலத்தில் குத்தகை எடுத்து உரிமை பெற்ற ஒப்பந்தக்காரர் இப்பணியை மேற்கொண்டுள்ளார். அரசு விதித்துள்ள நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டுக் கட்டணம் வசூலிக்க வேண்டும் என ஒப்பந்தக்காரருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

●● 82—ஆம் ஆண்டு கிணற்று மோட்டார் பம்புசெட் மின் இணைப்பிற்கு மனு செய்துள்ள திரு காளியப்பக் கவுண்டருக்கு நடப்பு நிதியாண்டில்தான் மின் இணைப்பு கொடுக்கப்படும். ஏனெனில் 80—ஆம் ஆண்டில்மனு செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்குத்தான் கடந்த ஆண்டு மின் இணைப்பு கொடுக்க முடிந்தது — என மின்வாரிய கண்காணிப்புப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

●● அமராவதி சைனிக் பள்ளி விடுதிக் கட்டணம் உயர்ந்து போவதற்கு ஏற்ப, தமிழக அரசு மாணவர்களுக்கு வழங்கும் உதவித் தொகையை (கல்வித் துறை மற்றும் நிதித் துறை பரிந்துரைகளின் பேரில்) உயர்த்த அரசு பரிசீலனை செய்து வருகிறது.

●● உடுமலை வட்டத்தில் உள்ள திருமூர்த்தி மலை அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோவில் சமணர் திருக்கோவிலாக இருந்ததற்கு எந்தவிதமான வரலாறும் இல்லை. அது சமணர் கோவில் என்று யாரும் இதுவரை உரிமை கொண்டாடவும் இல்லை. தொன்று தொட்டு இந்துக்கள் வழிபடும் திருக்கோவிலாகவே அது இருந்து வருகிறது. இக்கோவிலின் கர்ப்பக்கிருகத்தில் சுவாமியை யாரும் படம் எடுக்கக் கூடாது என்பது நடைமுறையில் இருந்து வருகின்றது. இத் திருக்கோவில் மலையடிவாரத்தில் இருப்பதாலும், இதற்குச் சுற்று மதில் சுவர் இல்லாததாலும் திறந்தவெளியில் ஆயிரங்கால் மண்டபம், திருமண மண்டபம், ஜோதிகம்பம், எட்டுக் கல் மண்டபம் முதலியன உள்ளதாலும் புகைப்படம் எடுப்பவர்களை யாரும் கண்காணிக்க முடியாது. இத்திருக்கோவிலுக்குப் பெரும் அளவில் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதால் கட்டணம் வசூலிப்பது என்பது நடைமுறையில் சாத்தியம் இல்லை. மேலும் தற்போது தல வரலாறு, பல முக்கிய நிகழ்ச்சிகள் குறித்த கையேடுகள் தயாரிக்கப்பட்டு, பக்தர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

●● 5.5.87 அன்று அனைத்துத் துறை அலுவலர்களோடு வைதேகி நீர்வீழ்ச்சிக்குச் சென்று பார்வையிட்டு, அந்த இடத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.எனவே,'வைதேகிகாத்திருக்கவேண்டாம்' என்கிற அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது என்பதைத்தெரிவித்துக் கொள்கின்றேன்.

— மு. அபுல்ஹசன்

(கோவை மாவட்டக் கலெக்டர்)

(நமது கோவை மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது, கோவை கலெக்டராக இருந்த மு. அபுல்ஹசன், தற்போது அப்பதவியிலிருந்து நகராட்சி நிர்வாக இயக்குனராகப் பதவி மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். புதிய பொறுப்புக்கு வரும் முன்னால், நமக்குப் பேட்டியளித்தபடி இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து நமக்குத் தெரியப்படுத்திய அவருடைய கடமையுணர்ச்சி கண்டு மகிழ்கிறோம். கோவை மாவட்ட மக்கள் சார்பிலும் கல்கியின் சார்பிலும் நன்றி கூறுகிறோம் — ஆ.ர்.)

கூலிக்காரன்

திரேதாயுகத்து சிலுக்கு ஸ்மிதா, கலியுகத்து கூலிக்காரனில் கவர்ச்சி நடனமா? யார் ரசிக்கிறார்களாம்?

கே. நட்ராஜூம், தியாகுவும் படத்தில் என்ன சாதிக்கிறார்கள்?

க்ளைமாக்ஸில் ஹெலிகாப்டர் இருக்கிறது, தங்கக் கார் இருக்கிறது; அப்படியாக்கும், இப்படியாக்கும் என்றெல்லாம் செய்திகள் வந்தனவே என்று பார்த்தால் படு புஸ். மினியேச்சர் வைத்தே ஒப்பேற்றி இருக்கலாம்.

புதுமுகம் ரூபினி படத்தில புகுவதே அரைவாசி படத்துக்கு மேல்தான். கொஞ்சமே கொஞ்சம் அழகான முகம் இருக்கிறது. சரி, முகம் மட்டும் இருந்தால் போதுமா? நடிப்பு? மிஸ் ரூபினி, அழுத்தமான பாத்திரத்தில் நடியுங்கள். ஒட்டுகிறதா என்று பார்க்கலாம்.

ஒவ்வொருசண்டைக்காட்சியும் குருக்ஷேத்திரப் போர்தான். எவ்வளவு நீளம்? இவர் குத்த, அவர் பல்டியடிக்க இவர் மறுபடி எழுந்து தாக்க, மூன்றாமவர் பாய.... போதுமடா சாமி!

ராதாரவி,ராதாரவிதான்என்றுசொல்ல வைத்திருக்கிறார். அநாயாசமான ஏற்ற இறக்கக் குரலோடு அவ்வப்போது லேசாக இருமும் 'மானரிச'த்தோடு மனிதர் மனத்தில் பதிந்து விடுகிறார்.

விஜய்காந்த்புயல்போல் சீறுகிறார், பாய்கிறார். சண்டை போடுகிறார். அழுகிறார். கொடுத்த வேலையைக் கச்சிதமாகச் செய்திருக்கிறார்.

அன்றைய நகைச்சுவை நடிகர் நாகேஷிற்கு இன்னும் மரியாதை மதிப்பெல்லாம் இருக்கிறது. அவற்றையெல்லாம் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால் நாகேஷ் ஒன்றே ஒன்று செய்ய வேண்டும். அதாவது இனிமேல் நடிக்காமல் இருக்க வேண்டும்.

விளம்பரப்படுத்தப்பட்ட அளவிற்கு இல்லை ஏழிசை ஏந்தல் டி. ராஜேந்தரின் இசை.

சுருட்டுப் பிடிக்கிற ஜெய்சங்கரும் கண்ணீர் விடுகிற ஸ்ரீவித்யாவும் பரவாயில்லை.

காக்கிச் சட்டைக்குப் பிறகு ராஜசேகர் கொடுக்கும் ஒவ்வொரு மசாலாவிலும் மசாலா விகிதாச்சாரம் சரியாகவே அமையமாட்டேன் என்கிறது. கூலிக்காரனும் அதற்கு விதிவிலக்கல்ல!

ஒரு வல்லவனை எதிர்த்து ஒரு நல்லவன் போராடுகிறான். ஜெயிக்கிறான். அதில் வல்லவன் பணக்காரன், நல்லவன் ஏழையாய் இருந்து குறுக்கு வழியில் பணக்காரனாக மாறுபவன். சமீபத்திய மசாலாக்களின் மூலக்கதை இதுதான். கூலிக்காரனும் அதே தான்.


— ஜெயமன்மதன்







எப்போது ஓயும் நாமச் சண்டை?



[illegible] — தொடர்கிறது!

'எப்போது ஓயும் நாமச் சண்டை?' என்று கட்டுரை பிரசுரித்தாலும் பிரசுரித்தோம். ஏகப்பட்ட பேர் நம்மிடம் சண்டைக்கு வந்து விட்டார்கள்! இவர்கள் இரு வகையினர். ஒரு தரப்பினர், இம்மாதிரி கட்டுரையே பிரசுரித்திருக்கக் கூடாது என்றும் எங்கோ ஒரு மூலையில் ஒரு கிராமத்தில் உள்ள சண்டையைப் பெரிதுபடுத்துவதால் வேற்றுமைகள் வளரவே செய்யும், தீமையே விளையும் என்றும் கருதுகிறவர்கள். மற்றொரு தரப்பினர், 'தென்கலை, வடகலை — வித்தியாசம் என்ன?' என்ற தலைப்பில் நாவல்பாக்கம் யக்ஞவராஹ தாத்தாச்சாரியார் கூறியிருப்பவை தவறான கருத்துக்கள் என்று வாதாடுகிறவர்கள்.

முதல் தரப்பினரின் அபிப்ராயத்துக்கு உதாரணமாக ஒரு கடிதம் பார்ப்போம். அண்ணாநகர் ஜி. கோவிந்தராஜன் மற்றும் ஆறு பேர் கையெழுத்திட்டு இவ்வாறு எழுதுகிறார்கள்:

'நாடு இன்றுள்ள நிலையில் இப்படிப்பட்ட குறுகிய நோக்குள்ள செயல்கள் வெளியிடப்பட வேண்டுமா? நாடு முழுவதும் பரவியுள்ள இந்து மதமும் கோயில்களும் எதிர்காலத்திலே எவ்வளவு தூரம் சுருங்கி

முடிவுரை எழுதிய முத்துப் பந்தல்



எனது
காதல் கதையின்
முன்னுரைக்கு
முடிவுரை எழுதிய
முத்துப் பந்தலே!
சமீபத்தில் ஒருநாள்
உன் தோழி சொன்னாள்:
அடிக்கடி நீ என்னை
நினைத்துக் கொள்வாயாம்,
நிஜ நாத்திகன்
கடவுளை நினைப்பது போல!

ஆறாக வந்த என்னை
அருவியாக்கிய
அழகு மலைமுகடே,
உனக்காகவே
காத்திருக்கிறது
என் மரண சாசனம்.

— அநுராதா கட்டபொம்மன்

விடுமோ என்று அஞ்சக் கூடிய நிலையில் வட நாட்டில் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சமயத்தில் இந்து மதத்தில் குறுகிய மனம் படைத்தவர்களின் செயல்களை விளம்பரப்படுத்தி நமது மதத்தை நாமே வீழ்ச்சி அடையச் செய்ய வேண்டுமா? பத்திரிகைக்குச் செய்தி வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட செய்திகளையா வெளியிடுவது?''

இவ்வாறு எழுதிய அன்பர்களின் நல்லெண்ணத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறதேயொழிய வாதத்தை ஏற்க இயலவில்லை. இதே வாதத்தை வேறு பல துறைகளுக்கும் விஸ்தரித்துக்கொண்டுபோகலாம்: ''யாரோ சில பண முதலைகள் தவறு செய்கிறார்கள் என்பதற்காகத் தொழில் வர்த்தகத் துறையினர் அனைவர் மீதும் வெறுப்பு உண்டாகும்படி வி.பி. சிங்கின் உரையை ஐந்து பக்க அளவில் வெளியிட வேண்டுமா?' என்று கேட்கலாம். 'மீரட்டில் நடக்கிற ஒரு கலவரத்தைப் பற்றிப் பயங்கரமான புகைப் படங்களுடன் பத்திப் பத்தியாக நாளிதழ்கள் செய்திகள் வெளியிடும்போது நாட்டின் வேறு பல இடங்களிலும் இனத் துவேஷத்துக்கும்வகுப்புக்கலவரங்களுக்கும்வித்திட்டதாகாதா?' என்று வினவலாம். இப்படியே பல்வேறு செய்திகள் குறித்தும் கேட்டுக் கொண்டே பேசலாம். உண்மையில் பத்திரிகைத் தணிக்கை ஆதரவாளர்கள் எழுப்புகிற கேள்விகள் இவைதாம்! இவை, பத்திரிகை தர்மத்துக்கும், பத்திரிகை சுதந்திரத்துக்கும் முற்றிலும் எதிரானவை. ஜனநாயக விரோதமானவை. ஏற்கத் தகாதவை.

மேலும் வடகலை தென்கலைப் பூசல் எங்கோ ஒரு கிராமத்தில் நடக்கும் ஒரே ஒரு நிகழ்ச்சி மட்டுமல்ல; வேறு பல ஊர்களிலும் பலரது மனங்களிலும் இன்னமும் இருக்கிற உணர்வுதான் என்பதை எமக்கு வந்துள்ள ஏராளமான கடிதங்களே நிரூபிக்கின்றன.

எனவே, இத்தகைய கட்டுரைகள் அல்லது செய்திகளின் நோக்கம் என்ன என்பதைத் தான் பார்க்க வேண்டும். மீரட் கலவரங்களைப் பற்றிச் சவங்களின் புகைப்படங்களுடன் பத்தி பத்தியாகச் செய்தி வெளியிடுவது வகுப்புக் கலவரத்தை அல்லது இனத் துவேஷத்தை வளர்ப்பதற்கல்ல. 'இப்படி நடந்திருக்கிறதே? இப்படி நாம் நடக்க விடலாமா? நாம் நாகரிக வளர்ச்சி பெற வேண்டாமா?' என்று மக்களின் தார்மீக உணர்வுகளைத் தூண்டி, மனசாட்சியைத் தட்டி எழுப்புவதற்காகவே பிரசுரிக்கப்படுகின்றன. அதேபோன்ற உயர்ந்த நோக்கில்தான், 'எப்போது ஓயும் நாமச் சண்டை?' என்ற கட்டுரையும் எழுதப்பட்டிருக்கிறது. அந்தக் கிராமத்தில் நிலவும் சண்டையைச் சுட்டிக் காட்டும்போதே, 'இம்மாதிரி வேற்றுமைகளை நாம் வளர்த்துக் கொள்ளக் கூடாது; ஒற்றுமையையும் அமைதியையுமே நோக்கமாகக் கொள்ள வேண்டும்' என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. நமது நிருபர்கள் செய்தி சேகரித்ததுடன் நில்லாமல், ஒற்றுமையை நிலைநாட்டவும் முயன்றிருக்கிறார்கள். அவர்கள் தோல்வி கண்ட இடத்தில், 'இம்மாதிரி கட்டுரைகளை ஏன் பிரசுரிக்கிறீர்கள்?' என்று குறை கூறி நமக்குக் கடிதம் எழுதுகிறவர்கள், சென்று வெற்றி பெற்றால் அவர்களை மனப்பூர்வமாக வாழ்த்தலாம்.

யக்ஞவராஹ தாத்தாச்சாரியாரிடம் கருத்து மாறுபாடு கொண்டு எழுதியுள்ளவர்களை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஏனென்றால் சரித்திர ஆராய்ச்சி என்று புகும்போது ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் தோன்றுவது இயல்பு. எது உண்மை என்று அவரவர் மனத்துக்குப் படுகிறதோ அதைத்தான் ஏற்க முடியும். ஆனால் இந்தக் கருத்து மாறுபாடு, யக்ஞவராக தாத்தாச்சாரியார் மீது ஆத்திரமாக மாறி, அவரைத் தனிப்பட்ட முறையில் சிலர் இழிவாகப் பேசுவதையும் எழுதுவதையும் காண மனம் வருந்துகிறது. அதை ஒதுக்கிவிட்டு மாறுபட்ட கருத்துக்களை மட்டும் பார்ப்போம் — அடுத்த இதழில்.

— ஆசிரியர்



தொட்டால் கருக்கக் காரணம் வேறு

திருத்துறைப்பூண்டி, ஜெ. பிஸ்மி.

* ஆட்சியில் இருப்போர் தொட்டால் கருங்கியாக இருக்கக் காரணம், தங்களைக் குறைகூறி விமர்சிப்பவர்களை விரோதிகளாக இவர்கள் கருதுவதுதான் — என்று நீங்கள் தலையங்கத்தில் கூறியது தவறு. 'நம் உண்மையான ரூபத்தை இப்படி வெட்டவெளிச்சமாக்கி இளிச்சவாய் மக்களை உஷாராக்கப்படுத்துகிறார்களே...' என்ற ஆத்திர உணர்வின் பிரதிபலிப்புத்தான் இந்தத் திமர்ச் சட்டம்.

விருத்தாசலம், வி. நாகராஜன்.

* சினிமாவில் நடித்து சினிமாவையே பிரசாரப் பொருளாகக் கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள், இன்று சினிமாத் துறைக்கே எதிராக ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறார்களென்றால், அதைவிட முரண்பாடு எதுவும் கிடையாது. தலையங்கம் நல்ல சாடல்!

ஐஸ், நைஸ்!

ஸ்ரீரங்கம், ஜி. பத்மா.

* கோன் ஐஸ்—குச்சி ஐஸ் கார்ட்டூன் வெரி நைஸ். பிறிட்டுக் கொண்டு வந்த சிரிப்பை அடக்க முடியாமல் தவித்தேன்!

சபாஷ்!

கோவை — 43, உமார்த்தி.

* திருச்சி நகரைச் சுருட்டித் தம் காமிராவில் அடைத்து அட்டையில் விடுவித்த போட்டோகிராபருக்குப் பாராட்டுக்கள்.

சேற்றிலும் செந்தாமரை!

கோவை — 44, கே. கோபிநாத்.

* வி. பி. சிங்கின் உரை அவரது நாட்டுப் பற்றை நன்கு எடுத்துக் காட்டியது! இன்றைய நிலையில், ஊழல்கள் நிறைந்த அரசியல்வாதிகளுக்கிடையில், ஓர் உண்மையான நேர்மையான அரசியல்வாதி வி. பி. சிங் இருக்கிறார் என்று நினைக்கிற போது ஆனந்தக் கண்ணீர்தான் சார் வருகிறது!

கும்பகோணம் — 1, வி. வி. ஞானசேகரன்.

* நெஞ்சில் உரத்துடனும், நேர்மைத் திறத்துடனும் இருந்தன வி. பி. சிங்கின் கருத்துக்கள். மனசாட்சியின் எதிரொலியாய் தேசத்தின் நலனையே பிரதானமாகக் கொண்டு ஒலித்த அந்தக் குரல் நாடெங்கும் எதிரொலிக்க வேண்டும்!'' கறுப்புப் பண முதலைகளிடமிருந்து — 'சுதந்திர இந்தியா' பொருளாதார விடுதலை பெற வேண்டும்!

நெஞ்சை நிறைந்தது!

மதுரை — 1, பி. எஸ். பரமசிவம்.

* கல்கிதாசன் எழுதிய 'நிழலின் அருமை' நீண்ட நாட்களுக்குப் பிறகு வெளியான ஒரு நல்ல குடும்பக் கதை.

சுளையடி கதை!

கொரட்டூர், 'ஸ்ரீமருடப்ரியன்'

* இன்பத்தில் இணைந்து — துன்பத்தில் புறக்கணிக்கும் கணவன்களுக்குச் சரியான சுளையடி தந்தது. 'தென்றலுக்குள் ஒரு தீப்பிழம்பு' சிறுகதை.

ஆச்சரியம்தான்!

கோடிக்கரை, எஸ். எம். வாசு.

* இந்தியாவிலேயே சிறப்பான காவல்துறை என்ற பெயர்பெற்ற தமிழ்நாடு காவல்துறையினரால் (துறையூரில்) நகை திருடிய குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாதது ஆச்சரியமாகவே இருக்கிறது.

விந்தையிலும் விந்தை

திருச்சி — 2, ஆங்கரை ஆனந்.

* பொது மக்கள் பிரதிநிதியாகச் சென்ற கல்கியைத் திருச்சி மாவட்டக் கலெக்டர் சந்திக்க மறுத்தது விந்தையிலும் விந்தை.

மேலப்பாலையூர், கமாலி.

* 24.5.87 இதழ் தலையங்கம் தொடர்பாக... பர்னாலாவின் சில அமைச்சர்கள் வெளிப்படையாகவே போலீஸ் நிர்வாகத்தில் தலையிட்டுச் சில தீவிரவாதிகளை விடுதலை செய்துள்ளனர் என்றும் அதனால் போலீஸ் சரியாகச் செயல்படமுடியவில்லையென்றும் ரிபைரோ கமத்தியுள்ள குற்றச்சாட்டு பற்றித் தலையங்கம் மௌனம் சாதிக்கிறது. மேலும், லோங்கோவால்—ராஜீவ் உடன்படிக்கையில் அகாலிகளுக்குப் பங்கு உள்ளது என்பதை இருட்டடிப்புச் செய்துள்ளீர்கள்.

திருச்சி — 18, எஸ். புஷ்பவனம். செயலாளர். தமிழ்நாடு உபயோகிப்பாளர் பாதுகாப்புக் குழு.

* தமிழ்நாடு உபயோகிப்பாளர் பாதுகாப்புக் குழு பற்றிய கட்டுரையில் 'எங்கள் சாதனைகள்' என்று குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லாவற்றுக்குமே பொது மக்களின் ஆதரவு பெருமளவில் இருந்ததால்தான் நடந்தது. அவைகளைப் 'பொது மக்களின் கருத்திற்கு வெற்றி'' என்று குறிப்பிடுவதே சரி. 1974 லிருந்தே இக்குழுவைத் திறமையாக வழி நடத்தி, சரியான ஆலோசனைகளைத் தந்து வரும் குழுத்தலைவர் மா. மீனாட்சிசுந்தரம் அவர்களின் பங்கும் மிகப் பெரிது. அதிவேக ரயில் உபரிக் கட்டணத்தைக் குறைக்க வர்த்தகக் கழகத்தின் தலைவர் கே. மாயாண்டி பெருமளவில் உதவினர்.

ஏ. ஸி. தியேட்டரில் ஏ. ஸி. இன்னமும் சில தியேட்டர்களில் போடப்படுவதில்லை. ஆட்டோ ரிக்ஷாக்களில் 50 சதவிகிதத்தினர் இன்னமும் மீட்டர் கட்டணம்வாங்க மறுக்கிறார்கள். இந்தப்பிரச்னைகளைப் புது கலெக்டர் ஸ்ரீராம், டி. ஐ. ஜி., குமாரசாமி ஆகியோர் ஒத்துழைப்புடன் கூடிய விரைவில் தீர்க்க முடியும் என நம்புகிறோம்.

திருச்சி — 16, ஏ. கிரி.

* திருச்சி உபயோகிப்பாளர் பாதுகாப்புக் குழு பற்றிய கட்டுரை பயனுள்ளதாக இருந்தது. சமீபத்தில் இக்குழுவினர் எடை அளவுகளில் வியாபாரிகள் செய்யும் தில்லுமுல்லுகளைத் திடீர் சோதனையிட்டுக் கண்டுபிடித்த செய்தியையும் போட்டிருக்கலாம்.

முக்கியமான ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். உபயோகிப்பாளர் பாதுகாப்புக் குழு — திருச்சி விலாசத்தில் பின்கோடு 620 018 என்று இருக்க வேண்டும். இல்லையென்றால் தபால்கள் சைதாப்பேட்டை சென்றுவிடும்!





உங்கள் ஆதரவும் நம்பிக்கையுமே எங்களை முன்னேற ஊக்குவிக்கிறது!

ஸ்ரீராம் குரூப் நிறுவனங்கள் தொடர்ந்து விரைவாக முன்னேறி வருவது அனைவரும் அறிந்ததே. தேர்ச்சிமிக்க தொழில்முறை நிர்வாகிகள் என்ற முறையில் எங்கள் வளர்ச்சி பற்றி உங்களுக்குத் தொடர்ந்து உறுதியளித்து வரக் கடமைப் பட்டிருக்கிறோம்.

மேலும் உங்கள் கவனத்திற்கு!

- டிபாசிட்தாரர்களின் மொத்த எண்ணிக்கை 26,000க்கு மேல். மாதாமாதம் ரூ. 70 லட்சத்துக்கும் கூடுதலான அளவில் டிபாசிட்டுகள் அதிகரித்து வருகின்றன.
- தவணை முறைத்திட்டத்தில் மோட்டார் வாகனங்களுக்கு கடனுதவியாக வழங்கப்படும் தொகை மாதத்திற்கு ரூ. 1 கோடிக்கும் அதிகமாகிக் கொண்டுள்ளது.
- பம்பாய், புதுடில்லி, கல்கத்தா, அகமதாபாத், புனே ஆகிய இடங்களில் புதிதாகத் தொடங்கப் பட்டுள்ள கிளைகள் வலிமையோடு வளர்ச்சி பெற்று வருகின்றன.
- சீட்டு குரூப்களில் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 70,000. ஒவ்வொரு மாதமும் 1700 உறுப்பினர்களுக்கு ரூ. 2 கோடியே 75 லட்சம் வரை பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது.
- ஸ்ரீராம் சீட்டு நிதியில் கடந்த 15 ஆண்டுகளில் ரூ. 100 கோடிக்கும் மேல் பட்டுவாடா செய்யப்பட்டு, வசூலும் செய்யப்பட்டுள்ளது! இது எங்கள் நிர்வாகத் திறமைக்கு ஒரு தக்க சான்று!

உங்கள் நம்பிக்கைக்கு (டெபாசிட்டுகளுக்கு) நாங்கள் தரும் பாதுகாப்பு:

- அரசுடைமை வங்கிகளில் பிக்ஸட் டிபாசிட்களாகப் போடப்பட்டுள்ள தொகை 1.6.87 தேதிப்படி ரூ. 3 கோடியே 76 லட்சம்.
- பெரும்பாலும் வர்த்தக ரீதியிலான போக்குவரத்து வாகனங்களுக்கே தவணைமுறைத்திட்ட கடனுதவி வழங்கப்படுகிறது. இப்படி வழங்கும்போது, கடன் தொகையின் முழுப் பாதுகாப்புக்கான உத்தரவாதம் பெறப்படுவதோடு, குறித்த காலத்தில் தவணைத் தொகைகளை வசூல் செய்வதிலும் தீவிர கவனம் மேற்கொள்வதால் லாபம் கூடுகிறது!
- இருபது வருட கால அனுபவ முதிர்ச்சியின் பயனாக, வசூல் பணி மிகத்திறமையாக நடத்தப் படுகிறது.
- முதிர்ந்த அனுபவம் பெற்ற பாங்கர்கள், சார்ட்டர்டு அக்கவுண்டன்ட்கள், தேர்ச்சி மிக்க தொழில் துறை நிபுணர்கள் ஆகியோரின் பொறுப்பில் ஸ்ரீராம் குரூப் நிர்வாகம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் குரூப் கம்பெனிகள்

தலைமை நிர்வாக அலுவலகம்:
''ஸ்ரீராம் ஹவுஸ்''
10, கஸ்தூரி எஸ்டேட்,
சென்னை 600 086.

ஸ்ரீராம் சேமிப்பில் சேருங்கள், சீரும் சிறப்புமாய் வாழுங்கள்.

ADWAVE/SGC/3338A

நிழல் யுத்தம்

10

இந்தத் தேசத்து இளைஞன் என்ன பாவம் செய்தான் என்று தெரியவில்லை. பெண் ஸ்நேகிதம் அவனுக்குக் கடுமையாய் மறுக்கப்பட்டு விடக் காரணம் புரியவில்லை.

அம்மாவின் முலையும், மடியும், இடுப்பும், மூச்சுக் கதகதப்பும் கிடைத்து விலகிய பின் அதன் தொடர்ச்சியாய் எட்டு வயசு வரை அடுத்த வீட்டுப் பெண் தோழமை கிடைக்கிறது. ஒன்பது வயசுப் பெண் விலகி விடுகிறாள். பத்து வயசில் முற்றாகப் பிரிந்து விடுகிறாள். பன்னிரண்டு பதின்மூன்று வயசில் அவள் முக தரிசனமே அபூர்வம். பதினெட்டு வயசில் அதே பெண் பெயர் சொல்லிக் கூப்பிட்டால் கூட முகம் சுளிக்கிறாள்.

பிறகு பாலைவன வெம்மை... கடுமையான உறவுப் புழுக்கம். இருபத்தேழு வயசில் திருமணம் பேச ஆரம்பித்து, இருபத்தி எட்டில், ஒன்பதில், முப்பதில் திருமணம் நடக்கும் போது முப்பத்திரண்டு வருடங்களுக்குப் பிறகு பெண் ஸ்பரிசம் கிடைக்கிறது. நியாயமான, நல்ல குணமுடைய பையனுக்கு நீதியான வழியில் பெண் ஸ்பரிசம் கிடைக்க இருபத்திரண்டு வருடங்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

இந்த இடைவெளிக்குப் பிறகு ஜில்லென்று பனிக்காற்றாய்ப் பெண் உறவு தாக்குகிற போது நெஞ்சும் உடம்பும் புத்தியும் உறைந்து போகின்றன.

முரளி உறைந்து கிடந்தான்.

"டோ எ டியர் எ ஃபீமேல் டியர்
ரே எ ட்ராப் ஆஃப் கோல்டன் ஸன்"

பியானோ அடிப்படைச் சங்கதிகளைக் கொஞ்சிக் கொஞ்சிப் பாடிக் கொண்டிருந்தது.

"இது சினிமா பாட்டா?"

"இல்லை, ஒரு சினிமாவில் இது வந்தது. இதுதான் அடிப்படை. சரிகமபதனிச மாதிரி டோ-ரே மீ மியூசிக் ஸ்வரம்."

"ஏன் பியானோ கத்துண்டேள்?"

"ஏன் கத்துக்கக் கூடாது?"

"அதுக்கில்லை..."

"உங்க கேள்வி புரியறது. பியானோ கத்துக்க எது தூண்டித்துன்னு கேட்கிறேள்?"

"யெஸ்."

"என் சூழ்நிலை. அப்பாகிட்டே அப்ப இருந்த இசைத்தட்டுகள். அவர் பாடின பாட்டுக்கள், என் பள்ளிக்கூடத்துக் கத்தோலிக்க கன்யாஸ்திரீகள். நான் எதை அதிகம் கேட்டேனோ அதையே கத்துக்கத் தூண்டித்து. கத்துக்க ஆரம்பிச்சு பீதோவன், பார்க், மொஸார்ட் கேட்க ஆரம்பிச்சேன்."

"யார் இவங்க..."

"இங்கே சங்கீத மும்மூர்த்திகள்னு சொல்றதில்லையா? அந்த மாதிரி வெஸ்டர்ன் க்ளாஸிக்ல பெரிய ஆட்கள்."

"மூணு பேரா அங்கேயும்?"


"எத்தனையோ பேர். இவங்க முக்கியமான கம்போஸர்ஸ்."



பாலகுமாரன்

''எனக்குப் புரியலேயே.''
''கம்போஸர்னு...''
''இல்லே. கம்போஸர்ங்கிறது புரியறது. இந்த இங்கிலீஷ் சங்கீதமே புரியலே.''
''பழக்கம்தான்.''
''நான் வாசிக்கலாமா?''
''வொய் நாட்?''
டொய்ங்... முரளி ஒரு விரலால் ஓரக் கட்டையை அழுத்திவிட்டுத் தலைநிமிர்ந்தான். ''பிசிறு தட்டறதே சப்தம்.''
''தொட்ட விதம் தப்பு....''
''ஒரு சந்தேகம்.''
''ம்ம்?''
''கமகம் முடியுமா?''
''புரியலே.''
''ஒரு குழைவு, சரிமாகரி... மாஆஆன்னு சொல்றச்சே ஒரு நடுக்கம், அசைவு வருமே.. அது வருமா பியானோலை...?''
''இங்கிலீஷ்ல 'ழ' வராது... தமிழ்ல 'ஃப்' கிடையாது.''
''புரியலேயே.''

''கமகம், குழைவு அவர்கள் சங்கீதத்துல வேறே மாதிரி. பிரளல் உண்டு. வெட்டி, சிதறி, ஒண்ணைக் கோத்து ஒவ்வொரு தடவையும் ஒவ்வொருமாலையா அடுக்கடுக்கா நகரும். அவர்கள் சங்கீதம் டான்ஸோட சம்பந்தப்பட்டது. கால் அசைவு இடுப்பசைவு உண்டு. ஆடு பாம்பேவிளையாடு பாம்பேவாசிக்கறது இல்லே, இலைச் சருகு நகருமே... பார்த்திருக்கேளா... திடீர்னு சுழல்காத்துல ரோட்டு மணல் பறக்குமே அதுமாதிரி சரசரன்னு நகர்ந்து உச்சம் போகும். அடங்கும்.
''இதுல தியாகையர் கிருதி வாசிக்கவே முடியாதா?''
''முடியும். வீணை மாதிரி இல்லேயேன்னு கேட்கறது சரியில்லே. கொஞ்சம் வெட்டின மாதிரி வரும்.''
''எத்தனை நாளா பியானோ கத்துக்கறேள்?''
''ஏழு வயசுல ஆரம்பிச்சேன்!''
''அடேயப்பா.''
''இப்ப எய்த் க்ரேட்''





சௌதி அரேபிய மன்னர் ஃபஹ்த் அண்மையில் மோன்டி கார்லோவில் உள்ள ஒரு சூதாட்ட விடுதியில் ஒரு முறை சூதாடித் தோற்ற தொகை எவ்வளவு தெரியுமா? 140 லட்சம் டாலர்கள்! ஆனால் ஒரு சில 'செண்ட்'களை இழந்தவரைப் போல மன்னர் வெளியேறினாராம்! தம் உல்லாசத் தோணிக்கு 600 லட்சம் டாலரும், ஆண்டில் ஒரு மாதமே தங்கும் லண்டன் விடுமுறை மாளிகையை அழகுபடுத்த 400 லட்சம் டாலரும், 7300 லட்சம் டாலர் செலவில் புது அரண்மனையும் கட்டிவரும் மன்னருக்குச் சூதாட்டத்தில் இழந்தது மிகச் சிறு தொகைதான்!

ஆதாரம்: சொசைட்டி;
தகவல்: சீதாபஞ்சு.

''அப்படின்னா...''

''அப்படின்னா...'' கொஞ்ச நேரம் கட்டை விரல் நகம் கடித்துக் கீழே பார்த்தாள்.

''புல்லாங்குழல் ரமணி தெரியுமா?''

''தெரியும்.''

''அவர் டென்த் க்ரேட்.''

''அடேங்கப்பா... அப்போ நீங்க எய்த் க்ரேட். தனியாக் கச்சேரி பண்ணுவேளா?''

''பண்ணலாம்.''

''பண்ணியிருக்கேளா?''

''ஒரே ஒரு தடவை.''

''ஏன் ஒரே ஒரு தடவை?''

''இதைக் கேட்க ஆள் எங்கே இருக்கா?''

நான் கேட்பேன் என்று சொல்லத் தோன்றிற்று. வெட்கம் வந்தது.

அவன் எழுந்தான். பியானோவைச் சுற்றி வந்தான். மறுபடியும் விரல் வைத்து 'டொய்ங்' என்று சப்தமெழுப்பினான். அவள் புன்னகை செய்தாள்.

''மூடிடலாம்.''

''ஏன்?''

''இப்படி ஏதாவது தொட்டு அபஸ்வரமா வரும். பியானோ பார்த்ததும் தொடணும்னு ஆசை வருது. ஆனால் வேலை தெரியாத தொட்டா...''

மறுபடியும் சிரித்தாள். பியானோவை மூடினாள். வீட்டைச் சுற்றிக் காண்பித்தாள்.

அண்மையில் நடந்து வந்தாள். கண்களை நோக்கிப் பேசினாள். அவன் தோள் பட்டை சட்டையில் ஒட்டியிருந்த தலைமுடித்துணுக்கை விரலால் சுண்டி விட்டாள்.

''உங்களுக்கு என்ன பிடிக்கும்?'' என்று கேட்டாள்.

''நான் படிப்பு தவிர எதுவுமே சரியாகக் கத்துக்கலே, மிஸ் லலிதா! கத்துக்க வசதியில்லே. ஆனால் எல்லாம் தெரிஞ்சுக்கணும்னு ஆர்வம் உண்டு. நீங்க வாசிக்கிற மாதிரி பியானோ வாசிக்கணும்னு இந்த க்ஷணம் தோன்றுகிறது. பியானோவுக்குப் பக்கவாத்தியம் என்ன மிருதங்கமா...? டிரம்ஸா? அப்படி ஏதாவது கத்துக்கலாம்னு தோன்றுகிறது. இனிமேல் இதெல்லாம் கத்துக்க முடியுமா? எட்டு வயசுல ஆரம்பிச்சிருக்க வேண்டியது இருபத்தியெட்டுல முடியுமான்னு மலைப்பாக இருக்கு!''

''ரசிக்கக் கத்துண்டா போதும். இது மட்டம் இது அபத்தம்னு இழிவா எதையும் பேசாமல் அனுபவிக்கத் தெரிஞ்சாப் போதும்.''

''ஒரு கேள்வி.''

''எங்கிட்டேயா... கேளுங்கோ.''

''என்னைப் புடிச்சிருக்கா உங்களுக்கு?''

''புடிச்சிருக்கு. ஏன்?''

''உங்களோட கம்பேர் பண்றச்சே எனக்கு எந்த விஷயமும் தெரியலையே... எப்படி என்னை...?''

''என் மாதிரிப் பியானோ வாசிச்சால்தான் புடிக்கணுமா எனக்கு. அது அவசியமில்லே. நிதானமான ஆள் போறும் எந்தப் பெண்ணுக்கும். என் கூடப் பழகி உங்களுக்குப் பியானோ வரும். உங்க கூடப் பழகி எனக்கு ஏதாவது வரும். புரிஞ்சு பேசணும்னு முனைப்பு இருந்தால் போதும்.''

''அப்புறம்...?''

''நீங்கள் கேட்கவேயில்லையே?''

''என்ன...?''

''எனக்கு உங்களைப் புடிச்சிருக்கான்னு.''

''புரியறதே...'' மறுபடியும் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பு, அந்தப் பார்வை மயக்கிற்று. பயமுறுத்திற்று. ரொம்ப உசரமோ என்ற கிலி ஏற்பட்டது.

''நான் கிளம்பட்டுமா?''

''சரி.''

''மறுபடியும் எப்போ?''

''எப்ப வேணும்னாலும் வாங்கோ.''

அம்மா கீழே காத்திருந்தாள். தரையில் உட்கார்ந்து கம்பள நுனிகளைத் தடவியபடி யோசித்துக் கொண்டிருந்தாள்.

''நாற்பது பவுன் நகை இருக்கு. இந்த வீடு எங்கள் ரெண்டு பேர் பேர்லேயும் இருக்கு. வேறே என்ன செய்யணும்?''

''வெள்ளி பஞ்ச பாத்திர உத்திரணி.''

''ஆஹா...''

''விரலுக்கு மோதிரம்!''

''ஆஹா!''

''இவா ஒன்றுவிட்ட தங்கைகள் வரலாம். அவாளுக்குப் புடைவை துணி மணி...''

''ஆஹா...''

அம்மா கேட்டதனைத்தும் அல்பமாய்ப் பட்டது முரளிக்கு. கேட்கத் தெரியவில்லை. கேட்டுப் பழக்கமில்லை. விரட்டியதில்லை. விரல்விட்டு எவர் கண்களையும் நோண்டியதில்லை. இப்படித்தான் நடக்கணும்னு விதி என்று அடங்கிப் போனவளுக்கு வேறு எந்த சாமர்த்தியமும் இல்லை.

அம்மா கிளம்பும் போது தயங்கித் தயங்கி, ''சமைப்பியோடி...?'' என்று கேட்டாள்.

• அவர் தம் செகரெட்டரிக்குத் தினம் ஐம் வைப்பார் என்றால் அவர் ஒப்புக் கொள்ள மாட்டார். காரணம் செகரெட்டரி வாரம் மூன்று நாள்தான் ஆபீஸ் வருவார்!



''பேஷா... பத்து பேருக்கு...'' என்று அவர் பதில் சொன்னார்.

. ஆனால் அந்தச் சமையல் வேறு மாதிரி யிருந்தது. ப்ரட் சாண்ட்விச் என்று முள்ளங்கி இலையை ரொட்டிக்கு நடுவே புளிப்பும், தித்திப்பும், மிளகு காரமுமாய் முக் கோணமாய் நறுக்கி வைத்த சமையல்.....

வெஜிடபிள் சாலட், ஆலுமட்டர், சப்பாத் திக்குக் கறித்துண்டு மாதிரி ஜவ்வாய் ஏதோ ஒரு பொருள் குருமாவில் மிதந்தது. பியானோ, சத்தியமாய் அது வெஜிடேரியன் என்ற பிறகுதான் சாப்பிட்டான். வயிறு நிறைந்து விட்டது. ஆனால் சாப்பிட்ட மாதிரியேயில்லை. சாப்பிட்ட சந்தோஷம் இல்லை. சர்ரென்று ரசம் குடிக்கிற சந்தோஷம் குறைந்தது. புறங்கை நக்க முடியாத சாப்பாடு. நெஞ்சில் ரொட்டித் துண்டு நின்றதே தவிர வயிறு கனமாகவில்லை. பல்லிடுக்கில் புளிப்பும், துவர்ப்பும் தெரிந்ததே தவிர் கார உணக்கை வரவில்லை,

ஒரு ஞாயிறு பகல் சாப்பிட்டு விட்டுச் சற்று நேரம் செஸ் ஆடி, ஊர்க் கதை பேசிக் கிளம்புகிற போது பெண்ணையும் இவனையும் தனியே விட்டுச் சங்கரன் தூங்கப் போய் விட்டார். அவனுக்குச் சின்ன பாட்டில் ஓடி கொலோன் லலிதா பரிசளித்தான். வாங்கு கிற போது உறைத்தது.

'மடையன் ஒரு முழம் பூ கூட வாங்கா மல் வந்திருக்கிறேன்.

பாட்டில் நுனியில் சின்னப் பந்து இருந் தது. அவளைத் திரும்பச் சொல்லி அந்தப் பந்தை அவன் காலரில் உருட்டினாள். ஹால் முழுக்க மணத்தது.

ஓடிகொலோன் வாசனை கிளர்ச்சி கொடுத் தது.

இவளைத் தொடலாமா என்று குறுகுறுப்பு எழுந்தது.

ஓடிகொலோன் கொடுத்த கைகளைப் பற்றிக் கொண்டான். நன்றி சொன்னான்.

அவள் வெட்கப்படவில்லை.

சிரித்தாள்.

நிதானம். அசாத்திய நிதானம். நீ தொடு வாய் என்று எனக்குத் தெரியும் என்று கண் ணால் பேசுகிற நிதானம். அப்படித் தொட் டால் என்ன செய்ய வேண்டும் என்பதறிந்த நிதானம்.

எதிரி வந்ததும் இரு என்று கைகாட்டி, வில்லைத்து நாண் ஏற்றி, ஒருமுறை கண்டிப் பார்த்து அம்பு தொடுத்து, ஒரே அம்பில் மார்பு பிளக்கிற நிதானம்.

பிடித்த கைகளை விடுவிக்க முயற்சி செய் யாது சிரிப்பவளிடம் என்ன கேட்பது?

வெட்கப்பட்டால் என்ன வெட்கம் என்று கேட்கலாம். ஏன் வெட்கம் என்று கொஞ்ச லாம்.

''என்னைப் பிடிச்சிருக்கா?'' என்று மறுபடியும் முரளி கேட்டான்.

''ம்ம்...'' என்று லலிதா பதில் சொன் னாள்!

(தொடரும்)

விடுமுறை மலர் – 1987

வாசகர் கருத்து



•
கல்கி விடுமுறைமலர் கண்டேன். உண்மையாகவே அற்புதம்தான்! முத்து முத்தான கதைகள், சத்து மிகுந்த கட்டுரைகள், மலர்க்கொத்து போன்ற கவி தைகள், அத்தனை அருமையான சிரிப்பு வெடிகள்! நிறைவைத் தந்தது!

சென்னை — 10. 'திலகா'

•
கோடை விடுமுறை மலர் கண்டேன்! வாசிக்க மனத்திற்கு இதமளித்தது! சொர்க்கார் — ஹெரான் ராமசாமி போன்ற கலைநிபுணர்களின் பேட்டி ஆச்சரி யத்தை அளித்தது!

மாலத்தீவின் இயற்கையழகு எழிலாக இருந்தது! திரைச் செய்திகள் சுருக்கமாக இருந்த போதிலும் நறுக்கென்று இருந்தன. நறுகவின் பொன்னம்பலம் திருவரங்கம் ஓவியங்கள் உயர்வைத் தந்தன!

சாத்தூர், எம். செல்லையா.

•
பத்து ரூபாய்க்கு இவ்வளவு விஷயங்கள் அடங் கிய புத்தகமா? விடுமுறையை இனிமையாகக் கழிப்ப தற்கு ஒரு மலரை அளித்த கல்கியே உனக்கு இதய பூர்வமான வாழ்த்துக்கள்! இதேபோன்ற மலருக்கு இன்னும் ஒரு வருடம் காத்திருக்க வேண்டுமே!

ராஜபாளையம், கே. கே. ராம்ராஜ்.

•
படித்துப் பத்திரப்படுத்தி வைக்கும்படி செய்து விட்டீர்கள் சார், மலரை. மலருக்கு மகுடமாய்த் திகழ்ந்த புகைப்படங்கள் ஏராளமாய் இருந்தாலும், ''பரமாச் சார்யாள், ஆசார்யாள், சங்கரானந்தேந்திரர்'' ஆகிய மூவரின் முழுப்பக்கப் படங்கள்தான் பக்தி மணம் கமழச் செய்துவிட்டன. ஆதி காலத்தில் ஆனந்த விகட னில் அமரர் கல்கி அவர்கள் எழுதிய ''இலங்கைப் பிரயாணம்'' தொடர் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி யைப் படங்களுடன் வெளியிட்டு எங்களுக்கு அந்தக் காலத்தில் இலங்கை எப்படி இருந்தது என்பதைத் தெளிவாகப் புரிய வைத்து, (இப்போது இலங்கையை நினைத்துக் கண்ணீர்தான் வருகிறது) சிந்திக்கும்படி செய்து விட்டீர்கள்!

கும்பகோணம் — 1. திருமதி பிரசன்னா ராஜன்.



அமரர் கல்கி

நினைவுச் சிறுகதைப் போட்டி – 1987

முதல் பரிசு	ரூ	1500
இரண்டாவது பரிசு	ரூ	750
மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ 375 வீதம்)	ரூ	750

ஆக மொத்தம் ரூ 3000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் வேறு எந்த உருவிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதி மொழி தர வேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசி தேதி: ஜூன் 15

- உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 2 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை-600 034.

நியூட்ரமுல் சக்தி







க்ரீம் வளம்கொழிக்கும் அமுல் பால். நலம் தரும் மால்ட். இங்கவைமிக்க கோக்கோ. கும்மாகும்! இவற்றின் நற்பயனைத் தான் வலியூட்டுகிறது நியூட்ரமுல். எதுவும் மிஞ்சமுடியாத நயமிலிலே கிடைக்கிறது !

	1000 gms.	500 gms.	Refil.
நியூட்ரமுல்	37.21	19.29	–
மால்டோவா	43.75	24.65	22.79
பூஸ்ட்	–	24.89	23.06
போர்ன்விடா	47.48	24.67	22.81

Prices as on 1st January, 1987. Local taxes extra.

அமுல் வழங்கும்

நியூட்ரமுல்

விளங்குங்கள் நியூட்ரமுல் வஸ்தாத்தாக

விநியோகம் விற்பனை:
குஜராத் கோ-ஆபரேட்டிவ் மில்க்
மார்க்கெட்டிங் ஃபெட. லிட்.,
ஆனந்த் 388 001.

daCunha/GCM/135/86 TAM

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 48

நீர்ச் சுழலும் விழிச் சுழலும்

கடவுள் படைத்த ஆதி மனிதன் ஒரு மலையின் சாரலில் வசித்தான். மழைக்கும் காற்றுக்கும் அவனுக்கு மலைக் குகை அடைக்கலம் தந்தது. வன விருட்சங்கள் அவனுக்குத் தேவையான கனி வர்க்கங்களை உணவாக அளித்தன. காட்டு மிருகங்கள் அவனைக் கண்டு நடுநடுங்கின. வானத்துப் பறவைகளைப் போல் அவன் சுயேச்சையாக ஒரு குறைவும் இல்லாமல் வாழ்ந்து வந்தான். ஆயினும் அவனுடைய உள்ளத்தின் உள்ளே ஏதோ ஒரு குறை, — இனந் தெரியாத ஒரு வகைத் தாபம், — இடைவிடாமல் குடி கொண்டிருந்தது. ஏதோ ஒரு காந்த சக்தி அவனைக் கவர்ந்து இழுத்துக் கொண்டிருந்தது. ஏதோ ஓர் அரிய பொருளை, — இதுவரை பார்த்தும் அநுபவித்தும் அறியாத இன்பத்தை, — அவனுடைய இதயம் தேடிக் கொண்டிருந்தது. பகலில் அதைப் பற்றிக் கற்பனை செய்தான்; இரவில் அதைப் பற்றிக் கனவு கண்டான். "எனக்காகவே படைக்கப்பட்ட அந்த அற்புதப் பொருளை, — கற்பகக் கனியை, — என்னைக் கவர்ந்திழுக்கும் காந்தத்தை, எங்கே காண்பேன்? எப்போது காண்பேன்?" என்று அவன் இதயம் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தது. ஆதி மனிதனைப் படைத்த அதே சமயத்தில் இறைவன் ஆதி ஸ்திரீயையும் படைத்தார். மலையின் மற்றொரு பக்கத்துச் சாரலில் அவள் வசித்து வந்தாள். பசிக்கு உணவும், தாகத்துக்குச் சுனை நீரும், தங்கியிருக்க மலைக் குகையும் அவளுக்கு இருந்தன. வெளிப்படையாகப் பார்த்தால் ஒரு குறைவும் இல்லை. ஆனால் உள்ளத்தினுள்ளே ஒரு தீப்பிழம்பு ஜுவாலை விட்டு அவளை எரித்துக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு சக்தி அவளைக் கவர்ந்து இழுத்துக் கொண்டிருந்தது. அச்சக்தி எங்கிருந்து அவளை இழுக்கிறது, எந்தத் திசையை நோக்கி இழுக்கிறது என்பது ஒன்றும் தெரியவில்லை.

ஆதி மனிதனுக்கும் ஆதி ஸ்திரீக்கும் இடையில் ஒரு பெரிய மலை ஓங்கி

அமரர் கல்கி

நின்று ஒருவரையொருவர் சந்திக்க முடியாமல் தடுத்துக் கொண்டிருந்தது.

வெயிற் காலத்தில் ஒரு நாள் இயற்கை நியதி காரணமாகக் காட்டில் தீ மூண்டு நாலாபுறமும் பரவத் தொடங்கியது. மலையைச் சுற்றி நெருப்பு அதிவேகமாகப் பரவி வந்தது. மனிதனும் ஸ்திரீயும் காட்டுக்குள் போனால் ஆபத்துக்குள்ளாவோம் என்று உணர்ந்து மலை மேல் ஏறினார்கள். மலையின் உச்சியில் அவர்கள் ஒருவரையொருவர் பார்த்தார்கள். பார்த்த கண்கள் பார்த்தபடி கண் கொட்டாமல் நின்றார்கள். காட்டுத் தீயை மறந்தார்கள். எதற்காக மலை உச்சியில் ஏறினோம் என்பதையும் மறந்தார்கள். பசி தாகங்களை அடியோடு மறந்தார்கள். இத்தனை காலமும் தாங்கள் உயிர் வாழ்ந்ததெல்லாம் இந்த ஒரு சந்திப்புக்காகவே என்பதை உள்ளுணர்வினால் அறிந்தார்கள். தங்களைக் கவர்ந்திழுத்த இனந் தெரியாத சக்தி இதுதான் என்பதையும் தெரிந்து கொண்டார்கள்.



தங்களில் ஒருவரிடம் உள்ள குறையை இன்னொருவரால் இட்டு நிரப்பிப் பூர்த்தி செய்ய முடியும் என்பதை அறிந்தார்கள். இவ்விதம் ஒன்று சேர்ந்துவிட்டவர்களை இனிப்பிரிக்கக் கூடிய சக்தி உலகில் வேறொன்றும் கிடையாது என்பதையும் உறுதியாக உணர்ந்தார்கள்.

இந்த அற்புதக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த படைப்புக் கடவுளான பிரம்மதேவர் தாம் ஆரம்பித்த வேலை நல்ல முறையில் தொடங்கி விட்டது என்பதை அறிந்து பரிபூரணத் திருப்தி அடைந்தார்!

மேற்கூறிய ஆதிமனிதனையும் ஆதிஸ்திரீயையும் ஒத்திருந்தார்கள் அந்த நேரத்தில் நம் வல்லவரையனும் குந்தவை தேவியும். இப்பூவுலகில் தாங்கள் பிறந்து வளர்ந்ததெல்லாம் இந்த நிமிஷத்துக்காகவே, — இந்தச் சந்திப்புக்காகவே,— என்பதை அவர்களுடைய உள்ளுணர்ச்சி உணர்த்தியது. ஆனால் ஆதி மனிதனையும் ஆதிஸ்திரீயையும் போலின்றி இவர்கள் நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் அல்லவா? ஆகையால் தங்களுடைய பரஸ்பர அந்தஸ்தில் இருந்த வேற்றுமையை அவர்கள் மறக்க முடியவில்லை. முழுதும் உணர்ச்சி வசப்பட்டு மனத்தைக் கட்டுக்கடங்காமல் அவர்கள்விட்டுவிடவில்லை. ஒருகணம் ஒருவரையொருவர் பார்த்துக் கண்ணோடு கண் சேர்வதும், அடுத்த கணத்தில் தங்கள் கண்களைத் திருப்பி அக்கம் பக்கத்திலிருந்த பூ, மரம், பட்டுப் பூச்சி, ஓடை முதலியவற்றைப் பார்ப்பதுமாயிருந்தார்கள்.

ஈசான சிவ பட்டர் தொண்டையைக் கனைத்த பிறகுதான் இருவரும் ஏதோ ஒரு முக்கியமான காரியம் பற்றி இங்கே சந்திக்கிறோம் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டார்கள்.

"நீர் என்னைத் தனிமையில் பார்க்க வேண்டுமென்று ஈசான பட்டரிடம் தெரிவித்தது உண்மையா?" என்று குரலைக் கடுமைப் படுத்திக் கொண்டு இளைய பிராட்டி வினவினாள்.



அந்தக் குரலின் கடுமையும் அதிகார தோரணையும் வந்தியத் தேவனை நிமிர்ந்து நிற்கச் செய்தது.

"தாம் யார் என்று தெரிந்தால் அல்லவா தமது கேள்விக்கு விடை சொல்லலாம்? ஈசான பட்டர் என்னைத் தவறான இடத்துக்கு அழைத்து வந்து விட்டாரோ என்று ஐயுறுகிறேன்!" என்றான் அந்த வீர வாலிபன்.

"எனக்கும் அவ்வித சந்தேகம் உண்டாகிறது. நீர் யாரைப் பார்க்க விரும்பினீர்?"

"சோழர் தொல் குலத்தின் மங்காமணி விளக்கை, சுந்தர சோழ மன்னரின் செல்வத் திருமகளை, ஆதித்த கரிகாலருக்குப் பின் பிறந்த சகோதரியை அருள்மொழிவர்மரின் அருமைத் தமக்கையை, இளையபிராட்டி குந்தவை தேவியைப் பார்க்க வேண்டுமென்று ஈசான சிவ பட்டரிடம் சொன்னேன்...."

குந்தவைப் பிராட்டி புன்னகை பூத்து, "அவ்வளவு பெருமையையும் தாங்க முடியாமல் தாங்கிக் கொண்டிருப்பவள் நான்தான்!" என்றாள்.

"அப்படியானால் குடந்தை ஜோதிடர் வீட்டிலும் அரிசிலாற்றங் கரையிலும் நான் பார்த்த நாரீமணி தாங்கள் இல்லைதானே?" என்றான் வல்லவரையன்.

"ஆமாம், ஆமாம்! அந்த இரண்டு இடத்திலும் அவ்வளவு மரியாதைக் குறைவாகத் தம்மிடம் நடந்து கொண்டவளும் நானேதான். அந்த நாகரிகமில்லா மங்கையை மறுபடியும் இவ்வளவு சீக்கிரத்தில் சந்திப்போம் என்று எதிர்பார்த்திருக்க மாட்டீர்!"

"மறுபடியும் சந்திப்பதாகச் சொல்வது பொருத்தமில்லை, தேவி!"

"ஏன்?"

"விட்டுப் பிரிந்திருந்தால் அல்லவா மறுபடியும் சந்திப்பதாகச் சொல்லலாம்? தாம் என் மனத்தை விட்டு ஒரு கணமும் அகலவில்லை...."

"தொண்டை மண்டலத்தார் இவ்வளவு சமத்காரமாகப் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை."

"எல்லாப் பெருமையையும் சோழ நாட்டிற்கேதான் கொடுப்பீர்களாக்கும். வேறு நாடுகளுக்கு ஒரு பெருமையும் தர மாட்டீர்கள் போலிருக்கிறது."

"ஆம்; என்னிடம் அந்தக் குற்றம் இருப்பது உண்மைதான். உமக்கு எங்கள் சோழ நாட்டைப் பிடிக்கவில்லையாக்கும்!"

"பிடிக்காமல் என்ன? நன்றாய்ப் பிடித்திருக்கிறது. ஆனால் இச்சோழ நாட்டில் இரண்டு பெரும் அபாயங்கள் இருக்கின்றன. அவற்றை எண்ணினாலே எனக்குப் பயமாயிருக்கிறது....!"

"சோழ நாட்டு வீரர்களின் வாளும் வேலும் அபாயகரமான ஆயுதங்கள் தான்! அயல்நாட்டவர்கள் இங்கே ஜாக்கிரதையாகவே வர வேண்டும். முக்கியமாக, ஒற்றர் வேலை செய்வதற்கென்று வருவோர்...."

"இளவரசி! அந்த இரு அபாயங்

களை நான் குறிப்பிடவில்லை. வாளும் வேலும் என்னிடமும் இருக்கின்றன. அவற்றை உபயோகிப்பதற்கும் நான் நன்கு அறிவேன்....''

''உமது வேலின் வன்மையைத்தான் அரிசிலாற்றங்கரையில் அன்று பார்த்தேனே? செத்துப் போன முதலையை உமது வேல் எத்தனை வேகமாய்த் தாக்கியது? ஒரே தாக்குதலில் உள்ளே அடைத்திருந்த பஞ்சையெல்லாம் வெளிக் கொண்டு வந்துவிட்டதே?''

''அம்மணி! சோழ நாட்டு மாதரசிகள் செத்த முதலையைக் கண்டு பயந்து சாகும் வீர நாரீமணிகள் என்பதை நான் அறியேன். சோழநாட்டு வீரர்கள் செத்த முதலையைத் தாக்கும் சுத்த வீரர்கள் என்றும் எனக்குத் தெரியாது. உயிருள்ள முதலையாக்கும் என்று எண்ணி வேலை எறிந்தேன். அது என் தவறும் அன்று; என் வேலின் தவறும் அன்று.....!''

''அந்த அசட்டு முதலையின் தவறுதான்! வாணர் குலத்தில் பிறந்த வீர வந்தியத்தேவர் வேலோடு வரும் வரையில் காத்துக் கொண்டிராமல் முன்னதாகவே செத்துப் போய்விட்டதல்லவா? அதற்கு நன்றாய் வேணும் இந்த அவமானம்....! வேறு எந்த இரு அபாயங்களைப் பற்றிச் சொன்னீர்?''

''இந்தச் சோழ நாட்டு நதிகளில் புது வெள்ளம் வரும்போது உண்டாகும் சுழல்கள் அபாயமானவை! அவற்றை ஒருபோதும் நம்பவே கூடாது. என்னைத் திண்டாடித் திணறும்படி செய்துவிட்டன!''

''வெள்ளச் சூழலில் நீர் எப்படி அகப்பட்டுக் கொண்டீர்? தண்ணீரில் காலையே வைக்கமாட்டீர் என்றல்லவா உம்மைப் பார்த்தால் தோன்றுகிறது?''

''வேதாளத்துக்கு வாழ்க்கைப் பட்டு முருங்கை மரத்தில் ஏற மாட்டேன் என்றால், முடிகிற காரியமா? சோழ நாட்டுக்கு வந்த காரணத்தினால், நதி வெள்ளத்தில் முழுகிச் சுழலிலும் சிக்கும்படியாகிவிட்டது! என்னோடு துணைக்கு வந்த ஒரு அசட்டுப் பிள்ளையின் பிடிவாதத்தினால் அப்படி நேர்ந்தது! கேளுங்கள், தேவி! அந்தப் பிள்ளை ஒரு சின்னஞ் சிறிய பொய் சொல்ல முடியாது என்றான். அதனால் வந்த வினை....''

''நீர் சொல்லுவது புதிராக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் நல்லது.''

''சொல்கிறேன். தங்களுடைய அருமைச் சகோதரரின் ஓலையுடன் தூதனாக வந்த என்னைத் தஞ்சைக் கோட்டைத் தலைவர் சிறிய பழுவேட்டரையர் 'ஒற்றன்' என்று குற்றஞ் சாட்டிப் பிடித்து வர ஆட்களை ஏவினார். வந்த காரியம் பூர்த்தியாவதற்குள் சிறைப்பட நான் விரும்பவில்லை. ஆகையால் நான் தஞ்சையில் தங்கியிருந்த வீட்டுச் சிறுவனை வழிகாட்ட அழைத்துக் கொண்டு கிளம்பினேன்....''

''தஞ்சை நகரில் யாருடைய வீட்டில் தங்கினீர்?''

''கோட்டைக்கு வெளியிலே பூக்காரப் பெண்மணி ஒருத்தியின் வீட்டில் தங்கினேன். அந்த அம்மாள் ஊமை...''

''ஓகோ! அவளுடைய பெயர்....?''

''அந்த அம்மாளின் பெயர் தெரியாது; ஆனால் அவளுடைய பிள்ளையின் பெயர் மட்டும் எனக்குத் தெரியும். அவன் பெயர் சேந்தன் அமுதன்....''

''நான் நினைத்தது சரிதான். மேலே சொல்லுங்கள்!''

''என் குதிரை மேல் அச்சிறுவனையும் ஏற்றிக் கொண்டு இந்தப் பழையாறை நகரை நோக்கி வந்து கொண்டிருந்தேன். அதற்குள் பழுவேட்டரையரின் ஆட்கள் சிலர் எங்களை நெருங்கி வந்துவிட்டார்கள். நான் வந்த காரியம் முடிவதற்குள் அவர்களிடம் பிடிபட விரும்பவில்லை. குடமுருட்டி ஆறு வந்ததும் அச்சிறுவனிடம், 'நான் இங்கே இறங்கிக்கொள்கிறேன். தம்பி! நீ பாட்டுக்குக் குதிரையை விட்டுக் கொண்டு போ! உன்னை நான்தான் என்று அவர்கள் தொடர்ந்து துரத்தி வருவார்கள். உன்னைப் பிடித்த பிறகு ஏமாறுவார்கள்! நான் எங்கே என்று அவர்கள் கேட்டால் ஆற்றில் விழுந்து முழுகிப் போய் விட்டதாகச் சொல்!' என்றேன். அந்தப் பையனோ அரிச்சந்திரனுடைய சந்ததியில் வந்தவன் போலிருக்கிறது. 'நீங்கள் முழுகாத போது எப்படி முழுகி விட்டதாகப் பொய் சொல்லுவேன்?' என்றான்.

அந்தப் பிள்ளை பொய் சொல்லவேண்டிய அவசியம் ஏற்படாமற் பொருட்டு, அவனைக் குதிரையில் சேர்த்துக் கட்டிவிட்டு, நான் நதியில் குதித்து முழுகிவிட்டேன். அம்மம்மா! இந்தச் சோழநாட்டு நதிகளில், அதுவும் கரை ஓரங்களில், எப்பேர்ப்பட்ட நீர்ச் சுழல்கள்! அவற்றில் அகப்பட்டுக் கொண்டு நான் பெரிதும் திண்டாடிப் போனேன். கடைசியில், கரை ஓரத்தில் இருந்த மரத்தின் வேர் ஒன்றைப் பிடித்துக் கொண்டு கரையேறி உயிர் பிழைத்து வந்தேன். தேவி! நீர்ச் சுழலில் நான் அகப்பட்டுக் கொண்டு சுழன்று சுழன்று சுழன்று மதி மயங்கி மூச்சுத் திணறிக் கஷ்டப்பட்டபோது என்ன கண்டேன், எதை நினைத்துக் கொண்டேன் என்று எண்ணுகிறீர்கள்?''

''நான் எவ்விதம் அறிவேன்? ஒருவேளை கஜேந்திர மோட்சத்தை நினைத்துக் கொண்டிருக்கலாம்....''

''இல்லை, இல்லை; என்னைப் போலவே அந்த நீர்ச் சுழலில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடிய சில கயல் மீன்களைக் கண்டேன். அந்தக் கயல் மீன்கள் இந்தச் சோழநாட்டுப் பெண்களின் கண்களை நினைவூட்டின. நதியின் நீர்ச் சுழலில் அகப்பட்டுக் கொண்டவனாவது எப்படியோ தப்பிப் பிழைக்கலாம்; ஆனால் இந்தச் சோழநாட்டுப் பெண்களின் விழிச் சுழலில் அகப்பட்டுக் கொண்டவன் ஒருகாலும் தப்பிப் பிழைக்க முடியாது என்று எண்ணிக் கொண்டேன்....!''

''இம்மாதிரி பெண்களைக் குற்றம் கூறிப் பழி சொல்வதில் சிலருக்கு ஒரு பெருமை; தாங்கள் செய்யும் தவறுக்குப் பெண்களின் மீது குற்றம் சொல்வது ஆண் பிள்ளைகளின் வழக்கம்...''

''அந்த வழக்கத்தைத்தான் நானும் கைப்பற்றினேன். அதில் என்ன தவறு?'' என்றான் வந்தியத்தேவன்.

அச்சமயம் அரண்மனைக்குள்ளேயிருந்து இனிய குழலோசை கேட்டது. அதைத் தொடர்ந்து தண்டைச் சிலம்புகளின் கிண்கிணி ஒலியும் மத்தளத்தின் முழக்கமும் கலந்து வந்தன. பின்னர், இளம் பெண்களின் இனிய குரல்கள் பலசேர்ந்து ஒலித்தன. சிலப்பதிகாரக் காவியத்தில் உள்ள பின்வரும் ஆய்ச்சியர் குரவைப் பாடலைப் பாடினார்கள்:—

''கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன் வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ!
கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் ஆனுள் வருமேல் அவன் வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ!''

பாடல் முடியும் வரையில் குந்தவையும் வந்தியத்தேவனும் அதன் இனிமையில் ஈடுபட்டுத் தம் வசமிழந்து நின்றார்கள். மறுபடியும் வாத்திய முழக்கத்துடன் ஆடல் தொடங்கியதற்கு அறிகுறியாகத் தண்டைச் சதங்கைகளின் ஒலி எழுந்தது.

''அரண்மனையில் குரவைக் கூத்து நடக்கிறது போலும்! கடம்பூர் மாளிகையில் குரவைக் கூத்து ஒன்று பார்த்தேன். அது முற்றும் வேறுவிதமாயிருந்தது!'' என்றான் வல்லவரையன்.

''ஆம்; என் தோழிகள் குரவைக் கூத்துப் பயில்கிறார்கள். சீக்கிரத்தில் என்னைக் காணாமல் தேடத் தொடங்கிவிடுவார்கள். தாம் வந்த காரியம் என்ன?'' என்று இளைய பிராட்டி குந்தவைதேவி கேட்டாள்.

''இதோ நான் வந்த காரியம்; தங்கள் தமையனாரின் ஓலை; எத்தனையோ அபாயங்களுக்குத் தப்பி, நீர்ச் சுழல்கள் — விழிச் சுழல்களிலிருந்து காப்பாற்றி, இதைக் கொண்டு வந்தேன்!'' என்று வல்லவரையன் கூறி ஓலையை எடுத்து நீட்டினான்.





அத்தியாயம் 49

விந்தையிலும் விந்தை!

குந்தவைப் பிராட்டி வந்தியத்தேவன் நீட்டிய ஓலையைப் பெற்றுக் கொண்டு படித்தாள். அதுவரையில் நெரிந்த புருவங்களுடன் சுருங்கியிருந்த அவள் முகம் இப்போது மலர்ந்து பிரகாசித்தது.

வல்லவரையனை நிமிர்ந்து நோக்கி, "ஓலையைக் கொடுத்துவிட்டீர். இனி என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டாள் குந்தவைதேவி.




''தங்களிடம் ஓலையைக் கொடுத்த துடன் என் வேலையும் முடிந்து விட்டது. இனி, நான் ஊருக்குத் திரும்ப வேண்டியதுதான்.''

''உமது வேலை முடியவில்லை; இப்போதுதான் ஆரம்பமாகியிருக்கிறது!''

''தாங்கள் சொல்லுவது ஒன்றும் விளங்கவில்லை, தேவி!''

''உம்மிடம் அந்தரங்கமான வேலை எதையும் நம்பி ஒப்புவிக்கலாம் என்று இதில் இளவரசர் எழுதியிருக்கிறாரே? அதன்படி நீர் நடந்து கொள்ளப்போவதில்லையா?''

''இளவரசரிடம் அவ்விதம் ஒப்புக்கொண்டுதான் வந்தேன். ஆனால் என்னை நம்பி முக்கியமான வேலை எது



வும் ஒப்புவிக்க வேண்டாம். தங்களை ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன்.''

''உமது கோரிக்கை எனக்கு விளங்கவில்லை. ஒன்றை ஒப்புக் கொண்ட பிறகு பின்வாங்குவதுதான் வாணர் குலத்தின் மரபா?''

''பழம்பெருமை பேசுவது வாணர் குலத்தின் மரபு அன்று; ஒப்புக் கொண்டு பின்வாங்குவதும் வாணர் குலத்து மரபு அன்று.''

''பின்னர், ஏன் தயக்கம்? பெண் குலத்தின் பேரில் கொண்ட வெறுப்பா அல்லது என்னைக் கண்டால் பிடிக்கவில்லையா?'' என்று இளவரசி கூறி இளநகை புரிந்தாள்.

ஆகா! இது என்ன கேள்வி? கடலுக்குச் சந்திரனைப் பிடிக்காமல் போகுமா? பிடிக்கவில்லையென்றால் ஆயிரம் அலைக் கைகளையும் நீட்டிப் பூரண சந்திரனை ஏன் தாவிப் பிடிக்க முயல்கிறது? நீல வானத்துக்குப் பூமாதேவியைப் பிடிக்கவில்லையென்று யார் சொல்லுவார்கள்? பிடிக்காது போனால், இரவெல்லாம் ஆயிரமாயிரம் நட்சத்திரக் கண்களினால் இந்தப் பூமியை உற்று உற்றுப் பார்த்து ஏன் பூரித்துக் கொண்டிருக்கிறது? மேகத்துக்கு மின்னலைப் பிடிக்காதிருக்குமா? பிடிக்கவில்லையென்றால், தன்னைப் பிளந்து கொண்டு பாய்ந்தோடும் மின்னலை அப்படி ஏன் இறுகத் தழுவி மார்போடு அணைத்துக்கொள்கிறது? வண்டுக்கு மலர் பிடிப்பதில்லையென்பது உண்டா? அங்ஙனமானால் ஏன் ஓயாமல் மலரைச் சுற்றி வட்டமிட்டு மதிமயங்கி விழுகிறது? விட்டில் பூச்சிக்கு விளக்கைப் பிடிக்கவில்லையென்றால் யாரேனும் நம்புவார்களா? அவ்வாறெனில், ஏன் அந்த விளக்கின் ஒளியில் விழுந்து உயிரை விடுகிறது? தேவி! நல்ல கேள்வி கேட்டீர்! தம்மை எனக்குப் பிடிக்கவில்லையென்றால், தமது கடைக்கண் பார்வை என்னை ஏன் இப்படித் திகைக்க வைக்கிறது? தமது இதழ்களின் ஓரத்தில் விளையாடும் இளநகை என்னை ஏன் இவ்விதம் சித்தப் பிரமை கொள்ளச் செய்கிறது?... இவ்வளவு எண்ணங்களும் வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் தோன்றின. ஆனால் நாவினால் சொல்லக் கூடவில்லை.


''ஐயா! என்னுடைய கேள்விக்கு மறுமொழி சொல்லவில்லையே? வாணர் குலத்தில் பிறந்த வீர புருஷன் சேவகம் ஒரு பெண்ணின் ஏவலைச் செய்வதா என்று தயக்கமா? இளவரசர் தம்மிடம் இந்த ஓலையைக் கொடுத்தபோது இதில் எழுதியிருப்பதைப் பற்றிச் சொல்லவில்லையா?'' என்று இளவரசி மீண்டும் வினவினாள்.


''தேவி! இளவரசர் விருப்பத்தை நன்கு தெரிந்து கொண்டுதான் புறப்பட்டு வந்தேன். ஆனால் நல்லவேளையில் என் யாத்திரையைத் தொடங்கவில்லையெனத் தோன்றுகிறது. ஆகையால் வழியெல்லாம் விரோதிகளைச் சம்பாதித்துக் கொண்டு வந்தேன். உற்ற நண்பனையும் பகைவன் ஆக்கிக் கொண்டேன். நாலாபுறத்திலும் பகைவர்கள் என்னைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் தாம் இடும் பணியை நான் நிறைவேற்றுவதாக எப்படி உறுதி சொல்ல முடியும்? இதனால்தான் தயங்குகிறேன். என்றால் தங்கள் காரியம் கெட்டுப் போகக் கூடாதல்லவா?'' என்று சொன்னான் வல்லவரையன்.

''யார் யார் அந்தப் பகைவர்கள்? எனக்குத் தெரிவிக்கலாமா?'' என்று குந்தவை கவலை தொனித்த குரலில் கேட்டாள்.

''பழுவேட்டரையர்கள் என்னை வேட்டையாடிப் பிடிக்க நாலாபுறமும்

(தொடர்ச்சி 37—ஆம் பக்கம்.....)









(32—ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்களை ஏவியிருக்கிறார்கள். என் உயிர் நண்பனாயிருந்த கந்தமாறன் நான் அவனை முதுகில் குத்திக் கொல்ல முயன்றதாக எண்ணிக் கொண்டிருக்கிறான். ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவ வேஷதாரி ஒருவன் என்னைத் தொடர்ந்து கொண்டிருக்கிறான். பழுவூர் இளையராணி நந்தினி தேவி என் மீது ஒரு மந்திரவாதியை ஏவி விட்டிருக்கிறாள். எந்த நிமிஷத்தில் யாரிடம் நான் அகப்பட்டுக் கொள்வேனோ, தெரியாது...''

வெள்ளத்திலிருந்து கரையேறித் தப்பிய அன்றிரவு மந்திரவாதியுடன் நேர்ந்த அனுபவம் வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தது. பகலில் பிரயாணம் செய்வதின் அபாயத்தை எண்ணி மூங்கில் காடுகளிலும் வாழைத் தோப்புக்களிலும் அவன் பொழுது போக்கினான். இரவில் நதிக் கரையோடு நடந்து சென்றான். வெகுதூரம் நடந்து களைத்து இரவு மூன்றாம் ஜாமத்தில் ஒரு பாழடைந்த பழைய மண்டபத்தை அடைந்தான். வெளியில் நிலா மதியம் பட்டப் பகல்போலப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மண்டபத்துக்குள்ளேயும் சிறிது தூரம் நிலா வெளிச்சம் புகுந்து பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தது. வெளிச்சமாயிருந்த பகுதியைக் கடந்து இருளடைந்த பகுதிக்குச் சென்று வந்தியத்தேவன் படுத்துக் கொண்டான். கண்ணைச் சுற்றிக் கொண்டு தூக்கம் வந்த சமயத்தில் வெகு சமீபத்திலிருந்து ஆந்தையின் அகோரமான குரல் வந்தது. பழுவூர் இளைய ராணியுடன் லதா மண்டபத்தில் பேசிக் கொண்டிருந்த போது அதே மாதிரி ஆந்தைக் குரல் கேட்டது அவனுக்கு நினைவு வந்து திடுக்கிட்டு எழுந்தான். உள்ளே இருட்டின பகுதியிலிருந்து இரு சிறிய ஒளிப் பொட்டுக்கள் அவனை உற்று நோக்கின. வெளியிலே போய்விடலாம் என்று எண்ணி இரண்டு அடி நடந்தான். வெளியிலிருந்து யாரோ உள்ளே வரும் காலடிச் சத்தம் கேட்டது. இடிந்து விழுந்து கரடு முரடாயிருந்த தூண் ஒன்றைப் பிடித்துக் கொண்டு அதன் மறைவில் நின்றான். வெளியிலிருந்து வந்தவன் முகம் நிலா வெளிச்சத்தில் கொஞ்சம் தெரிந்தது. பழுவூர் ராணியைப் பார்க்க வந்த மந்திரவாதிதான் அவன் என்பதைத் தெரிந்து கொண்டான். மந்திரவாதி அந்தத் தூணை நோக்கியே வந்தான். தான் அவ்விடம் மறைந்திருப்பது அவனுக்குத் தெரியாது என்றும், தன்னைக் கவனியாமல் மண்டபத்துக்குள்ளே போய் விடுவான் என்றும் வந்தியத்தேவன் நினைத்தான். ஆனால் தூணின் அருகில் வரும் வரையில் மெள்ள மெள்ளப் பூனை போல நடந்து வந்த மந்திரவாதி திடீரென்று கோரமான குரலில் ஒரு கூச்சல் போட்டுக் கொண்டு வந்தியத்தேவனுடைய கழுத்தை ஒரு கையினால் பிடித்து நெறித்தான். ''எடு! அந்தப் பனை இலச்சினை மோதிரத்தைக் கொடு! கொடுக்காவிட்டால் உன் கழுத்தை நெறித்துக் கொன்று விடுவேன்!'' என்று கத்தினான்.

வந்தியத்தேவனுடைய கழுத்து முறிந்து விடும்போலிருந்தது; அவனுடைய விழிகள் பிதுங்கி வெளிவந்து விடும்போலிருந்தது; மூச்சுத் திணறியது. எனினும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான். அந்தப் பழைய தூணை ஒரு கையினால் அழுத்திக் கொண்டு ஒரு காலைத் தூக்கிப் பூரண பலத்தையும் பிரயோகித்து ஓர் உதை விட்டான். மந்திரவாதி ஓலமிட்டுக் கொண்டு கீழே விழுந்தான். அதே சமயத்தில் அந்தப் பழைய தூண் சரிந்து விழுந்தது. மேலே கூரையிலிருந்து பொலபொலவென்று கற்கள் விழுந்தன. வௌவால் ஒன்று படபட வென்று சிறகை அடித்துக் கொண்டு வெளியே சென்றது. அதைத் தொடர்ந்து வந்தியத்தேவனும் வெளியேறினான். ஓட்டம் பிடித்தவன் சிறிது தூரம் வரையில் திரும்பிப் பார்க்கவேயில்லை. பின்னால் யாரும் தொடர்ந்து வரவில்லையென்று நிச்சயமான பிறகுதான் நின்றான். அந்த இரவு அனுபவத்தை நினைத்ததும் வந்தியத்தேவனுடைய உடம்பெல்லாம் இப்போது கூட கிடுகிடுவென்று நடுங்

கியது.

அந்தப் பயங்கர நினைவுகளுக்கிடையில், ''ஐயா! காஞ்சியிலிருந்து தாம் புறப்பட்டு எத்தனை காலமாயிற்று?'' என்று குந்தவைகேட்டது அவனுடைய காதில் விழுந்து அவனுக்கு மனத்தெளிவை அளித்தது.

''ஒருவாரமும் ஒரு நாளும் ஆயிற்று, தேவி!'' என்றான்.

''இதற்குள் இவ்வளவு பகைவர்களை நீர் சம்பாதித்துக் கொண்டது விந்தையிலும் விந்தைதான். இவ்வளவு அதிசயமான காரியத்தை எப்படிச் சாதித்தீர்?''

''அது பெரிய கதை, தேவி!''

''இருந்தால் பாதகமில்லை. சொல்லலாம். அந்த விவரங்களைத் தெரிந்து கொண்ட பிறகு தான் தமக்கு நான் இடவேண்டிய பணியை இடக்கூடும்.''

இவ்வாறு இளவரசி கூறிவிட்டு, ஈசான சிவபட்டரை அருகில் அழைத்து, ''படகோட்டி எப்படிப்பட்டவன்?'' என்று கேட்டாள்.

''இரண்டு காதும் நல்ல செவிடு; இடி இடித்தாலும் கேளாது, தாயே!''

''ரொம்ப நல்லது. படகிலேறிக் கொஞ்ச தூரம் ஓடையில் போய்விட்டு வரலாம், வாருங்கள்! இவருடைய கதையை முழுதும் நான் கேட்க வேண்டும்!'' என்றாள்.

வல்லவரையன் புளகாங்கிதம் அடைந்தான். சோழர் குலத் திருமகளோடு ஒரு படகில் செல்லும் பாக்கியம் எளிதில் கிட்டுவதா? அதைப் பெறுவதற்கு ஏழு ஜன்மங்களில் தான் தவம் செய்திருக்க வேண்டாமா? படகில் ஏறிய பிறகு எவ்வளவுதூரம்முடியுமோ அவ்வளவு தூரம் கதையை நீட்டி வளர்த்திச் செல்ல வேண்டும்! சுருக்கமாக முடித்துவிடக் கூடாது! அவசரம் என்ன? அரிதில் பெற்ற பாக்கியத்தை எளிதில் கைநழுவ விட்டு விடலாமா?

வந்தியத்தேவனுக்கு அவசரமில்லை தான். ஆனால் படகு ஓடையில் நகர்ந்து அவன் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில்நடந்ததைச்சொல்லத்தொடங்கியது முதல் குந்தவைக்கு நிமிஷத்துக்கு நிமிஷம் அவசரமும் பரபரப்பும் அதிகமாகி வந்தன. ''மேலே என்ன?'' ''அப்புறம் என்ன?'' என்று கேட்டுத் துரிதப்படுத்தி வந்தாள். வந்தியத்தேவன் அவனுடைய தீர்மானத்தின் படி கூடிய வரையில் கதையை வளர்த்தினான். எவ்வளவு நீண்ட கதையாயினும் முடிவு ஒன்று வந்துதானே ஆகவேண்டும்? கதை முடிந்த போது படகும் திரும்ப ஓடைப் படித்துறைக்கு வந்து சேர்ந்தது.

படகிலிருந்து அவர்கள் இறங்கிப் பூங்காவுக்குள் வந்த போது, அரண்மனையில் இன்னும் குரவைக் கூத்து நடந்து வந்ததற்கு அறிகுறியாக இசைக் கருவிகளும் தண்டைச் சிலம்புகளும் ஒலித்தன. பின் வரும் சிலப்பதிகார வரிப் பாடலும் கேட்டது:—

''பெரியவனை மாயவனைப் பேருலகமெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார் தம் கண்ணென்ன கண்ணே!
மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தாரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே!
நாராயணா வென்னா நாவென்ன நாவே!''

இதைக் கேட்ட வல்லவரையன் ''கஞ்சனார் மிக்க வஞ்சனாராயிருக்கலாம்! ஆனால் எனக்கு நேற்றுப் பேருதவி செய்தார்!'' என்றான்.

''அது என்ன? கம்ஸன் உமக்கு என்ன உதவி செய்திருக்க முடியும்?'' என்று இளையபிராட்டி கேட்டாள்.

டெபாசிட் சேகரிப்பு விழா!

ஜெயசக்தி பைனான்சியர்ஸ்

(FIRM)

(Hire Purchase & General Financiers)

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களில் பிக்சட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

3 மாதங்கள்	6 மாதங்கள்	1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்கள்
12%	15%	19%	20%	21%

தொடர்பு கொள்ளவும்

ஜெயசக்தி பைனான்சியர்ஸ்

(FIRM)

39, நடேசன் தெரு (2-வது மாடி) சிவா-விஷ்ணு கோயில் அருகில்
தி.நகர், சென்னை-600 017. போன் : 442218/445494

மதுரை	:	41, வடக்கு வெளி வீதி, (முதல் மாடி) மாடர்ன் லாட்ஜ் ஸ்டாப்பிங், மதுரை-625 001. போன் : 36004/34369
திருச்சி	:	22, மதுரை ரோடு, (முதல் மாடி) ராஜா தியேட்டர் அருகில், திருச்சிராப்பள்ளி-620 008. போன் : 31376/33397
கோயமுத்தூர்	:	666, ராஜா தெரு, (முதல் மாடி) கோயமுத்தூர்-641 001. போன் : 34369
பாண்டிச்சேரி	:	11, நேரு தெரு, (கனரா வங்கி எதிரில்) 2-வது மாடி, பாண்டிச்சேரி-605 001. போன் : 6493/6471
திருநெல்வேலி	:	9-G, திலக் நகர், மதுரை ரோடு, திருநெல்வேலி-627 001. போன் : 25785
தஞ்சாவூர்	:	எண் : 2 & 3 முதல் மாடி, நீ.எ. கனல் ரோடு, தஞ்சாவூர்-613 001. போன் : 21626/22286
திருவண்ணாமலை	:	14/A, ஆனைக்கட்டி தெரு, திருவண்ணாமலை-606 601. போன் : 2483
பட்டுக்கோட்டை	:	121, தலையாரி தெரு, (முதல் மாடி) பட்டுக்கோட்டை-614 601. போன் : 453
பெங்களூர்	:	24/1-A, மார்கோஸா ரோடு (10-வது கிராஸ்) மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003. போன் : 366971
கும்பகோணம்	:	12, கிழக்கு சாரங்கபாணி தெரு, கும்பகோணம்-612 001. போன் : 22647

ஜெயசக்தி - திட்டமிட்ட வளர்ச்சிக்கு

LOTUS/JF/110



டீ உலகில் உயர் வட்டம்

சக்கரா டீ

உயர் வகுப்பினர் பாராட்டும்
தேநீர்ச் செல்வம் சக்கரா டீ.
சொகுசான சுவைமண, திட
குணங்களின் முழுமை
வட்டம். தேநீரிலே
சுக போகத்தின் உயர்
வட்டம்: சக்கரா டீ.

உயர் வட்ட ரசிகர்களுக்கு
உயர் வளமுள்ள தேயிலை



சக்கரா டீ

டாட்டா டீ லிமிடெட்
உலகிலேயே மிகப்பெரிய டீ கம்பெனி.

daCunha/TT/246/87/TM

''நான் இந்த நகரத்துக்குள் புகுவதற்குக் கம்ஸன்தான் உதவி செய்தான்!'' என்றான் வந்தியத்தேவன். பிறகு, அந்த உதவியின் வரலாற்றையும் கூறினான்.

பழையாறைக்குத் தான் வந்து சேர்வதற்குள்ளாகவே பழுவேட்டரையரின் ஆட்கள் வந்திருப்பார்கள் என்று வந்தியத்தேவன் ஊகித்திருந்தான். நகரத்தின் நுழைவாசல்கள் தோறும் அவர்கள் காத்திருப்பார்கள். சந்தேகம் ஏதேனும் தோன்றினால் பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள். அவர்களிடம் சிக்காமல் பழையாறை நகருக்குள் பிரவேசிப்பது எப்படி?— இந்தக் கவலையுடன் அந்த மாநகரின் பிரதான வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் அரிசிலாற்றங்கரையில் வந்தியத்தேவன் நின்றிருந்தபோது நாடக கோஷ்டி ஒன்று வந்தது. கண்ணன், பலதேவன், கம்ஸன் முதலிய வேஷக்காரர்கள் வந்தார்கள். அவர்களில் கம்ஸன் மட்டும் மரத்தினாலான முகத்தைத் தரித்திருந்தான். வந்தியத்தேவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. நாடக கோஷ்டியுடன் பேச்சுக்கொடுத்தான். கம்ஸன் வேஷம் போட்டவனுக்கு ஆட்டத்திறமை அவ்வளவு போதாது என்றான். கம்ஸ வேஷக்காரன் இவனுடன் சண்டைக்கு வந்தான். வந்த சண்டையை இலகுவில் வல்லவரையன் விடுவானா? ''உன்னைவிட நான் நன்றாக ஆடுவேன். பார்க்கிறாயா?'' என்றுசொல்லிமுகமூடியைப் பலவந்தமாகப் பிடுங்கி வைத்துக் கொண்டு ஆடினான். அச்சமயம் அவனுடைய ஆரவாரத் தடபுடலைப் பார்த்தவர்கள் அவனை மெச்சினார்கள். அவன் ஆடியதுதான் அதிகப் பொருத்தமாயிருந்தது என்றும் சொன்னார்கள். கம்ஸ வேஷக்காரன் கோபித்துக் கொண்டு போய் விட்டான். ''அவன் போனால் போகட்டும்; நானே உங்களுடன் நகரத்துக்குள் வந்து ஆடுகிறேன்'' என்று வந்தியத்தேவன் ஒப்புக்கொண்டான். நாடக கோஷ்டியார் மகிழ்ச்சியுடன் அவனைத் தங்களுடன் சேர்த்துக் கொண்டு சென்றார்கள்.

பழையாறை வீதிகளில் ஆட்டம்




பாட்டமெல்லாம் முடிந்த பிறகு வந்தியத்தேவன் ஆதித்த கரிகாலர் சொல்லி அனுப்பியபடி வடமேற்றளி ஆலயத்துக்குச் சென்று ஈசான பட்டரைச் சந்தித்துப் பேசினான். அவர் அவனைக் கோயிலைச் சுற்றியிருந்த சமணர் முழையில் இருக்கச் செய்து, இளவரசி குந்தவைப் பிராட்டியிடம் முன்னால் தெரிவித்துவிட்டு ஓடை வழியாக அழைத்து வந்தார்.

இந்த விவரங்களைக் கேட்ட இளவரசி வந்தியத்தேவனை வியப்பினால் மலர்ந்த கண்களைக் கொண்டு பார்த்து, ''வெற்றித் தெய்வமாகிய கொற்றவையின் கருணை இந்தச்சோழர் குலத்துக்குப் பரிபூரணமாக இருக்கிறது. ஆகையினாலேதான் இந்தச் சங்கடமான நிலைமையில் தம்மை எனக்கு உதவியாகத் தேவி அனுப்பி வைத்திருக்கிறாள்!'' என்றாள்.

''அரசி! இன்னும் தாம் எந்த விதப் பணியும் எனக்கு இடவில்லையே? என் பூரண ஆற்றலைக் காட்டக்கூடிய சமயம் இன்னும் கிட்டவில்லையே!'' என்றான் வல்லவரையன்.

''அதைப் பற்றிக் கவலை வேண்டாம். இதுகாறும் தமக்கு நேர்ந்திருக்கும் அபாயங்கள் எல்லாம் ஒன்றுமில்லை என்று சொல்லக் கூடிய அளவு அபாயம் நிறைந்த வேலையைத் தரப் போகிறேன்!'' என்றாள்.

வந்தியத்தேவன் உள்ளம் பொங்கி உடல் பூரித்து நின்றான். அந்தப் பெண்ணரசி இடும் பணியை நிறை



வேற்றுவதற்காக ஏழு கடல்களைக் கடந்து செல்லவும், ஆயிரம் சிங்கங்களுடன் ஆயுதம் இன்றிப் போர் செய்யவும், மேரு பர்வதத்தின் உச்சியில் ஏறி விண் மீன்களைக் கையினால் பறித்து எடுத்துக் கொண்டு வரவும் அவன் சித்தமானான்.

அரண்மனை நந்தவனத்தின் மத்தியில் பளிங்கினால் ஆன வஸந்த மண்டபம் ஒன்று இருந்தது. அதை நோக்கிக் குந்தவை நடந்தாள். பட்டரும் வந்தியத்தேவனும் இளவரசியைத் தொடர்ந்து சென்றார்கள்.

மண்டபத்துக்குள்ளிருந்த மணிமாடம் ஒன்றிலிருந்து குந்தவை ஒரு சிறிய பனை ஓலைத் துணுக்கையும் தங்கப் பிடி அமைத்த எழுத்தாணியையும் எடுத்தாள். ஓலைத் துணுக்கில் பின்வருமாறு எழுதினாள்:

''பொன்னியின் செல்வ! இந்த ஓலை கண்டதும் உடனே புறப்பட்டு வரவும். விவரங்கள் இது கொண்டு வருகிறவர் சொல்லுவார். இவரைப் பூரணமாக நம்பலாம்.''

இவ்விதம் எழுதி அடியில் ஆத்தி இலை போன்ற சிறிய சித்திரம் ஒன்று வரைந்தாள். ஓலையை வந்தியத்தேவன் கையில் கொடுப்பதற்காக நீட்டியவாறு, ''சிறிதும் தாமதியாமல் இந்த ஓலையை எடுத்துக் கொண்டு ஈழநாட்டுக்குச் செல்ல வேண்டும். இளவரசர் அருள்மொழி வர்மரிடம் கொடுத்து அவரைக் கையோடு அழைத்து வர வேண்டும்!'' என்றாள்.

வந்தியத்தேவன் ஆனந்தத்தின் அலைகளினால் மோதப்பட்டுத் தத்தளித்தான். நெடுநாளாக அவன் கொண்டிருந்த மனோரதங்கள் இரண்டில் ஒன்று நிறைவேறிவிட்டது. சோழர் குலவிளக்கான இளையபிராட்டியைச் சந்தித்தாகி விட்டது. அவர் மூலமாகவே இரண்டாவது மனோரதமும் நிறைவேறப் போகிறது. இளவரசர் அருள்மொழி வர்மரைச் சந்திக்கும் பேறு கிடைக்கப் போகிறது.

''தேவி! என் மனத்துக்குகந்த பணியையே தருகிறீர்கள். ஓலையை எடுத்துக் கொண்டு இப்போதே புறப்படுகிறேன்!'' என்று சொல்லி ஓலையைப் பெற்றுக் கொள்வதற்காக வலக் கரத்தை நீட்டினான்.

குந்தவை ஓலையை அவனிடம் கொடுத்த போது காந்தள் மலரையொத்த அவளுடைய விரல்கள் வந்தியத்தேவனுடைய அதிர்ஷ்டக் கையைத் தொட்டன. அவனுடைய மெய் சிலிர்த்தது; நெஞ்சு வெடித்து விடும்போலிருந்தது. ஆயிரம் பதினாயிரம் பட்டுப் பூச்சிகள் அவன் முன்னால் இறகுகளை அடித்துக் கொண்டு பறந்தன. ஆயிரம் பதினாயிரம் குயில்கள் ஒன்று சேர்ந்து இன்னிசை பாடின. மலை, மலையான வண்ண மலர்க்குவியல்கள் அவன் மீது விழுந்து நாலாபக்கமும் சிதறின.

இந்த நிலையில் வந்தியத்தேவன் தலை நிமிர்ந்து குந்தவைதேவியைப் பார்த்தான். என்னவெல்லாமோ சொல்ல வேணும் என்று அவனுடைய உள்ளம் பொங்கியது. ஆனால் அதைச் சொல்லும் சக்தி உயிரற்ற வெறும் வார்த்தைகளுக்கு ஏது?

சொல்ல வேண்டியதையெல்லாம் அவனுடைய கண்களே சொல்லின. அச்சமயம் வந்தியத்தேவனுடைய கண்கள் புனைந்துரைத்த கவிதைகளுக்கிணையான காதற் கவிதைகளைக் காளிதாஸனும் புனைந்ததில்லை, 'முத்தொள்ளாயிரம்' இயற்றிய பழந்தமிழ்க் கவிஞர்களும் இயற்றியதில்லையென்றால் வேறு என்ன சொல்ல வேண்டும்?

வஸந்த மண்டபத்துக்கு வெளியில் எங்கேயோ சற்று தூரத்தில் காய்ந்த இலைச் சருகுகள் சலசலவென்று சப்தித்தன. ஈசான சிவபட்டர் தம் குரலைக் கனைத்துக் கொண்டார்.

வந்தியத்தேவன் இந்த உலகத்துக்கு வந்து சேர்ந்தான்!

(தொடரும்)

பிறவிப் பயன் பெற்று வாழ்க!



(ஆதிசங்கரரின் பல உபதேச ரெத்தங்களின் சாரமாக அமைவது "சோபான பஞ்சகம்." அந்த ஐந்து சுலோகங்களின் தமிழாக்கம் கவிதை வடிவில் வழங்கப் படுகிறது.)

வேதத்தைத் தினந்தோறும் பயிற்சி செய்தும்
    விதிக்கின்ற கருமநெறி கடைப்பிடித்தும்
போதிக்கும் முறையோடு பூசை செய்தும்
    பூவுலக இன்பசுகப் பற்று நீக்கி
பாதிக்கும் கருமவினைப் பாவம் போக்கி
    பயன்கருதாச் செயல்புரிந்து பதமே பெற்று
சாதிக்கும் ஆத்மஞான மார்க்கம் பற்ற
    சம்சார வீட்டைவிட்டுச் சலனம் தீர்ப்பாய். (1)

நல்லோரைத் தேர்ந்தெடுத்து இணக்கம் கொண்டு
    நல்லபணி செய்வதையே இலக்காய்க் கொண்டு
பொல்லாங்கு தீவினைகள் புறத்தே விட்டு
    புனிதமய பிரும்மத்தின் வித்தை வேண்டி
கல்லாலின் கீழமர்ந்து ஞானம் ஊட்டும்
    கலைஞான குருவேபோல் ஆசான் பெற்று
எல்லோரும் போற்றிவரும் இறைவன் தன்பால்
    இடையறு பக்திதனைப் பெருகச் செய்வாய் (2)

வேறு:

மறையின் பொருளுணர்ந்து மனத்திலே கருவம்நீக்கி
    மமகார அகங்கார மாயை விட்டொழித்து
நிறைகின்ற நெஞ்சமெலாம் "நானே பிரும்ம"மென
    நெறிபுகட்டும் உபநிஷத்தின் சாரம் பற்றி
நிரைமூப்புத் தழுவுகின்ற "உடலேநான்" எனுமோர்
    தீங்கான தோற்றமதை அறவே விட்டு
முறையிலா வாதத்தை அகற்றிவைத்து மேன்மையுற
    முழுமூச்சாய் "சைதன்ய" நிலையே யறிவாய். (3)

வேறு:

வாட்டும் பசிப்பிணியை வெல்லுதற்கோர்
    வல்லமை பெறவே நீயாசித்திடல் வேண்டும்.
ஈட்டும் உணவதனில் ருசியொன்றும் பாராது
    இறைவனருளெனப் புசித்தெதிலும் ஈடுபாடின்றி
நாட்டும் பார்வையிலே விருப்பு வெறுப்புமில்லாது
    நடுங்கும் குளிரோ சுடும்வெயிலோ நாட்டமின்றி
காட்டும் கருணையோ குரூரமோ அல்லாத சமநிலையில்
    காலமெலாம் வீண்சொல் பேசாமோன நிலைபெறுவாய்.(4)

வேறு:

தனியிடத்தில் வீற்றிருந்து தவயோக சித்திபெற்று
    தன்மயமாய் பிரும்மமதை லயிக்கச் செய்து
இனியெங்கிலும் இருப்பதுவோ "ஆத்ம சொரூபந்தான்
    இவ்வையமெலாம் பொய்" யெனும் தத்துவத்தால்
மனித இனம் அனுபவிக்கும் முற்பிறவி கருமவினை
    மாசகல ஞானவை ராக்கியத் துறவுநிலை
புனிதமிகும் இப்பிறவியதன் பயனே பெற்று
    போற்றத்தகு பரப்பிரம்ம சொரூபமாவாய். (5)

— கலாபாரதி

இவ்விதழின் மையப் பகுதியில் இடம் பெற்றுள்ள வண்ணப் படங்கள்: ஹரலிங்கம், ஜனார்த்தனன், விக்னேஷ் ஸ்டுடியோ
ஆதிசங்கரர் படம் நன்றி: மீனாட்சிசுந்தரம்.

சிங்காரம் என்றொரு மனிதனும் வீரன் என்கிற குதிரையும்

சரியாகக் கள்ளுக்கடைக்கு முன்னால் வந்து நின்றது குதிரை. கழுத்தைத் திருப்பிச் சிங்காரத்தைப் பார்த்து 'ஹி... ஹி...' என்று கனைத்தது.

வண்டிக்குள் உட்கார்ந்திருந்த செங்கேணி கேட்டாள். 'இன்னா வண்டிக்காரரே?' உன்னை மாதிரியே ஆக்கி வச்சுட்டே உன் குதிரையையும்?'

சிங்காரம் தலை அசைத்துக் கொண்டான். 'ம்... என்னா பண்ணுவேன் நானு... மனுஷனோட பழகிப் பழகி அதுக்கும் மனுஷ புத்தி வந்துட்டுது... காலேலே கள்ளுத் தண்ணியை மோந்தாத்தான் நடப்பேங்குது...' என்று விட்டுக் குதிரையின் பக்கம் திரும்பி, 'போயுடுவம்பா... வரப்போ சாப்பிட்டுக்கலாம்... போ... போ... நகரு...' என்றான். சாட்டைக் குச்சியைச் சக்கரத்தில் கொடுத்து 'கடகடகட' என்று சத்தம் எழுப்பினான்.

குதிரை அவன் பக்கம் திரும்பி 'ஹி... ஹி' என்றது. ஆனால் நகர மறுத்தது. கால் மாற்றிக் கால் வைத்துக் கொண்டு கடையின் பக்கமாகத் தலையைத் திருப்பிப் பார்த்தது.

'இது இன்னாடியம்மா கூத்தா இருக்கு? போயும் போயும் ஒரு குதிரை, குடிக்கணும்னு சண்டித்தனம் பண்றதைப் பாரேன்...' என்று வண்டிக்குள் உட்கார்ந்து கொண்டிருந்த இன்னொரு பெண்ணான அஞ்சலை, கன்னத்தில் கை வைத்துக் கொண்டு சொன்னாள்.

'மனுஷனா இருந்தா இன்னா, மிருகமா இருந்தா இன்னா, பழக்க தோஷம்னு ஒண்ணு இருக்கே' என்று அஞ்சலையைப் பார்த்துச் சொன்ன சிங்காரம், "தோ பாரு வீரா! கையில் கால் காசு இல்லே... நேத்து ராத்திரி நான் ஒரு மடக் குடிச்சதோட சரி.. உனக்கே தெரியும். நீயும் பார்த்துக்கிட்டுத்தான் இருந்தே. விடிஞ்சி இம்மா நாழி ஆச்சி. ஒரு இட்டிலியைப் புட்டு வயித்துல போட வழியில்லே... இந்த நெலமையிலே கள்ளு குடிச்சுத்தான் தீருவேன்னு சண்டி பண்றியே, நான் இன்னா பண்ண? நானே குடிகாரன் தான். நீ என்னைக் காட்டியும் மோசமாப் பூட்டியேப்பா" என்று குதிரையிடம், மன்றாடும் தொனியில் சொன்னான்.

குதிரையாகிய வீரன், தலையைத் தரையைப் பார்த்துக் குனிந்து 'ப்ஹ்' என்று சத்தத்தோடு மூச்சுவிட்டு, 'ஹி' என்று சின்னக் குரலில் கனைத்தது. ஆனால் நகர மறுத்தது.

"தோ... வண்டிக்காரரே. அது மனசுக்குள்ள குடிக்கணும்னு நெனப்பு வந்துடுச்சி. பாவம். வாங்கிக் குடுத்துட்டுப் போயேன்... எங்களுக்கும் வேபாரத்துக்கு நேரமாவுதில்லே?"

"இன்னம்மா சொல்றே நீ... கையில காசு இருந்தா வாங்கித் தராமலா இருப்பேன் இன்னேரம்? ஒத்தை ஓட்டைக் காசு கூட இல்லியே... காலங்காத்தால போயி கடன் கேட்டா கடைக்காரக் கிராமணி என்னா நினைப்பாரு...?"

"சர்த்தான் போ... இந்தா வண்டிச் சத்தக் காசு. போயி, வாயில்லா சீவனுக்கு வாங்கிக் குடு..." என்று அஞ்சலை இடுப்பில் செருகியிருந்த துணிப்பையை உருவிக் காசை எடுத்துச் சிங்காரத்திடம் கொடுத்தாள். அவன் வாங்கிக் கொண்டான்.

காட்டாமணக்குச் செடிகள் வேலியாய் அடைத்திருந்த கள்ளுக்கடைக்குள் நுழைந்தான் சிங்காரம். தெருவை விட்டுக் கொஞ்சம் உள்ளே பதுங்கி, தென்னந்தோப்

பிரபஞ்சன்

புக்குள் இருந்தது கடை. மரத்து நிழலில் குத்துக்காலிட்டு உட்கார்ந்து, மொந்தையில் இருக்கும் கள்ளைக் குடித்தும், பூவரச இலையில் வைத்த ஏதோ ஒரு காரத்துணையைத் தின்றும் பொழுதைப் போன் செய்து கொண்டிருந்தார்கள் மனிதர்கள். உள்ளே மேடையில் பிரும்மாண்டமான சிங்கப்பூர் பானையில் கள்ளை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார் கிராமணி. பின்னால், சாணி மெழுகிய சுவரில் மதுரை வீரன், காத்தவராயன் படங்களும், நடுவே இராமலிங்க சுவாமிகள் படமும் மாட்டியிருந்தது. கிராமணியின் பக்கத்தில் வட்ட வட்டமான அலுமினியக் குண்டானில் கறி வறுவல், மீன் பொரியல், இரத்தப் பொரியல் முதலான பொருள்கள் மணத்தை வாரி வீசிக் கொண்டிருந்தன.

'கும்பிடறேன் முதலாளி' என்றான் சிங்காரம்.

கிராமணி, பானையிலிருந்த கள்ளை ஒரு மொந்தையில் மொண்டு அவன் முன்னால் வைத்தார்.

சிங்காரம் தலையைச் சொறிந்தான்.

''இன்னப்பா சமாசாரம்?'' என்றார் கிராமணி.

''ஒண்ணுமில்லே முதலாளி... இப்பத்தான் சவாரி ஏத்தினேன். கையில் பொத்தக் காசு இல்லே. நான் வரும் போது சாப்பிட்டுக்கலாம்னு வந்தேன். இந்தக் கழுதைதான் நவர மாட்டேன்னு சண்டித்தனம் பண்ணுது. சும்மா கொஞ்சோண்டு, ஒரு கொட்டாங் கச்சியிலே ஊத்திக் கொடுத்தீங்கன்னா...'' என்று முடிக்காமல்,,காசை அவர் முன் வைத்தான் சிங்காரம்.

''ஏண்டா குடிகாரா! நீதான் குடிச்சுக் கெட்டுப் போனவன். நீ எப்படியாவது ஒழி. அந்த வாயில்லாச் சீவனை ஏன் கெடுக்கிறே?'' என்று சீறினார் கிராமணி.

''ஐயாவே, சின்னக் கடை மணிக் கூண்டிலேந்து, மனுஷங்களையும் சுமந்துக்கிட்டு, அவங்களோட கூடைகளையும் சுமந்துக்கிட்டு வண்டியையும் இழுத்துக்கிட்டு லோல்படுதே இந்தப் பிராணின்னு, நான் சாப்பிடறப்போ, கொஞ்சம் கொடுக்கிறேங்க. அந்த ருசி கண்டுகிச்சு. கள்ளுக்கடை வாசலுக்கு வந்தாப் போதும், நவர மாட்டேங்குது... எனக்கும் கள்ளு வாங்கிக் கொடுடாங்குது... என்ன பண்றதுங்க ஐயாவே...'' என்றான் சிங்காரம்.

''சரி... சரி... காசு அப்புறம் கொடு. நீ எங்கே ஓடிப் போறே... இந்த மொந்தையைக் கையில் எடு...'' என்ற கிராமணி, அப்படியே பக்கவாட்டில் திரும்பி, ஒரு பூவரச இலையில், சிவந்து, காய்ந்த மிளகாய் மிதக்கிற ரத்தப் பொரியலைக் கொஞ்சம் கையில் எடுத்து நீட்டினார். சிங்காரம் வாங்கிக் கொண்டான். யாழ்ப்பாணத் தேங்காயின் கொட்டாங்கச்சியை எடுத்துக் கொஞ்சம் கள்ளை மொண்டு ஊற்றிக் கொடுத்தார்.

கள் சிந்திவிடாமல் வெகு ஜாக்கிரதையாக அவற்றை எடுத்துக் கொண்டு, காலியாய் இருந்த ஒரு தென்னை மரத்தின் அடி நிழலில் வந்து, அமர்ந்தான். கள்ளின் பச்சையான, புளித்த நெடியே அவன் சோர்வை விரட்டிப் புத்துணர்ச்சியை அளித்ததாய் உணர்ந்தான். வெளியே வீரனும், பெண்களும் காத்துக் கொண்டிருப்பது, உறுத்தவே, கொஞ்சம் அவசரமாகவே குடித்துப் பொரியலைத் தின்றான். மொந்தையை எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வெளியே வந்தான். தலையைத் திருப்பி வாசலையே பார்த்துக் கொண்டிருந்த வீரன், பொறுமை இழந்து கால் மாற்றிக் காலை வைத்துக் கொண்டிருந்தது. சிங்காரத்தைப் பார்த்ததும், சந்தோஷத்தோடு 'ஹி... ஹி' என்றது.

''வந்துட்டேண்டா. என் கண்ணு வந்துட்டேன்'' என்றவாறு குதிரைக்கு அருகே வந்து அதன் வாயருகில் கொட்டாங்கச்சிக் கள்ளைக் கொடுத்தான். அது, 'ப்ருஹ்' என்கிற சத்தத்தோடு கள்ளை விழுங்கி வைத்தது.

திருப்தியுடன் உள்ளே போய்க் கொட்டாங்கச்சியைக் கொடுத்துவிட்டு வந்து, சிங்காரம் வண்டியில் ஏறி உட்கார்ந்தான்.

''இன்னு வண்டிக்காரரே... நீயும் ஊத்திக்கிட்டு வந்துட்டியா...?'' என்றாள், செங்கேணி.

''ஹஹ்... ஹா...'' என்று பெரிதாகச் சிரித்த சிங்காரம், ''தாய்ப்பாலுக்கு அப்புறம் தென்னம் பாலுதான் தெரியுமா?'' என்று கண்ணடித்துக் கொண்டு சொன்னான்.

வாடிக்கை மீனவப் பெண்ணான அஞ்சலை, ''டாத்தியாடி... கிழவனுக்குத் திமிர்னு மப்பு வந்துருச்சி...'' என்றாள். வீரன் அரியாங்





ஆயிரக்கணக்கான கண் சிகிச்சை முகாம்களில் பணிபுரிந்து கண் ஆபரேஷன்கள் ஐந்து லட்சத்துக்கும் மேல் செய்துள்ள இவருடைய இந்தச் சாதனை 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெறுகிறது. ஒரே நாளில் 833 கண் ஆபரேஷன் களைச் செய்த சாதனையும்கூட! ஆனால் டாக்டர் மோடி சாதனையிலேயே 'கண்'ணாக இருப்பதில்லை. சேவையில்தான் 'கண்'ணாக இருக்கிறார். 43 ஆண்டுகளாக ஏழை நோயாளிகளின் நலன் கருதித் தொண்டாற்றி வரும் இவருக்கு இன்று வயது எழுபதானபோதிலும் வருடத்தில் முந்நூறு நாட்கள் கிராமங்களில் ஏழை நோயாளிகளுக்காகவே செலவிடுகிறார். தாம் பங்கு பெறும் கண் முகாம்களில் தாம் ஆபரேஷன் செய்த நோயாளிகள் அனைவரும் டிஸ்சார்ஜ் ஆன பின்புதான் முகாமிலிருந்து புறப்படுகிறார்.

ஆதாரம்: 'தி வீக்'

தகவல்: முரளி

குப்பத்தை நோக்கித் தாவிக் கொண்டு ஓடினான்.

சிங்காரத்துக்குச் சமீப காலமாகவே மரணத்தைப் பற்றிய பயம் வந்து கொண்டிருந்தது. முதுமையும், அதோடு சேர்ந்து வருகிற தள்ளாமையும் காரணமாக இருக்கக் கூடும். தனக்குப் பிறகு வீரனின் நிலை என்னவாகும் என்பது குறித்து அவனுக்கு முன் ஒரு கேள்வி எழும்.

ஒதியஞ்சாலை தண்ணீர்த் தொட்டிக்குப் பக்கத்தில் இப்போது நெகுநெகுவென்று வளர்ந்து நிற்கும் அரச மரம், அப்போது சின்னக் கன்றாக இருந்தது. வீரன் அவனிடம் வந்து சேர்ந்த போது, செம்பழுப்பு நிறமும், நெற்றியில் வெள்ளைச் சுட்டியுமாய், விளக்கிய பித்தளைக் குடம் மாதிரி இருந்தது. ராவுத்தர் சொன்னார். "அடேய் சிங்காரம். நல்ல வம்சம்டா இந்தக் குட்டி.... இத்தோட அப்பா யாருங்கறே? உடையார் பாளையம் ஜெமீன்தார் வச்சிருந்தாரே ஒரு குதிரை. அதான். குதிரையா அது? எமன்டா... எமன். இன்னா மிடுக்குங்கறே? இன்னா அறிவுங்கறே? என்னமோ அதன் தலையெழுத்து. அது வயித்துல பிறந்தது உன்கிட்டே வந்து சேர்ந்துருக்கு... நீ செத்தாலும் சரி... அதை மட்டும் பட்டினி போட்டுடாதே" என்றார் அவன் கையைப் பிடித்துக் கொண்டு.

ராவுத்தர் வார்த்தையைக் காப்பாற்றி விட்டான் சிங்காரம். புல்லில்லாமல் படுத்த நாள், ஒரு நாளும் இல்லை வீரனுக்கு. எத்தனையோ இரவுகள் பசியோடும், சில நாட்களில் அதுவும் இல்லாமல் வாழ்ந்து விட்டான் அவன். அவனுக்குப் பிறகு?

"வீரா! தாயும் பிள்ளையுமாப் பழகிட்டோம்... வரவர உடம்பு தள்ளலே. மார்வலி வேறே அடிக்கடி வந்து உயிரைப் பிடுங்கி எடுக்குது. ஏதாச்சும் ஆச்சுன்னா நீ இன்னா பண்ணுவே? யாருகிட்டே போவே? ஐயோ, மனுஷனாப் பிறக்கலாம், மிருகமாப் பிறக்கக் கூடாதுப்பா..."

அரியாங்குப்பத்தில் மீனவப்பெண்கள் இருவரும் தங்களின் மாபெரும் கூடைகளை இறக்கி எடுத்துக் கொண்டு போனார்கள். இதோடு சாயங்காலம் அவர்கள் மீண்டும் திரும்பும் வரையில், சில்லறைச் சவாரி ஏதேனும் வந்தால் அடிக்கலாம்.

காலை எதிர்வெயிலில் சாப்பிட்ட கள், சுரத்தாகத்தான் வேலை செய்தது. மாதா கோயில் ஓரம் வண்டியை அவிழ்த்துப் போட்டான். காய்ந்த புல்லை வண்டியின் அடிப்பகுதித் தொட்டிலிலிருந்து எடுத்து வீரனிடம் போட்டான்.

புல்லைத்தின்றுகொண்டிருந்தகுதிரையைப் பார்த்தான் சிங்காரம். 'எத்தனை விசுவாசமான சிநேகிதன். காலம் முழுக்க உப்பளம் மீனவப் பெண்களையும், மீன் கூடைகளையும் ஏற்றிச் சுமந்து, சுமந்து தனக்குச் சோறு போட்ட பிராணி. சரியாகக் கள்ளுக் கடையைப் பார்த்ததும் டக்கென்று நின்று கள் கேட்கிற சண்டித்தனம்.

உரக்கச் சிரித்தான் சிங்காரம். குதிரை தலையைத் தூக்கி அவனைப் பார்த்தது.

சோர்வாலும் களைப்பாலும் போதையாலும் கண் செருகிக் கொண்டு வந்தது சிங்காரத்துக்கு.

"அண்ணே... சிங்காரம் அண்ணே... எந்திருங்க... உங்களை எங்கே எல்லாம் தேடறது?" என்று சொல்லிக் கொண்டே வந்தான் கந்தன், சக குதிரை வண்டியோட்டி.

"இன்னாடா சங்கதி கந்தா?"

"மாரிமுத்தண்ணன் செ த் து ப் போச்சு..."

"இன்னாடா சொல்றே..." ஒரு பாறாங்கல் வந்து மார்பில் உட்கார்ந்து கொண்டது போல் இருந்தது. நாற்பது வருஷத்துச் சிநேகிதன். ஒரே பேட்டையில் பிறந்து வாழ்ந்து, வண்டி ஓட்டி, இப்போது செத்துப் போனான். அவனும் தன்னைப் போலவே அநாதை என்பது ஞாபகத்துக்கு வந்தது சிங்காரத்துக்கு.

"எப்படா அடக்கம்?"

"சாயங்காலம்தான்."

"ஏற்பாடெல்லாம் யார் பண்றது?"

"நம்ம தொழில் காரங்கதான்... நீங்க போங்கண்ணே... நானும் பின்னாலயே வந்துடறேன்..."

"நீ செய்திருக்கும் குற்றத்துக்கு நீ குடித்திருந்த மதுவே காரணம்!" என்று ஜட்ஜ் சொன்னதும் இவன், "சரியாச் சொன்னீங்க எஜமான்! இவங்கள்லாம் தப்புக்கு நான்தான் காரணம்னு சொல்றாங்க" என்று நீதிபதியைப் புகழ்ந்தான்.





மின்னும் மேனி
மெருகுக்கு ரெக்ஸோனா
Rexona
AND GLOWING SKIN
REXONA
மின்னி மிளிரும் மேனி...எந்நாளும் உங்கள் பொன்னான கனவு...நிறைவேற வரமளிப்பது ரெக்ஸோனா.
சரளம், கருவா, கிராம்பு, ஹபுஷா (தேவதாரம்) ஆகிய நாலு வகை இயற்கைத் தைலங்களின் நற்கலவையான ரெக்ஸோனா...சருமப் பராமரிப்பிற்கு இயல்பான வழியாகும்.
ரெக்ஸோனா
உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைக்கிறது.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.



வண்டியைப் பூட்டிக் கொண்டு கிளம்பினான் சிங்காரம். தவளக்குப்பம் கள்ளுக் கடையைக் கடக்கும்போது, வீரன் நிற்காமல் ஓடியது. அதற்கு ஒரு வேளை கள் போதுமானதாய் இருந்தது. இரண்டாம் முறை கொடுத்தால் கூடக் குடிக்காதே!

மாலை எல்லாம் வாங்கிப் போட்டிருந்தார்கள். இரவல் பெஞ்சில் நீட்டிப் படுத்திருந்தார் மாரிமுத்து. தூங்குவது மாதிரி இருந்தது. சிங்காரம் நண்பனின் பக்கத்தில் வந்து அவர் முகத்தைப் பார்த்தான். அவனை அறியாமலே அவன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

''யார்ரா காரியம் பண்றது?''

''மண்ணாங்கட்டி அண்ணே தான்'' என்றான் ஓர் இளைஞன்.

தண்டலுக்குப் போயிருந்த மண்ணாங்கட்டி திரும்பியதும் சிங்காரம் சொன்னான்.

''செலவுக் கணக்கைக் குறிச்சு வச்சுக்கப்பா. அப்புறமா என் பங்கை நான் குடுத்திடறேன். கையில் காசு இல்லே.''

''அதனாலெ என்னண்ணே! பொறுமையா குடுங்க.''

மாலை நாலு மணி போலச் சாராய பாட்டில்கள் வந்தன. சிங்காரத்துக்கும் கணிசமாகக் கொடுத்தார்கள்.

''பெரிய மனுஷன்... நிறைய ஊத்துங்கடா'' என்றான் மண்ணாங்கட்டி.

தள்ளு வண்டியில் மாரிமுத்தைப் படுக்க வைத்துக் கொண்டு ஊர்வலம் தொடங்கியது.

தாரை தப்பட்டை தாளம் ஆடச் சொல்லியது சிங்காரத்தை. கையையும் காலையும் விசித்து, ஆட்டித் தாளத்துக்கு ஏற்றாற் போல ஆடினான்.

''சவாஸ்... கிழவன் இன்னா மாதிரி ஆடறான் பாத்தியா?'' என்று ஒரு பாராட்டு வேறு சிங்காரத்தின் காதுகளில் விழுந்தது.

'டண்டணக்க, டண்டணக்க... டனக்... டனக்...' என்கிற பறைக்கு ஏற்றாற் போலக் குனிந்தும், விழுந்தும், எழுந்தும் வெறிபிடித்தாற்போல ஆடிக் கொண்டே வந்தான் சிங்காரம்.

ஆடி நிறுத்தியபோது இரைத்தது. ஊர்வலத்துக்கு முன்னால் இருந்து, 'ராசா மவனாட்டம்... மந்திரி மவனாட்டம்... எசமான் மவனாட்டம்... எங்களோட இருந்திரே... ரோசா மாலையோட... மல்லிகைப்பூ செண்டோட ரவுசோட போறீரே... எங்க துரை போறீரே...'' என்று ஒப்பாரிக் குரல் கேட்டது.

சிங்காரம், படுத்திருந்தவரின் முகத்தைப் பார்த்தான். திடீரென்று தானே பாடையில் படுத்திருந்தது மாதிரி தோன்றியது. திடுக்கிட்டு, உடம்பு சில்லிட்டுப் போயிற்று அவனுக்கு.

தான் போனால் வீரன் என்ன பாடும்? என்ற நினைப்பு வந்தது.

அடக்க மாட்டாமல் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான் சிங்காரம்.

அவர் ஒரு மாதிரிப் பேர்வழி! அவர் இறந்த ஆட்டோமாடிக் கதை,
கொண்டாடம் கூட 'நன்றி' சொல்வார்!

கிரீஷ்காசரவள்ளி :

சாருஹாசனுக்குச் சிறந்த நடிகர் விருதைப் பெற்றுத் தந்தவர்!



பெங்களூர் ராஜாஜி நகர் பகுதியில் உள்ள அந்தத் தெருவில் ஆறு முறை மேலும் கீழுமாக அலைந்தாயிற்று... அப்படியும் நான் தேடி வந்த வீட்டைக் கண்டுபிடிக்க முடிய வில்லை. 'சினிமா டைரக்டர் வீடு' என்ற அஸ்திரத்தைப் பிரயோகித்துப் பலரிடம் விசாரித்தும் பயனில்லை. சாருஹாஸனுக்குத் தலைசிறந்த நடிகர் பட்டத்தைப் பெற்றுத் தந்த இயக்குனர் கிரீஷ் காசரவள்ளியைப் பார்க் காமலேயே திரும்பி விடலாமா என்று யோசிக்க ஆரம்பித்தபோதுதான் ஸ்கூட்டரில் வந்த ஒருவர் அடையாளம் காட்டி அனுப்பி வைத்தார். அங்கே...

சந்தன கலர் ஜீன்ஸ் அணிந்து துளியும் பந்தா இல்லாமல் நம்மை வரவேற்றார் காசர வள்ளி. முன்னறிவிப்பு ஏதும் இன்றியே பேட்டி கொடுக்கச் சம்மதித்தார்:

கே: உங்களது கடைசி படமான 'மூரு தாரிகளு'வுக்கும் இப்போது பரிசு பெற்றுள்ள 'தபரனே கதே'வுக்கும் இடையே ஆறு வருட கால இடைவெளி இருந்திருக் கிறது. இந்த ஆறு வருட விலகலுக்குக் கார ணம் என்ன?

ப: மூன்று காரணங்கள் உண்டு. முதலாவ தாக, 'மூரு தாரிகளு'வில் ஏதோ தவறு நேர்ந்து விட்டதாக எனக்குத் தோன்றியது. அதற்குப் பிறகு என்னால் திரைப்பட இயக் கத்தில் முழு கவனம் செலுத்த முடியவில்லை. என்ன தவறு நேர்ந்தது என்பதைக் கண்டு பிடிக்கும் முயற்சியிலும், பெங்களூர் ஆதர்ஷா நடிப்புக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றியதிலும் காலம் கடந்தது. வேலையை ராஜினாமா செய்துவிட்டு, என் மனத்துக்குத் திருப்தியளிக்கும் வகையில் முதல் படத்தில் நடந்த தவறு என்ன என்ப தையும் அதன் காரணத்தையும் கண்டுபிடித்து நிமிர்வதற்குள் ஆறு வருடங்கள் ஓடிவிட் டிருந்தன.

இரண்டாவது காரணம் திரைப்படத் துறையில் ஏற்பட்டிருந்த தேக்க நிலை.

மூன்றாவது — சரியான தயாரிப்பாளர் கள் கிடைக்காமல் போனது.

கே: சிக்கல் நிறைந்த 'தபரனே கதே' யின் இயக்கத்தை மேற்கொள்ளப் பயந்து பல இயக்குனர்கள் பின்வாங்கியுள்ள போது நீங்கள் எப்படித் துணிந்து அதில் ஈடுபட்டீர் கள்?

ப: ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர் ஒருவர் தமக்குச் சேர வேண்டிய பென் ஷனைப் பெற எவ்வளவு அவதிப்பட வேண் டியதிருக்கிறது என்பதுதான் மையக் கருத்து. அதிகார வர்க்கத்தின் அகம்பாவம்; அரசு அலுவலகங்களில் விதியாகிப்போன சிவப்பு நாடா போன்றவற்றை மக்கள் மனத்தில் பதியும் வண்ணம் சித்திரிப்பதோடு கதா நாயகனின் மன ஓட்டத்தையும் அழுத்த மாகச் சொல்வது என்பது ஒரு சவாலாகவே இருந்தது. அந்தச் சவாலை ஏற்க வேண்டு

- கிரீஷ் காசரவள்ளிக்கு இருபத்தியாறு வயது தான் ஆகிறது.
- திரைப்படத் துறைக்குள் நுழையுமுன் பி. பார்ம் பட்டம் பெற்றவர்.
- இவரது முதல் படம் — தேசிய விருது பெற்ற 'கட சிரார்த்தா.'
- குறைந்த படங்களையே இயக்கியிருந்தாலும், எல்லாப் படங்களிலுமே சமூகப் பிரச்னை மேலோங்கியிருக்கும்.
- இவர் மனைவி வைஷாலி நாடக நடிகை.
- 'தபரனே கதே' கன்னட மகாகவியான குவெம்பு வின் மகன் பூர்ண சந்திர தேஜஸ்வி எழுதி,பல முறை நாடக மேடையேறி இப்போது திரைப் படமாகியுள்ளது.

காசரவள்ளி பற்றி சாருஹாசன்



● சாருஹாசன்

ஆழமான வசனம், அழுத்தமான உணர்ச்சிகளின் வெளிப்பாடு — இவை தான் ஒரு படத்துக்குத் தேவை என்று வலிமையாக நம்புகிறவர் டைரக்டர் காசரவள்ளி. ஒரு முனிசிபாலிடி கடைநிலை ஊழியரின் குரலில் இருக்க வேண்டிய அதைரியம் உங்கள் குரலில் இல்லை என்று என் குரலை விமர்சித்துத் திருத்தினார். இலக்கியம், சினிமா இரண்டு துறைகளிலும், நிறையத் தெரிந்து வைத்திருக்கிறார். அவருக்கு நிகராக விஷயங்கள் தெரிந்து வைத்துள்ள ஒரே நபர் கமல் தான்.

சிரத்தை இன்னொரு பழக்கம். தினமும் ஷூட்டிங்கிற்கு வரும்போது, அன்றைய காட்சிகள் பற்றிய முழு விவரங்களையும் ஷாட் பை ஷாட்டாகத் தனித்தனித் தாள்களில் எழுதி எடுத்து வருவார். அவர் ஒருநாள் ஷூட்டிங்கிற்கு வர முடியாமல் போனால்கூட, அவரைப் போன்ற சிந்தனை உள்ள இன்னொருவர், அவர் எழுதி வைத்துள்ள குறிப்புகளைக் கொண்டு,



● காசரவள்ளி

புகைப்படம்: எஸ். விஜயன்

காட்சிகளை எடுத்து முடித்துவிடலாம். அத்தனை கச்சிதமான முன்னேற்பாடுடன் வருவார்.

பொறுமைசாலி அவர். அவசர அடி எல்லாம் இன்றி — நிதானமாய்ச் செயல்படுவார். காட்சியை எடுக்கும் முன்பு, இப்படி நடிக்க வேண்டும் என்று துல்லியமாய்ச் சொல்லி விடுவார். எதிர்பார்த்தபடி வருகிறவரை விட மாட்டார்.

கேட்டவர்: சந்திரமௌலி.

என்ற உந்துதலில்தான் இப்பணியை மேற்கொண்டேன்.

கே: சாருஹாசனுக்குத் தேசிய விருது கிடைக்கும் என்று எதிர்பார்த்தீர்களா?

ப: சாருவுக்கு என்றே ஏற்படுத்தப்பட்டது போல் அப்பாத்திரம் கனகச்சிதமாக அமைந்தது. படம் பார்ப்பவர்கள் நடிப்பு என்றே உணர முடியாத அளவுக்கு வெகு இயல்பாகப் பாத்திரத்தினுள் பொருந்திவிட்டார் அவர். அதனால் இந்த விருது கிடைக்கும் என்பது நான் எதிர்பார்த்ததுதான்.

கே: சாருவை இந்த வேடத்திற்கு எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்?

ப: முதலில் 'தபரனே கதே'யை ஹிந்தியிலும் கன்னடத்திலும் ஒரே நேரத்தில் தயாரிக்கும் எண்ணம் இருந்தது. அதனால் நஸ்ருதீன் ஷாவை நடிக்கச் சொல்லிக் கேட்டோம். ஆனால் தேதிகள் ஒத்து வரவில்லை. இதற்கிடையே 'மீண்டும் ஒரு காதல் கதை'யில் சாருவின் நடிப்பைப் பார்த்துவிட்டு அவருடைய புகைப்படத்தை ஆர்ட் டைரக்டரிடம் காண்பித்தேன். அவர் சாருவை நீளமான தலைமயிருடனும், குட்டையான தலைமயிருடனும், மீசை தாடியோடும், அவை இல்லாமலும் பல கோணங்களில் வரைந்து பார்த்துத் திருப்தி தெரிவித்தார். அதற்குப் பிறகு சாருவுடன் பணியாற்றியது ஒரு மனோகரமான அனுபவம்.

கே: விருது கிடைத்த செய்தி அறிந்ததும் எப்படி உணர்ந்தீர்கள்?

ப: அப்போது கார்வாரில் அடுத்த படம் எடுப்பதற்காக லொகேஷன் தேடிக் கொண்டிருந்தேன். வானொலி மூலம் செய்தி அறிந்ததும் சந்தோஷமாக இருந்தது.

கே: நீண்ட இடைவெளிக்குப் பிறகு திரைப்பட இயக்கத்திற்குத் திரும்பியது எப்படியிருந்தது?

ப: நன்றாக சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டு விட்டவர்கள் நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் சைக்கிளை நாடினால், ஓட்ட முடியுமோ என்ற பயத்துடன்

நாடுவதில்லை. அதைப் போல்தான் திரைப் பட இயக்கமும். மேலும், நான் ஓய்வாக இருந்த நேரங்களில் என்னை இப்பணிக்காக இன்னும் கச்சிதமாகத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தேன். அதனால் எனக்கு எந்தப் பிரச்னையும் தோன்றவில்லை.

கே: படப்பிடிப்பின் போது ஏதேனும் பிரச்னைகள் எழுந்தனவா?

ப: சாருஹாசனுக்குக் 'காண்டாக்ட் லென்ஸ்' பொருந்தாததால் அவர் கண்ணீர் விட்டு அவதிப்பட்டார்! மற்றபடி குறிப்பிடும் படியான வேறு பிரச்னை இல்லை.

கே: சுமார் ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு கன்னட மொழிப் படம் ஒன்றிற்குத் தேசிய விருது கிடைத்திருக்கிறது. இடையில் ஒரு நீண்ட தொய்வு ஏற்படக் காரணம் அரசாங்கம் ஊக்கமளிக்காதா அல்லது ரசிகர்களிடையே வரவேற்பு இல்லாமல் போனதா?

ப: படத்துறையில் ஏற்பட்ட ஆர்வமின்மை, தளர்ச்சி தவிர அரசின் குறைவான நிதியுதவியும் காரணம். இப்போது, மாநில அரசு உதவித் தொகையைக் கணிசமாக உயர்த்தியுள்ளது. எனவே இனிமேல் நிலைமை சீரடையும் என்று நினைக்கிறேன். தொலைக்காட்சியும் இந்த விஷயத்தில் நிறைய உதவலாம். மண்டல சார்பில்லாமல், எல்லா மண்டல மொழிப் படங்களையும் வரவேற்று, சமமாகப் பாவித்துத் திரையிட வேண்டும். அப்படிச் செய்தால் மக்களிடையே ஆர்வம் அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. பாரபட்சக் கண்ணோட்டத்தை விலக்காவிட்டால் இந்தியர்கள் எல்லோரும் 'ஓரினம்' என்ற நினைவை நிலைநிறுத்த முடியாது.

கே: திரைப்படத்துறைக்குள் ஆர்வத்துடன் நுழைபவர்கள் ஆரம்பத்தில் ஒன்றிரண்டு உயர்ந்த படங்களை எடுத்துவிட்டு, உடனே வாணிப ரீதியிலான தரம் தாழ்ந்த படங்களை நாடிப் போகிறார்கள். நீங்களும் அவ்வாறு செய்து விடுவீர்களா?

ப: நான் தேர்ந்தெடுக்கும் கதைகளைப் படமாக்கத்தயாரிப்பாளர்கள் இருக்கிறவரை என்னுடைய கொள்கையை 'விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

கே: திரைப்படத் துறையில் உங்களை அதிகம் கவர்ந்த முன்னோடிகள் யார், யார்?

ப: பூனா திரைப்படக் கலைக்கல்லூரியில் மாணவனாக இருந்தபோது பார்த்த அயல்நாட்டுப் படங்களின் இயக்குனர்கள் எல்லோருமே என்னைக் கவர்ந்தார்கள். இந்திய இயக்குனர்களுள் என்னைக் கவர்ந்தவர் சிவராம்காரந்த்; இலக்கிய உலகத்தில் — கன்னடக் கவிஞரான குவேம்பு, எனது மாமா கே. வி. அப்பண்ணா ஆகியோர். ஆனால் இவர்கள் யாருடைய சாயலும் தெரியாமல் எனக்கென்று ஒரு தனிப்பாணியைக் கவனமாக உருவாக்கிக் கொண்டுள்ளேன்.

கே: நீங்கள் அறிமுகபபடுத்திய நடிக, நடிகையருள் தலைசிறந்தவர்...?

ப: என்னுடைய ஒவ்வொரு படத்திலும் நடிக நடிகையர்கள் அந்தந்தக் கதாபாத்திரத்துக்கு முற்றிலும் பொருந்தும் வகையில் மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் அனைவருமே அற்புதமாகச் செய்திருப்பதால் தனிப்பட்டு யாரையும் குறிப்பிட முடியாது.

கே: புதிதாக இத்துறையில் நுழையும் இளைஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ப: தன்னம்பிக்கையுடன், ஆழ்ந்து சிந்திக்கும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டு செயல்பட்டால் நிச்சயமாக வெற்றி பெறலாம்.

பேட்டி: **பெந்தகாளூரான்**

ஒரு 'மினி' விமர்சனம்

'நீபரனே கதே' நெஞ்சில் ஒரு சோகக் கசண்டாய் அப்படியே நிற்கிறது. இது படத்தின் சிறப்பு. ஆர்ட் பிலிம் எனும் சாபத்தில் கட்டாயமாக எடுத்த அரை இருட்டுக் காட்சிகள், அரசாங்க ஃபைலை விட நிதானமாக நகரும் கதை(?) — இவற்றைக் கொட்டாவியோடு சேர்த்து அடக்கிக் கொண்டால்,

'அரசாங்கமும், அதன் ஃபைல்களும்' என்ற முதுகெலும்பின் எக்ஸ்ரே.



பத்திரிகைக் காட்சி முடிந்ததும் பிலிம் நியூஸ் ஆனந்தனிடம், ''படம் எப்போ ரிலீஸ்?'' என்றோம்.

சின்னதாய்ப் புன்னகைபுரிந்தார். ''கவலையே படாதீங்க. இந்தப் படத்துக்கு எந்த டிஸ்ட்ரிபியூட்டர் வருவான்? இந்த மாதிரி ஸ்பெஷல் புரொஜக்ஷன்களோடு சரி. படம் ரிலீஸே ஆகாது. டோண்ட் ஒர்ரி....''

ஏதாவது ஒரு ராத்திரித் தூக்கத்தைக் கலைத்து டி. வி. யில் காட்டமலா போய்விடுவார்கள்? நிச்சயம் பாருங்கள்.

— ஜெயமன்மதன்

• கடன் வாங்குபவர் 'என் வாழ்நாள் முழுதும் நான் நன்றிக் கடன் பட்டிருப்பேன்' என்றால், உங்கள் "கடன் திரும்பி வரப் போவதில்லை என்று அர்த்தம்!



மறு ஒலிபரப்பு

"அப்பாடா! உன்னை இங்கே வர வழைக்கிறதுக்குள்ள பெரும்பாடாப் போச்சே! இப்படி உட்கார்...."

சிரித்தபடி சொன்னார் சபாபதி.

"பார்வதி! பிள்ளையாண்டானுக்கு காப்பி கொண்டா...."

உட்புறம் நோக்கிக் குரல் கொடுத்தார்.

"என்ன விஷயம் மாமா? எதுக்காக வரச் சொன்னேள்....?"

"சொல்றேன் ராஜா. முதல்ல கொஞ்ச நேரம் காத்து வாங்கு.... ஃபேனைத் தட்டி விடறேன். முகமெல்லாம் இப்படி வேர்த்துப் போயிருக்கே! எங்கே சுத்திட்டு வரே....?"

பித்தானை அழுத்தினார். மின் விசிறி சுழலத் தொடங்கிற்று.

"மங்களாம்பிகா வரைக்கும் போயிட்டு வரேன்...."

"டிபன் சாப்பிடவா....?"

"ஆமாம்...."

"சாப்பாட்டுக்கு என்ன பண்ணப் போறே?"

"ஆபீசுக்குப் பக்கத்துலயே வெங்கட்ரமணா ஓட்டல்ல....."

"சரி, எத்தனை நாளைக்கு இது நடக்கும்?"

"ஏன் மாமா? வேலைக்குப் போறேன். சம்பாதிக்கறேன். செலவழிக்க முடியாதா?"

"ராஜா! உன்னோட கோபம் இன்னும் அடங்கலே போலிருக்கு. இந்தக் கோபம், ரோஷம், வைராக்கியம் எல்லாம் இயற்கை நமக்குக் கொடுத்திருக்கிற வரப்பிரசாதங்கள்னு நினைக்கறே இல்லையா....?"

"அப்படியில்லே மாமா. அவ என்ன கேள்வி கேட்டா தெரியுமா?"

"எல்லாத்தையும் கேட்டுண்டுதான் இருந்தேன். நீ போட்ட கூச்சல்லே இந்தத் தெருவே கிடுகிடுத்ததே!"

"கூச்சல் மட்டும்தானே மாமா? அவ பேசின பேச்சுக்கு அவளை வெளியே தள்ளி...."

"ஊகூம். அதெல்லாம் ரொம்ப தப்புப்பா. ஒரு நல்ல முகூர்த்தத்துல அவளைத் தொட்டுத் தாலி கட்டியிருக்கே. தன்னோட அம்மா, அப்பா, கூடப் பிறந்தவா எல்லாரையும் விட்டுட்டு ஆயுசுக்கும் நீதான்னு நம்பி உன்னோட குடித்தனம் நடத்த வந்திருக்கா. அப்படியிருக்கறப்ப அவளை வாய்க்கு வந்தபடி நீ பேசலாமா....?"



அவர்: என் எழுத்துக்கு ஏக கிராக்கி. எழுதிய மறு நொடியே காசாகிடும்!

முத்தானர்: அப்படியா? ரொம்பச் சந்தோஷம்! எப்படி என்னதான் எழுதறீங்க? மாதாந்திர நாவலா, சிறுகதையா, கட்டுரைகளா, தொடர்கதையா....?

அவர்: ஊஹூம்.... அதெல்லாம் இல்லே. ஓட்டல்ல பில் எழுதறேன்!

— ஆர். கே. அருள்செல்வன்.

''உன்னைக் கட்டிண்டு என்ன சுகத்தைக் கண்டேன்னு கேட்கறா. 'முதல்லயே தெரிஞ்சிருந்தா இந்தக் கல்யாணம் என்கிற கிணத்துல காவு கொடுத்திருக்க மாட்டேன்'னு பேசினா.....''

''எக்கச்சக்கமா வேண்டாத வார்த்தைகளைப் பேசி அவ மனசை ரணமாக்கிட்டே. அதான் அப்படிச் சொல்லியிருக்கா...''

''அப்படி என்ன மாமா சொல்லிட்டேன்?''

''ஒரு சின்னத் தப்பு. அதைப் பெரிசு படுத்தி அவ குடும்பத்தையே நாற அடிக்கற மாதிரி அப்பன், ஆத்தான்னு.... சரி சரி. முதல்ல காப்பியைக் குடி. ஆறிப் போறது. வயிறு நிரம்பச் சாப்பிட்டியா இல்லையா...?''

அவன் பதில் சொல்லாது காப்பியைப் பருகி முடித்தான்.

''ராஜா! நமக்கு நாமே சத்ரு. நல்லது பொல்லாததுக்கு நாமேதான் காரணம். இந்த நாக்கு இருக்கே அது மகா சத்ரு. கீதையில பகவான் என்ன சொல்லியிருக்கார் தெரியுமா? சகிக்க முடியாத துன்பங்கள் வந்தாலும், துடிக்காத மனத்தை உடையவனாகவும், சுகம் வந்தாலும் அதில் பற்றற்றவனாகவும், விருப்பம், அச்சம், கோபம் இல்லாதவனாகவும் இருந்தா அவனோட ஞானம் நிலைச்சிருக்குமாம். இதுலேருந்து என்ன தெரியறது....?''

''கோபத்தை அடக்கணும்னு சொல்றேள். மாமா! அவளோட கொட்டத்தை, அவளோட திமிரை எப்படி அடக்கறதுன்னு கொஞ்சம் சொல்லுங்களேன்....!''

''அப்படி என்னப்பா பெரிய தவறு நடந்து போச்சு....? பெத்தவாளைப் பார்க்கணும் போல இருக்குன்னா. அது தப்பா? அதுக்கு நீ என்ன சொன்னே? போனா அங்கேயே இருந்துரு. திரும்பி வராதேன்னே. அவ மனசு சங்கடப்பட்டதுல ஆச்சரியம் என்ன இருக்கு? அந்த வருத்தத்துல அவ ரெண்டு வார்த்தை பேசியிருக்கலாம்....

அவன் அமைதியாக இருந்தான்.

''முடிவாச் சொல்றேன். பக்கத்து வீடு எதிர் வீடுன்னு இல்லாம ஒரே குடும்பம் மாதிரி நினைச்சு ஒருத்தருக்கொருத்தர் அனுசரணையா பழகிண்டு வர்றோம். அந்த உரிமையில நான் அதிகப்படியா பேசிட்டேன்னு நினைக்கிறேன். தயவு பண்ணி இந்தக் கோபத்தை விட்டொழி. இதமா நாலு வார்த்தை அவகிட்ட பேசு. பெண்டாட்டி என்கிறவ நமக்குச் சமைச்சுப் போடற, துணி துவைச்சுப் போடற, உபாதை வந்து படுத்துக்கிடந்தா காலைக் கையைப் பிடிச்சு விடற மனுஷ எந்திரமா நினைக்கக் கூடாது. நமக்குள்ள உரிமை அவளுக்கும் இருக்கு. நம்மைப் போல அவளுக்கும் ஆசைகள், அபிலாஷைகள் இருக்கலாம். அதனால நான் என்ன சொல்ல வரேன்னா....

ஒரு நீண்ட சொற்பொழிவை அவனே இடைமறித்து நிறுத்தினான்.

''சரி மாமா. ரெண்டு முழம் பூ வாங்கிக் கொடுத்து, ஒரு சினிமாவுக்குக் கூட்டிண்டு போய், ஒரு ஓட்டல்ல ஸ்வீட் காரம் காப்பியோட விருந்து வச்சு அவளைச் சமாதானப் படுத்திடறேன். போதுமா....?''

''என் காதால இப்படிக் கேட்கறப்ப எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? ராஜா! தவறை உணர்ந்து தன்னைத் திருத்திக்கறவன்தான் மனுஷன். அந்த மனுஷத் தன்மை உன்கிட்ட நிறையவே இருக்கு. உனக்கு எந்தக் குறையும் வராது. நீ நன்னா இருப்பே. போயிட்டு வா....''

முக மலர்ச்சியோடு வழியனுப்பி வைத்தார்.

புன்சிரிப்போடு புறப்பட்டுப் போனான்.

அரை நாள் சென்ற பின் —

''யாரங்கே....?''

ஓங்கிக் குரல் கொடுத்தார் சபாபதி.

பார்வதி பதறியவளாக இடத்திற்கு வந்தாள்.

''சட்டையில ரெண்டு பித்தான் அறுந்து விழுந்திருக்கு. தைச்சு வைன்னு சொன்னேன் இல்லே....?''

''ஆமான்னா! வேலைத் தொந்தரவுல மறந்து போச்சு....''

''அது எப்படி மறந்து போகும்? மூணு வேளையும் சம்பிரமா உட்கார்ந்து மூச்சு முட்டச் சாப்பிடறே இல்லே.... அதான் உடம்பு கொழுத்துப் போய் இப்படி எல்லாமே மறந்து போறது....''

''ஏன்னா அப்படிப் பேசறேள்... கொழுப் பெடுத்து அப்படி என்ன நான் தப்புக் காரியம் பண்ணிட்டேன்....?''

''எதிர்த்துப் பேசாதே. பல்லை உதிர்த்துப் பிடுவேன். கொட்டிக்கறது, தலைப்பை விரிச்சுப் போட்டுத் தூங்கறது தவிர பெரிசா என்ன வெட்டி முறிக்கிறே? இந்த லட்சணத்துல பேச்சு வேறே. உங்களையெல்லாம் நிக்க வைச்சுச் சுடணும்மா.....''

சற்று முன் வரை கீதோபதேசத்தை மறு ஒலிபரப்புச் செய்து கொண்டிருந்த சபாபதியின் தர்பார் நாடகத்தை அடுத்த வீட்டி லிருந்து சுவாரசியமாக ரசித்துக்கொண்டிருந்தார்கள் ராஜாவும் அவன் இளம் மனைவியும்!

— **விநோதானந்த்**

நீங்கள் கேட்டவை — தராசு

நடிகர் மு.க.ஸ்டாலின் எப்படி?



* டேக் ஆஃப்...

* சாமா, சீர்காழி

? கோயிலுக்குச் சென்றால் யார் பெயரில் அர்ச்சனை செய்யச் சொல்வீர்கள்?

! சுவாமி பெயரிலேயே செய்துவிட்டால் அந்தக் கணமாவது சுயநலம் அற்றுப் போவதாக ஒரு நினைப்பு. எனது நண்பர்கள், உறவினர்களின் பிறந்த நாள், திருமண நாள் என்று சமீபத்தில் ஏதேனும் விசேஷம் இருக்குமானால் அவர்கள் பெயரில் அர்ச்சனை செய்யச் சொல்வதும் உண்டு.

* எஸ். தமீஜுதீன், பண்ருட்டி

? நடிகர் மு.க. ஸ்டாலின் எப்படி?

! டேக்—ஆஃப் சரியில்லை. ஆபத்தின்றி லேண்ட் ஆனால் சரி!

* கே.கே. பழனிச்சாமி, ஈரோடு

? எம்.ஜி. ஆர். ஒரு நடமாடும் பல்கலைக் கழகம் என்று காளிமுத்து கூறுகிறாரே?

! இதையும் தாங்கிக் கொண்டு ஓர் இரண்டாவது இடமா? ஐயோ, பாவம்!

* எம்.ஜி. சேகர், அந்தநல்லூர்

? விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது, விவாதமாக்குவது எது நல்லது?



! குறை கூறி விமர்சிக்கப்படும்போது விமர்சனத்துக்கு உள்ளானவர் அதை ஏற்றுக் கொள்ளும் மன உறுதி பெற்றிருப்பது நல்லது. விமர்சனம் தவறானதாக இருந்தால் தன் நிலை விளக்கம் தருவதும் நல்லதே. விவாதம், விதண்டாவாதமாகும் போதுதான் கெடுதல்.

* பா. சம்பத், திருச்சி

? சரண்சிங் மறைவு குறித்து...?

! தென்துருவமும் வடதுருவமும் இணைந்தது போன்ற ஒரு விசித்திரப் பிறவி அவர். கொள்கையில் இம்மியளவு கூட விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று பிடிவாதம் செய்து பலரைப் பகைத்துக் கொண்டவர், வேறு பல சந்தர்ப்பங்களில் மாற்றுக் கொள்கை ஆசாமிகளுடன் அட்ஜஸ்ட் பண்ணிக் கொண்டு போனதால் நாட்டின் மிக உயர்ந்த பதவியை எட்டிப் பிடித்தார்! தனிப்பட்ட முறையில் மிக மிக எளிமையாக வாழ்ந்ததால், எதற்காக அமைச்சர்களும் அதிகாரிகளும் லஞ்ச ஊழல்காரர்களாக மாறுகிறார்கள் என்பதையே புரிந்து கொள்ள முடியாமல் திணறினார் — வெகு காலம்! அவர் பிரதமராக வருவதற்காகக் கட்சியை உடைத்தது, சமீபத்திய சரித்திரம். அதற்குப் பல ஆண்டுகள் முன்பே காங்கிரஸையும் உடைத்திருக்கிறார். உ.பி.யில் சம்பூர்ணானந்த் அமைச்சரவையில் இருந்து கொண்டே, "இங்கு காங்கிரஸும் காங்கிரஸ் அரசும் சேற்றிலே புரள்கின்றன" என்று நேருவுக்குக் கடிதம் எழுதினார்! சம்பூர்ணானந்த் பதவி இழந்தார். ஆனால் முதல்வர் பதவி சரண்சிங்குக்குக் கிடைக்கவில்லை. காங்கிரஸ் மேலிடம் அதை மாறி மாறி யார் யாருக்கோ வழங்கிக் கொண்டிருந்தது. சட்ட சபை காங்கிரஸ் கட்சியை உடைத்து, எதிர்க்கட்சியுடன் சேர்ந்து வோட்டளித்து, எதிர்க் கட்சி அமைச்சரவை உருவாக வழி வகுத்தார் சரண்சிங். அப்போதுதான் எழுகட்சிக் கூட்

டணிக்குத் தலைமை வகித்தார். பல்வேறு கட்சியினரையும் தமது பிடிக்குள் வைத்திருக்க ராஜ்நாராயணன் உதவியை நாடினார். அந்த அமைச்சரவை நீண்ட காலம் நிலைக்கவில்லை என்றாலும் அச்சமயம் லஞ்ச ஊழல் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் இருந்தது. அவர் கொணர்ந்த நிலச் சீர்திருத்தங்கள் கேரளத்தில் கம்யூனிஸ்டு அமைச்சரவை கொண்டு வந்த சீர்திருத்தங்களை விடச் சிறப்பானதாகக் கருதப்பட்டது. நகர்ப்புறத்தில் தலைவரின் குடும்பத்தில் பிறந்ததால் தலைவராகாமல், கிராமப்புறத்தில் பிறந்து விவசாயிகள் ஆதரவுடன் தலைவரானவர் சரண்சிங். 1956—லேயே நேரு, வி.டி. கிருஷ்ணமாச்சாரி போன்றவர்களுடன், "கூட்டுறவு விவசாயம் வெற்றி பெறாது" என்று யதார்த்தமாக வாதாடினார். வேலை நிறுத்தத்தின் பரம விரோதியான அவர், 'நாட்டின் முன்னேற்றம், கிராமப்புறங்களின் முன்னேற்றமே' என்று காந்தியைப் போலவே தீவிரமாக நம்பினார். நேருவுடைய சோஷலிஸம், கம்ப்யூட்டர் விஞ்ஞான யுகம் ஆகியவற்றின் பரம விரோதி. அவருக்கு இரண்டு பெரிய



* க.வி...தொடர்



* விசித்திரப் பிறவி

குறைகள் இருந்தன. ஒன்று, காந்திஜி பட்டேலைப் பிரதமராக்காமல் நேருவுக்கு ஆதரவு தந்து நாட்டைக் குட்டிச்சுவராக்கினார் என்பது. மற்றொன்று, ஜே.பி. தம்மைப் பிரதமராக்காமல் மொரார்ஜிக்கு ஆதரவு அளித்து நாட்டைக் குட்டிச்சுவராக்கினார் என்பது!

*** ஜி. மெய்யப்பன், லெட்சுமாங்குடி**

? ஆதித்தனார் உருவச் சிலையை எம்.ஜி. ஆர். திறந்து வைத்தது சரிதானா?

! இதே ஆதித்தனாரையும் அவர் பத்திரிகையையும் தாக்கித்தானே எம்.ஜி. ஆர். 'சந்திரோதயம்' படத்தில் நடித்தார். அதையெல்லாம் ஒதுக்கி விட்டுச் சிலை திறக்க முன் வந்தது பெருந்தன்மையான செயல்தான். கருத்து மாறுபாடு வேறு, மனித நேயம் வேறு என்பதை உணர்த்துகிற காரியம்தான். ஆனால், 'அந்த விழாவுக்குப் போனதால் ஜனாதிபதியை வரவேற்க விமான நிலையம் போக முடியவில்லை' என்று சாக்குப் போக்கு சொன்னதுதான் என்னமோ மாதிரி இருந்தது.



* ஆமை போல...



* இதையும் தாங்கும் இதயம்

*** வித்யா, தர்மபுரி**

? கனில் காவஸ்கரின் புதிய டீ.வி. தொடர் பற்றி....?

! கிரிக்கெட் பற்றிச் சரியாகத் தெரியாதவர்கள் கூட ரசிக்கும்படி அமைந்த நிகழ்ச்சி. கிரிக்கெட் 'மலரும் நினைவுகள்!'. சாதனை படைத்த வீரர்களை மீண்டும் பார்க்கச் சந்தர்ப்பம் அளித்த காத்ரேஜ்—காவஸ்கருக்கு நன்றி.

*** அ. சாம்பசிவம், சென்னை—12**

? பண்ருட்டியார் பற்றித் தங்கள் கருத்து?

! அவ்வப்போது தலைநீட்டித் தாம் இருப்பதைப் புலப்படுத்திக் கொண்டு மெல்ல ஊர்ந்து செல்லுவார்; தலைக்கு ஏதாவது ஆபத்து வரும்போலிருந்தால், 'கபக்'கென்று தலையை ஓட்டுக்குள் இழுத்துக் கொண்டு அடங்கி விடுவார் — ஆமை போல.

*** இரா. மகராசன், நெல்லை**

? மாநிலங்களவை உறுப்பினர் வை. கோபாலசாமி அவர்களைப் பற்றி....?

! அங்கு அவரும் மாறனும் மக்களவையில் டாக்டர் கலாநிதியும் இருக்கிறார்களோ, தமிழகத்தின் குரல் அவ்வப்போது நாடாளுமன்றத்தில் ஒலிக்கிறதோ. இல்லாவிட்டால் இருட்டடிப்புத்தான் — அநேகமாக.

*** ஜி. ராணி குமார், சென்னை—11**

? திரையுலகில் காணாமல் போனவர்கள்; அரசியலில் காணாமல் போனவர்கள் — ஒப்பிடுக.

! திரையுலகில் காணாமல் போனவர்களுக்கு அரசியல் கைகொடுக்கும். அரசியலில் கைவிடப்பட்டவர்களுக்குத் திரையுலகம் கை கொடுக்காது.

*** ரூ 15 பரிசு பெறுபவர்:**
ஜி. மெய்யப்பன்,
59, கடைத் தெரு,
வி.பி.எம். சாலை,
லெட்சுமாங்குடி—614 102



கொஞ்சமே பிஜ், கொஞ்சுமே பளபளப்பு
மிஞ்சுமே பிஜ், மிச்சமே பணம்.
SUPER BIZ
CLEANING POWDER
ஸூப்பர் பிஜ்—
பாத்திரங்களுக்கு அளிக்கிறது பளபளப்பு...ஒளிவிடும் நட்சத்திரம் போல! பாத்திரங்களுக்கு மட்டுமல்ல...தரை, வாஷ்-பேஸின், டைல்ஸ், கதவு மற்றும் ஜன்னல்களின் கண்ணாடிகள் இவை அனைத்திற்கும் பளபளப்பு அளிக்கிறது. பிஜ்—சிறிது உபயோகித்தாலே சிறப்பான பளபளப்பு. விலையும் குறைவு—சிக்கனமோ சிக்கனம்.
கோத்ரெஜ்
ஸூப்பர்
பிஜ்
துலக்கும் பவுடர்
வேலை...விலையை விட அதிகம்
SUPER BIZ
multipurpose
CLEANING POWDER
Godrej PRODUCT
SUPER BIZ
multipurpose
CLEANING POWDER
Godrej

அதிகார வளைவுகள்

10

ஆற்காடு சாலையில் வடபழனி, ஸ்டுடியோக்கள் எல்லாம் தாண்டி, கொளுத்தும் வெயிலில் நின்று கொண்டிருந்தது ஒரு படகுக் கார். அதன் பானெட்டைத் திறந்து, எஞ்சின் பகுதியில் தலையும் கழுத்தும் நுழைத்து, ஏதோ குடைந்து கொண்டிருந்தார் சில்க் ஜிப்பாவும், மில் வேஷ்டியும் அணிந்திருந்த ஒருவர்.

சாலையில் இரண்டு மற்றும் நாலு சக்கர வாகனங்கள் தலைதெறிக்கும் வேகத்தில் பறந்து கொண்டிருந்தன தொடர்ச்சியாக. தொகுதிப் பக்கம் தலைகாட்டுகிற எம்.எல்.ஏ. மாதிரி எப்போதாவது ஓரிரு ஆட்டோக்களும் லொடலொடத்துக் கொண்டு சென்றன. ஆனால் ஒருவராவது ஒரு செகண்ட் வண்டியை நிறுத்தி, "என்ன டிரபிள்?" என்று விசாரிக்க வேண்டுமே! ஊஹூம்!

பத்து நிமிடம் போல வியர்த்து விறுவிறுத்த பிறகு, தலையை வெளியே எடுத்தார் அந்த மனிதர். ஜிப்பா கறைபடுவதைப் பற்றிக் கவலைப்படாமல், பைக்குள் அழுக்குக் கையை நுழைத்து, செண்ட் தெளித்த கர்ச்சீப்பை எடுத்து முகம் துடைத்தார். சற்று ஓய்வெடுக்கும் உத்தேசத்துடன் காரின் உள்ளே போய் உட்கார்ந்தார். ஏஸியின் குளுமையை அனுபவித்துக் கொண்டே, பின்புறக் கண்ணாடி வழியாகப் போக்குவரத்தை நோட்டம் விட்டார். நூல் பிடித்தாற் போல வெகு தூரத்துக்கு நீண்டிருந்த சாலையில் மூன்று விளக்குக் கம்பங்கள் தாண்டி ஓர் ஆசாமி சைக்கிளில் வருவதைக் கண்டார். முகம் மலர்ந்தார். காரை விட்டிறங்கி, பானெட்டை மூடினார். ரோட்டில் நின்றவாறே காத்திருந்தார்.

அந்தச் சைக்கிள்காரன் நெருங்கியதும், "தம்பி! ஒரு நிமிஷம்!" என்று கைகாட்டி நிறுத்தினார்.

"என்னங்க?"

"இந்த விலாசத்துக்கு வழி சொல்லுங்க தம்பி!" என்று பாக்கெட்டிலிருந்து ஒரு சீட்டை எடுத்து நீட்டினார்.

"சின்மயா நகரா? இங்கேருந்து ரொம்பத் தூரம் போகணுங்க!"

"அப்படியா....! எனக்கு ஒரு உதவி பண்ணுவீங்களா?"

"என்னங்க?"

"எங்கூட வந்து, வழி காட்டிட்டுப் போங்களேன்...."

"அதெப்படிங்க முடியும்? எனக்கு நிறைய வேலை இருக்கு. தவிர...." என்று சைக்கிளைப் பார்த்தான்.

"கவலைப்படாதீங்க.... சைக்கிளைத் தூக்கி டிக்கியிலே போடுங்க. காரிலே ஏறிக்கிட்டு, எனக்கு வழி காட்டுங்க. அப்புறம் உங்களுக்கு எங்கே போகணுமோ அங்கே கொண்டு போய் விட்டுடறேன்!"

கொஞ்சம் யோசித்தான் இளைஞன். பிறகு, தலையாட்டினான். அந்தப் பெரிய மனிதர் டிக்கியைத் திறந்ததும் சைக்கிளைத் தூக்கி அதில் போட்டான்.

இருவரும் ஏறிக் கொண்டதும் கார் புறப்பட்டது. ஏர் கண்டிஷன் குளுமையுடன் இனியதொரு நறுமணம் கலந்து வந்தது. அந்த இளைஞனின் நாசியில் நெருடியது. இரண்டு, மூன்று முறை மூக்கை உறிஞ்சினான்.

"ஃபாரின் செண்ட்டுங்களா?"

"எஸ். நீங்களும் வேணா கொஞ்சம் போட்டுக்கறீங்களா?"

"வாணாங்க...."

"கூச்சப்படாதீங்க. போட்டுக்குங்க..." என்றபடியே இடதுபுறம் சாய்ந்து, டாஷ்—போர்டைத் திறந்து, அழகான 'ஷேப்'புடன் கூடிய பெர்ஃப்யூம் பாட்டிலை எடுத்து, மூடியை உருவி 'விஷ்க் விஷ்க்' என்று அந்த இளைஞனின் சட்டையின் மீது திரவத்தைப் பீய்ச்சினார். அதே வேகத்தில், சடாரென்று அவனது முகத்துக்கு எதிரே பெர்ஃப்யூம் புட்டியைக் கொண்டு போய் அழுத்தவும், திரவம் கன்னாபின்னாவென்று மூக்கு, கண், வாய், என்று தெறிக்க, அது தந்த எரிச்சலில் இளைஞன் திணற—

செண்ட் புட்டியை அப்படியே நழுவ விட்டு ஸீட்டில் பக்கத்தில் கிடந்த ஒரு சிறிய டவலை எடுத்து இடது கையாலேயே இளைஞனின் முகத்தில் வைத்துப் பலமாக அழுத்தினார், ஜிப்பாக்காரர்.

கண்ணைத் திறக்க முடியாமல் அவஸ்தைப்

முகுந்தன்

பட்டுக் கொண்டிருந்த இளைஞன் டவலைப் பறித்து எறிய முற்பட்டபோது, சடாரென்று வண்டியை பிரேக் போட்டு நிறுத்தினார். இரண்டு கைகளாலும் அந்த டவலை அவன் முகத்தோடு சேர்த்து இறுக்கமாகச் சில விநாடிகளுக்கு அழுத்தவும், அவன் கொஞ்ச நேரம் எதிர்ப்புக் காட்டி, பிறகு திணறலுடன் சட்டென ஓய்ந்து போனான்.

இளைஞனின் உடம்பு தொய்ந்து விட்டிருந்தது இப்போது. அவன் ஸீட்டில் தலையைச் சாய்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது போல லாகவமாக அவனை நகர்த்தி வைத்தார் சில்க் ஜிப்பா. பெர்ஃப்யூம் புட்டியையும் டவலையும் டாஷ்—போர்டில் திணித்து மூடி, காரை வேகமாகக் கிளப்பி, நேராகப் பறந்து சென்றார்.

மூன்று மணி நேரம் கழித்துப் பச்சை நிறக் கார்ப்பெட் விரித்த அந்தப் பங்களா அறையில் போன் செல்லமாகச் சிணுங்கியது. ஆவலுடன் ரிஸீவரை எடுத்தார்.

''ஹலோ முடிச்சுட்டேங்க!''

''என்னத்தை முடிச்சீர்? உம்முடைய கறுப்புப் பணத்தை எண்ணி முடிச்சீரா?'' என்று கிண்டல் செய்தது மறுமுனைக் குரல்.

''இல்லீங்க.... நீங்க ஒரு வேலை சொன்னீங்களே கொஞ்ச நாட்கள் முன்னாலே—அதைச் செய்து முடிச்சுட்டேன்...''

''சரக்கு டெலிவரி கொடுக்கும்படி நான் ஒன்றும் உம்மிடம் சொல்லவில்லையே?''

''அதில்லீங்க.... அந்த ஆளு — சத்யா — அவனைத் தீர்த்துக் கட்டச் சொன்னீங்களே....''

''ஆமாம்.... ஆள் கிடைச்சானா உங்க கையிலே? எப்போது, எப்படிச் சிக்கினான், விவரமாகச் சொல்லும்!''

ஆர்காடு சாலையில் சத்யாவுக்காகத் தினமும் வேவு பார்த்துக் காத்திருந்ததையும் அன்று நடுப்பகல் வேளையில் அவன் வசமாக வந்து சிக்கிக் கொண்டதையும் விவரித்தார். தொடர்ந்து, ''பல்லாவரத்திலே என் கெஸ்ட் ஹவுஸ் இருக்கிறதல்லவா — அதிலே வச்சு ஆளைத் தீர்த்தாச்சு — பெத்தடின் இஞ்செக்ஷன் போட்டு!'' என்று சொல்லி முடித்தார்.

''வெரி குட்! பாடியை என்ன செய்தீர்?''

''கெஸ்ட் ஹவுஸ் கிணற்றில் பாறாங்கல்லுடன் சேர்த்து உருட்டி விட்டாகி விட்டது....''

''சபாஷ்!''

''நீங்க கொடுத்த தகவலிலே ஒரு அயிட்டம் தப்புங்க.... அந்த ஆளைத் தீர்த்துக் கட்டினதுக்குப் பிறகுதான் அதை நானே கவனிச்சேன்....''

''என்னய்யா உளறுகிறீர்?''

''அந்த சத்யா, சினிமா நடிகர் டி. ராஜேந்தர் போலத் தாடி மீசை வச்சிருப்பான்னு சொன்னீங்களே — அதிலேதாங்க நீங்க நல்லா ஏமாந்து போயிட்டீங்க!''

''புரியும்படியாச் சொல்லித் தொலையுமய்யா! நான் சொன்னதிலே என்ன தப்பு?''

''சத்யா வச்சிருந்தது பொய்த் தாடி, மீசைங்க! ஸ்பிரிட்—கம் போட்டு நல்லா ஒட்டி வச்சிருந்து, ஏமாத்தியிருக்கான் எல்லாரையும்....!''

''...............''

''அவனை ஊசி போட்டுக் கணக்கு முடிச்சதுக்கு அப்பாலே தரையிலே இழுத்துக்கிட்டுப் போனேனா — தாடியும் மீசையும் தனியா கழண்டு விழுந்துடுச்சுங்க! ஆள் மூஞ்சியைப் பார்த்தா, பளபளன்னு ஷேவிங் பண்ணின மாதிரி இருந்தது! ஹஹ்ஹஹ்...''

சிரிப்பை வெட்டியது மறுமுனைக் குரல். ''ஷட்டப்! சத்யாவாவது, பொய்த் தாடி



வைத்துக்கொள்வதாவது! சுத்தப்பேத்தல்...! நான் சொல்கிறேன் கேளும். நீர் சொல்வது உண்மையாயிருக்கும் பட்சத்தில்....''

''முருகன் பேர்லே ஆணையா — விட்டேன்! — சத்தியமுங்க!''

''நீர் கொன்ற ஆள் நிச்சயமாக சத்யா இல்லே!''

''ஐயையோ! அப்படீன்னா அது யாருங்க?''

''யாருக்குத் தெரியும்! யாரோ ஒரு அப்பாவி! அவ்வளவுதான் என்னாலே சொல்ல முடியும்.....!''

''இப்ப நான் என்னங்க செய்யறது?''

''உம்ம பக்கத்திலே யாரும் இல்லேயே?''

''இல்லீங்க.''

''போனை வச்சுட்டு, எதிர்ச் சுவரிலே போய் முட்டிக்குங்க! அப்புறமாவது புத்தி வருகிறதா பார்க்கலாம்....! உம்மையெல்லாம் நம்பி ஒரு வேலையில் விட்டேனே — என்னைச் சொல்லணும்!''

சில்க் ஜிப்பாக்காரர் திருதிருவென்று விழிக்க, போன் வைக்கப்பட்டு விட்டது.

அம்பிகாவும் அருணும் மகாபலிபுரச் சாலை ஹோட்டலில் டிபன் சாப்பிட்டு விட்டு நகருக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். போகும்போது எத்தனைக்கெத்தனை வேகமாகக் காரை ஓட்டினாளோ அதற்கு நேர் மாறாகக் கல்யாண மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் போல மெதுவாக ஓட்டி வந்தாள் அம்பிகா. அருணுக்கோ அந்த நத்தை வேகம் படு எரிச்சலைத் தந்தது.

''ஜிங்லி! இன்னும் கொஞ்சம் ஸ்பீடாகப் போக மாட்டாயா நீ....? எனக்குச் சீக்கிரம் வீட்டுக்குப் போயாக வேண்டும்!'' என்று சொல்லிப் பார்த்தான்.

சட்டென்று வண்டியை நிறுத்தினாள் 'ஜிங்லி'. எட்டி, அருண் பக்கத்துக் கதவைத் திறந்துவிட்டாள். ''கெட் டவுன் ப்ளீஸ்!'' என்றாள்.

''எ.... எ... எதற்காக இறங்கச் சொல்கிறாய்?''

''பின்னே என்ன? நான் என்ன உங்க பெர்ஸனல் ஷோஃபரா? பெரிசாக அதிகாரம் பண்ணுகிறீர்களே! அவசரமென்றால் இறங்கி, பஸ்ஸோ, லாரியோ பிடித்து வீடு போய்ச் சேருங்கள்!''

''நோ நோ... நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லே!'' என்று அவசர அவசரமாக அருண் மன்னிப்புக் கோரும் குரலில் சொல்ல, அதைக் காதில் போட்டுக் கொள்ளாமலே, ''இறங்குங்க மிஸ்டர் அருண்!'' என்றாள் அம்பிகா.

தலைக்கு மேல் கைகளைத் தூக்கிக் குவித்தான் அருண். ''ஸாரி மிஸ் அம்பிகா! நான் சொன்னதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்.... உனக்குப் பிடித்த ஸ்பீடில் டிரைவ் பண்ணிக் கொண்டு போ! என்னை இறக்கி மட்டும் விட்டு விடாதே! இந்தப் பொட்டைக் காட்டில், இருட்டு வேளையில் கைகாட்டினால் எந்த பஸ்காரப் பாவியும் வண்டியை நிறுத்த மாட்டான் என்பது சர்வ நிச்சயம்!'' — கெஞ்சினான்.

அம்பிகா மறுபடியும் வண்டியை ஸ்டார்ட் செய்தாள்.

''பாஸ்! சிட்டி வந்தாகிவிட்டது... உங்களை எங்கே டிராப் செய்ய வேண்டும் பாஸ்? தயவு செய்து சொல்கிறீர்களா?'' என்று போலி மரியாதையுடன் கேட்டாள் அம்பிகா.

'என்னதான் செய்கிறாள் பார்ப்போமே' என்ற அசட்டுத் துணிச்சலில், ''வளசரவாக்கத்தில் டிராப் பண்ணிடு ஜிங்லி!'' என்றான்

• அந்தப் பாடகியின் பாட்டுக்கு வரவேற்பு பாராட்டுதலை ஒரே விஷயம் கவித்து விட்டது — அவள் பாடக் கேட்டவரின் காதுகள்.

பொன்மொழிப் போட்டி-11 முடிவு

சரியான விடை:

கீதையில் கண்ணன்: இறைவனை வியந்து பார்ப்பவர்களும் இறைவனைப் பற்றி வியந்து பேசுபவர்களும் அப்படிப் பேசப்படுவதை வியந்து கேட்டுக் கொள்பவர்களும் உண்டு. ஆனால் அவனை அறிந்தவர் யாருமில்லை.

வால்டேர்: கடவுள் இல்லையென்றால் மனிதன் அவரை உருவாக்க நேர்ந்திருக்கும்.

பெர்னார்ட் ஷா: இளமை இளைஞர்களிடம் வீணடிக்கப்படுகிறது!

ஸி.வி. ராமன்: நவீன விஞ்ஞானம் பல விஷயங்களை நிச்சயப்படுத்துகிறது. அவற்றுள் ஒன்று, நிச்சயமற்ற விஷயங்கள் ஏராளமாய் உள்ளன என்பது.

சத்ய சாயி பாபா: நிசப்தத்தின் ஆழ்ந்த அமைதியிலேயே கடவுளின் குரலைக் கேட்க முடியும்.

கீழ்க்கண்ட 101 வாசகர்கள் சரியான விடையை எழுதியுள்ளார்கள். ரூ 200/— பரிசு அவர்களிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

பி. லதா, கோவை—18; பி.கே. தங்கம், இராஜபாளையம்; எஸ். யோகாம்பாள், சென்னை—2; பி.எஸ். பரந்தாமன், புதுப்பேட்டை (வடார்க்காடு); டி. ரங்கசாமி, கோவை—37; மு. சம்பத், கோவை—14; எஸ். உமா ராணி, சிவகாசி; கே.ஜி. துர்கா மகேஸ்வரி, கோவை—1; வி. மாலினி, சென்னை—102; செ. சிவசுப்ரமணியன், காஞ்சீபுரம்—1; ஜெ. சுதாகரன், குமாரபாளையம்; எஸ். கணேசன், திருப்பத்தூர் (வடார்க்காடு); பி. ராமச்சந்திர முரளி, செகந்திராபாத்; மு. அருணாசலம், சேலம்—7; வி. ஞான சுந்தரன், ஈரோடு; கா. கண்ணன், மதுரை—18; மா. சண்முகம், சென்னை—45; பி.எம். பிரபாகரன், திருமருகல்; எஸ். சேகர், திருவாரூர்—2; எஸ். இராஜகோபாலன், மதுரை—6; கே.

அருண் அதிகாரமாக.

"எஸ், பாஸ்!" என்றவன், மேற்கொண்டு எதுவும் பேசாமல் வளசரவாக்கத்தில் அவன் குறிப்பிட்ட மெயின் ரோடில் கொண்டு போய் நிறுத்தினான். அவசர அவசரமாக இறங்கிக் கொண்டான் அருண்.

"மிஸ்டர் அருண்! தாங்க் யூ வெரி மச் ஃபார் கீப்பிங் கம்பெனி.... நாளைக் காலை வழக்கம் போல டென்னிஸ் பிராக்டீஸுக்கு வந்து விடுங்கள்! மறந்து விடாதீர்கள்! குட் நைட்!"

அருணுக்குப் பைத்தியம் பிடிக்காத குறை தான். இந்த அம்பிகாவை எதில் சேர்ப்பது? கால், அரை, முக்கால் அல்லது முழு லூஸ்...? சட்டுச் சட்டென்று கோபம் வருகிறது. சில சமயம் குழந்தைத்தனமாகவும் நடந்து கொள்கிறாள்... இவளை எப்படிச் சமாளிப்பது எப்படி இந்த ஃபார்முலாவைக் கைப்பற்றப் போகிறோம்?

பிரமிப்பாக இருந்தது.

ஆனால் அதிக நேரம் யோசித்துக் கொண்டு நிற்கவும் நேரமில்லை. ஏற்கெனவே ரொம்ப நேரமாகிவிட்டது. ஏழு மணிக்குள் அவன் சத்யாவின் வீட்டுக்குள் நுழைந்திருக்க வேண்டும்....

விறுவிறுவென்று நடந்தான். சத்யாவின் வீட்டுக்கு எதிர்ப்புறக் கடையில் இவன் போய்க் கேட்டதுமே சாவி கிடைத்துவிட்டது. கதவைத் திறந்து கொண்டு வீட்டு ஹாலில் போய் உட்கார்ந்தான்.

காலையில் ஆபீசுக்குக் கிளம்பும்போதே, ஞாபகமாகக் கொண்டு வந்திருந்த பிஸ்டலை, பாண்ட் பாக்கெட்டிலிருந்து உருவி, கையில் வைத்துக் கொண்டான். கை நடுங்கியது லேசாக.

சத்யாவைக் கொல்வதற்காக வரவிருக்கும் கொலையாளியை எதிர்நோக்கிக் காத்திருக்க ஆரம்பித்தான் அருண்.

அம்பிகா தன் பங்களாவை அடைந்த போது அவள் சற்றும் எதிர்பார்த்திராத ஒரு நபரைக் கண்டதும் ஆச்சர்யத்தால் துள்ளினாள். அவளது உள்ளம் கவர்ந்த இளைஞன் தான் ஹாலில் சோபாவில் உட்கார்ந்திருந்தான்.

"ஹாய்! நீ எப்ப வந்தே ஊரிலேருந்து?" என்று கேட்டு சந்தோஷக் கூச்சல் போட்ட படியே அவன் எதிரில் போய் உட்கார்ந்தாள்.

"சாயந்தரம்தான் வந்தேன்.... இந்தத் தடவை அலைச்சல் அதிகம்.... அதனால் ரொம்பக் களைப்பாயிருந்தது... தியாஸாஃபிகல் சொஸைட்டிக்குப் போய், குளுகுளு மர நிழலில், ஓய்வெடுத்துக் கொண்டேன்... வெளியே வந்தபோது முதலில் ஒரு தூங்கு மூஞ்சி மரம்தான் கண்ணில் பட்டது. உடனே உன் ஞாபகம் வரவே, நேராக இங்கே வந்து விட்டேன்!"

"என்னைத் தூங்கு மூஞ்சி என்றா சொல்கிறாய்!" என்று செல்லமாகக் கோபித்து, விளையாட்டாக அவன் முதுகில் அரை டஜன் குத்துவிட்டாள் அம்பிகா.

"இது போதாது.... வேலை மெனக்கெட்டு உன்னை லவ் பண்ணினேன் பாரு — அதுக்கு இதற்கு மேலும் தேவை!" என்று அம்பிகாவைச் சீண்டி விட்டான் அவன்.

கொஞ்ச நேரம் வெட்டிப் பேச்சில் கழிந்தது. அம்பிகாவின் தாயார் கொண்டு வந்து கொடுத்த ஜூஸை ருசித்தார்கள் இருவரும்.

பிறகு திடீரென்று நினைவு வந்தவள் போல, "ஹேய்! லிஸன்.... உன் டிரெஸ்ஸை

தொகுப்பு: என். சந்திரமௌலி

சரவணன், சேத்திரபாலபுரம் (தஞ்சை); த. வாகதேவன், புதுவை—9; டி. கோபாலன், ஸ்ரீவைகுண்டம்; ஆர். லக்ஷ்மி நாராயணன், கோவை—37; கி.எஸ். ரே, புதுவை—1; வி.வி. வல்லி, செகந்திராபாத்; ஆர். நடராஜன், முடிகொண்டான்; திருமதி ருக்மிணி, திருப்பூர்; ஏ. ஜே. தெய்வசிகாமணி, நெல்லிக்குப்பம்; ஜி. கோமதி, கடலூர்; ஜி. செல்வராஜன், வெங்கலம்; எல்.ஏ. சப்தரிஷி, பெங்களூர்—3; என். சிவகுமார், கோனார்பட்டி அஞ்சல்; எம். ராஜய்யா, தேவகோட்டை விரிவு; எம். சந்திரசேகர், கோவை—32; வி. இரவிச்சந்திரன், தொனசம்பட்டி அஞ்சல்; கே. சியாமளா, பம்பாய்—80; எம். ரவீந்திரன், கச்ச நகரம்; ஏ.ஜி. கல்யாணசுந்தரம், கோவை—6; எஸ்.ஆர். ராஜகோபாலன், சென்னை—4; எஸ். காயத்ரி, சென்னை—86; ஆர். விஸ்வநாதன், சென்னை—33; இரா. சேகரன், அணிக்கொரை அஞ்சல்; ஜி. முருகவேல், மதுரை—1; ஆர். சாவித்ரி, கோவை—22; பி.வி. தங்கவேல், சேலம்—5; க. கோகிலவாணி, சங்கமங்கலம்; எஸ். பத்மநாபன், லக்ஷ்மிபுரம்-602024; வி. கல்யாணசுந்தரம், சென்னை-18; வி. கோபிநாத், நெய்வேலி-3; வெ. உஷாராணி, பொன்னேரி அஞ்சல்; என். பாலசுப்பிரமணியன், சென்னை-101; எஸ். விசாலம், சென்னை—4; என். காமாக்ஷி, சென்னை—87; நிர்மலா கேசவராஜ், சென்னை—9; ஆர். சரவணன், வளவனூர்; க. வசந்தா, நாமக்கல்; ஜி. இராசேந்திரன், கடலூர்—2; என். கன்யா, சென்னை—44; என். இராமநாதன், மயிலாடுதுறை; வி. ராஜகோபால், புதுவை—1; என். பாலகிருஷ்ணன், சென்னை—43; இந்திரா, பம்பாய்—22; எஸ்.எஸ்.என். சர்புதீன் பரீதா, திருமயம்; ஆர். ராமமூர்த்தி, ராமநாதபுரம்; மீடா சர்கார், கொப்பம்பட்டி; எஸ். அருள்மொழி, காட்டூர்; வி. சுவாமிநாதன், குத்தாலம்; என். விஜயலக்ஷ்மி, சென்னை—61; ப. வில்லி சந்திரா, திருவையாறு; ஆ. பெருமாள், உசிலம்பட்டி; எஸ். மேகநாதன், சென்னை—13; ஏ.என். பாலசுப்ரமணியன், புதுதில்லி—67; ஆர். சாந்தா, கே.கே. புதூர்; இ. சந்திரா, சோழபுரம்; பி. ஆனந்தன், நீலகிரி; எஸ். கண்ணன், சென்னை—53; பி. சரோஜா, திருநெல்வேலி; திருமதி டி. விமலா, தஞ்சை; அ. அனந்த பத்மநாதன், புதூர் (தஞ்சை); ஆர். வெங்கட கிருஷ்ணன், காரைக்கால்; கே. எஸ். கணபதி, சென்னை—87; ஜி. மலர்கண்ணன், வடோதரா; பி. சங்கர், சென்னை—21; எஸ். அருள்சாமி, கணபதி புரம் அஞ்சல்; ஜி. ப்ரபாகர், மதுரை—1; எஸ். இராமமூர்த்தி, பாளையங்கோட்டை; ஜி. ராமபிரசாத், மயிலாடுதுறை; ராஜீவ் நரசிம்மன், பம்பாய்—38; எஸ். பிரபு ராஜ், ஈரோடு—1; வள்ளி, சென்னை—18; மு. பொன்னம்மாள், திருநெல்வேலி; பா. நாகராஜன், பொறையார்; ஜி. கோவிந்தன், நெல்லிகுப்பம்; எஸ். ருக்மிணி, நெய்வேலி—1; விஜயா சேஷாத்ரி, பெங்களூர்—70; எஸ். இராஜ் குமார், நாகர்கோவில்; எஸ். லக்ஷ்மணன், ஸ்ரீவைகுண்டம்; பி. கௌசல்யா, சென்னை—41; கே.வி. கிருஷ்ணன், தஞ்சை—4; எஸ்.பி. தங்கராஜ், கோவை—12.

யெல்லாம் ஒழுங்காக லாண்டிரிக்குப் போடுகிற பழக்கம் உண்டா உனக்கு!'' என்று கேட்டான்.

''எதற்காகக் கேட்கிறாய்?''

''முன்னே ஒருசமயம் நாம் சந்தித்த போது உனக்குத் தெரியாமல் உன் ஷர்ட் பாக்கெட்டில் ஒரு காகிதம் செருகினேன்...''

''லவ் லெட்டரா?''

''உன் முகரைக்கு அது ஒன்றுதான் குறைச்சல்! குறுக்கே பேசாமல் கேள்.... நீ துணிகளை லாண்டிரிக்குப் போடும்போது, ஏதாவது பேப்பர் கையிலே கிடைச்சு, எடுத்து வைத்த ஞாபகம் இருக்கா, சொல்லு!''

''பஸ் டிக்கெட்டைக் கூடப் பத்திரப் படுத்தி வைக்கிறவன் நான். உன் பேப்பரும் பத்திரமாகத்தான் இருக்கும்!''

''ஹை! வெரிகுட்....! நான் வச்ச அந்தப் பேப்பர் எனக்கு வேணுமே!''

''வீட்டிலே எந்த இடத்திலே எடுத்து வச்சேன்னு ஞாபகப்படுத்திப் பார்க்கணும். அப்புறம் தேடணும். அது கிடைக்கணும்... அதுக்கும் அப்புறம்தான் உன் கைக்கு வந்து சேரும். அது சரி, அது என்ன காகிதம்? எதற்காக அதைக் கேட்கிறாய்?''

''லிஸன்.... அந்தக் காகிதத்திலே ஒரு ஃபார்முலா இருந்தது....''

அந்த இளைஞன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''அது வேண்டுமென்று கேட்டுக் கொண்டு ஒரு யங் மேன் என்னிடம் வந்திருக்கிறான்....''

இளைஞனின் கண்கள் பளிச்சிட்டன.

''அவனை இப்போ நான் படாத பாடு படுத்திக் கொண்டிருக்கிறேன். சில சமயங்களில் எனக்கே அவனைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. அவனிடம் இந்த ஃபார்முலாவைக் கொடுத்தால் என்ன என்று தோன்றுகிறது.... பாவம், அவனும் தான் பிழைத்துப் போகட்டுமே....''

இளைஞன் பளிச்சென்று சொன்னான்: ''நன்றாக யோசித்துப் பார்த்து விட்டுச் செய் அம்பிகா! அதைக் கொடுப்பதால் தகராறு ஏதாவது வந்து தொலைக்கப் போகிறது!''

''அதெல்லாம் ஒன்றும் வராது! மாமாவைச் சமாளித்துச் சரிக் கட்ட எனக்குத் தெரியும்!''

அவள் சொல்லி முடித்த அதே நிமிடம், போர்ட்டிகோவில் ஒரு கார் வந்து நிற்கும் ஓசையும், ''ஜிங்லி இருக்கிறாளா? அல்லது கிளப்பிலேருந்து இன்னும் வரவில்லையா?'' என்ற கனமான குரலும் கேட்டன.

''ஹை! மாமாவே வந்துட்டார்!'' என்று அம்பிகா துள்ளிக் குதிக்க, அந்த இளைஞன் சட்டென்று எழுந்து, ''ஸீ யூ அம்பிகா!'' என்று சொல்லி, பங்களாவின் பின்புறக் கதவு வழியாக வெளியேறும் உத்தேசத்துடன் விரைந்தான்.

(தொடரும்)



அருள்வாக்கு

ஸகல ஜாதியாரும் சேர்ந்து கோவில் திருப்பணி, அல்லது தூர்ந்த ஏரியில் மண் வாருவது என்கிற மாதிரியான பெரிய காரியங்களை எடுத்துக் கொண்டு, ஓயாமல் பொதுத் தொண்டுகளில் ஈடுபட்டிருந்தால் தன்னால் அன்பும் ஸமூஹ ஸௌஜன்யமும் ஏற்பட்டுவிடும். இப்போது காரியம் இல்லாமலிருப்பதால்தான் எதையாவது நினைத்துக் கொண்டிருக்கத் தோன்றுகிறது. இதிலிருந்து தான் விதண்டாவாதம், வம்பு தும்பு, 'ஒழிக' சண்டை எல்லாம் உண்டாகின்றன. ஒரு சண்டை பூசல் என்று கிளம்பிவிட்டால் தான் ஸ்வாரஸ்யமாயிருக்கிறது; கிளர்ச்சி, ஆர்ப்பாட்டம், புரட்சி என்று கிளப்பி விட்டால்தான் தங்களைச் சுற்றி 'ஜே' போடப் பத்துப் பேர் சேர்கிறார்கள்' என்பதால் இம்மாதிரி செய்கிறார்கள். இதற்கெல்லாம் பொழுதே இல்லாதபடி காரியங்களில் ஈடுபட்டிருந்தால் எல்லாம் சரியாகிச் சாந்தமாகி விடும். தொண்டைத் தண்ணீர் வற்ற 'ஒழிக' கூச்சல் போட்டுக் கொண்டு, கால் வலிக்க ஊர்வலம் வருவதற்குப் பதில் இந்த Man Power ஐ (மனித சக்தியை) ஏதாவது ஆக்க ரீதியான திசையில் திருப்பிவிட்டால் எத்தனையோ வளர்ச்சி ஏற்படும். எல்லாவற்றையும் விடப் பெரிய வளர்ச்சி ஸமஸ்த ஜனங்களிடையும் உண்டாகிற அன்புதான். அநுஷ்டானங்கள் பண்ணுவது கோவிலுக்குப் போவது, உபந்நியாசத்துக்குப் போவது, லீவு நாளானால் ஸகல ஜாதியாரும் சேர்ந்து நாள் முழுக்கத் தெய்வப் பணி ஸமூகப் பணி செய்வது என்று 'டைட்'டாக டைம் டேபிள் போட்டுக் கொண்டு பண்ண ஆரம்பித்து விட்டால் இந்த 'ஒழிக' 'வீழ்க'வுக்கெல்லாம் அவகாசமேயில்லாமல் எல்லாரும் வளர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்



அன்னையர், அறிவர்: கேட்பரியின் போர்ன்விடா கோகோ, மால்ட், பால் மற்றும் அசல் சீனியின் ஊட்ட நலன்களைக் கொண்டது. போர்ன்விடா குழந்தைகள் மிக விரும்பும் அத் தனிச் சுவையை பாலின் குணத்துடன் அளிக்கிறது.

தினமும் போர்ன்விடா அளிக்கப்படும் குழந்தைகள் வேலையிலும் விளையாட்டிலும் கூர்மையோடிருக்கிறார்கள். அது, அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் சுறுசுறுப்பையும் அளிக்கிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் நலன் அளிக்கிறது.

அதன் தனிச் சுவையுடன் இணைந்திட்ட இன்றைய வளர்ச்சி.

கேட்பரியின்
போர்ன்விடா



M/6987 TAM

கடைக்காரர், வர்த்தகம் புரிவோர், உணவுப் பொருட்கள் விற்பனையாளர், பர்னிச்சர் தயாரிப்போர், நகை வியாபாரிகள், கண்ட்ராக்டர்கள், தொழில் நுணுக்க வல்லுனர், மின்வேலை செய்வோர், தனித்துறை சிறப்பு வல்லுனர் மற்றும் தொழிலதிபர்களுக்கு ஒரு நற்செய்தி :

வளமான வர்த்தகத்திற்கு ஒரு பொன்னான வாய்ப்பு

எல்லோ பேஜஸ்

அகில உலகமெங்கும் நிரூபணம் பெற்ற ஒரு விளம்பரச் சாதனம், அதிகார பூர்வமான புதிய சென்னை டெலிபோன் டைரக்டரியுடன் அதிவிரைவில் வெளி வருகிறது.

வர்த்தகம் மற்றும் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஊக்கம் மிக்க எல்லோருக்கும் இது ஒரு பொன்னான வாய்ப்பு. ஏனெனில் இந்த 'வணிகப் பகுதி' (Yellow Pages) இப்பொழுது இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நவீனமானதொரு விளம்பரச் சாதனமான இது, உங்கள் வாடிக்கையாளர்கள் உங்களுடன் தொடர்பு கொள்ள வகை செய்யும்.

உங்களுடைய தொலைபேசி எண் மற்றும் முகவரியை இந்த வணிகப்பகுதி உங்கள் வர்த்தக அல்லது தொழிற்துறைக்கு ஏற்ப ஒரு பகுதியில் பிரசுரிக்கும்.

நினைவிருக்கட்டும், நீங்கள் எப்படிப்பட்ட தொழில்/வர்த்தகம் புரிபவராயினும், பெரிய அல்லது சிறிய அளவில் தொழில்/வர்த்தகம் புரிபவராயிருப்பினும் சரி உங்களை எளிதில் கண்டறிந்து கொள்வதற்கேற்ப ஆயிரத்திற்கும் மேற்பட்ட இனவாரியாகப் பிரிக்கப்பட்ட தொகுதி உள்ளது. உங்கள் வாடிக்கையாளர் உங்களை தவற விடவே முடியாது.

அகில உலகப் புள்ளி விவரக்கணக்குப்படி வணிகப்பகுதியில் பிரசுரிக்கப்பட்ட 10இல் 9 பேர்கள் நேரிடையாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளப்பட்டனர் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆகவே தாமதிக்க வேண்டாம். வணிகப் பகுதியில் உங்கள் விளம்பரத் தேவைக்கு இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள். உங்கள் வர்த்தகம் பொன்னாகப் பெருகிட வித்திட்டுவிடுங்கள்.

தொலைபேசி வைத்துக் கொண்டுள்ள அனைத்து வர்த்தக வாடிக்கையாளர்களின் பெயர்களும் இலவசமாகச் சேர்க்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு, இந்த கூப்பனை உடனே கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும் :

எம் & என் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட்
25, இராதாகிருஷ்ணன் சாலை,
3-வது மாடி, சென்னை 600 004.
தொலைபேசி : 844946/844948

எம் & என் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட், சென்னை
நான்/நாங்கள் வணிகப்பகுதியைப் (Yellow Pages) பற்றி அதிக விவரங்களைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்/படுகிறோம். உங்கள் ஊழியரை உடனே தொடர்பு கொள்ளச் சொல்லவும்.
திரு/திருமதி ____________
நிறுவனம் ____________
முகவரி : ____________
தொலைபேசி : ____________

GETIT

சென்னை டெலிபோன் டைரக்டரியின் அதிகாரபூர்வமான பிரசுரகர்த்தர்கள்.

yellow pages

துரித சேவைக்கு "எல்லோ பேஜஸ்"



காவலன் அவன் கோவலன்

**விசுவைத்தான் பேட்டி காண வேண்டுமா என்ன?
அவருடைய ரசிகர் ஒருவரைப்
பேட்டி கண்டால் என்ன?**

"**வா**ங்க சார், உங்க பேரு?"

"சிவசுப்ரமணியன்."

"விசுவைப் பத்தி என்ன நெனைக்கறீங்க?"

"நான் விசுவோட பரம ரசிகன் சார். ஈஸ்வர அல்லா தேரே நாம்னு ஆரம்ப காலத்தில டிராமா வந்ததே அப்ப லேர்ந்தே அவரோட எந்த டிராமா சினிமாவையும் மிஸ் பண்ண மாட்டேன். குடும்பம் ஒரு கதம்பம், உறவுக்கு கை கொடுப்போம் — அடடா! என்ன அருமையான நாடகம் லாம் எழுதியிருக்காரு!"

"அவருடைய லேட்டஸ்ட் படம் பார்த்துட்டீங்களா?"

(சற்றே சலிப்போடு) "காவலன் அவன் கோவலன் தானே? பாத்தேன். விசுவுக்கு ஏன் சார் இந்த விபரீத ஆசை? சம்சாரம் அது மின்சாரம், திருமதி ஒரு வெகுமதி ரெண்டு படம் ஹிட் ஆனவுடனே அந்த பேரை வைச்சுக் கிட்டு இந்தப் படத்தைப் பண்ணியிருக்காருன்னு நெனைக் கறேன். வித்தியாசமா பண்ணனும்னு நெனைச்சு சறுக்கி யிருக்காரு..."

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"பாலசந்தர், பாரதி ராஜா, பாக்யராஜ் இவங்க படம்னா நாம இன்னின்னதை எதிர்பார்க்கிறோம். அதே போல நடுத் தர வர்க்கத்தை வச்சு இன்ட்ரஸ்டிங்கா படம் பண்ண விசு வை விட்டா வேறே ஆளு கெடையாதுங்கறது என்னோட எண்ணம். வேறே மாதிரி படம்லாம் எடுத்து இடையிலே அவருக்கு மார்க்கெட்டே போயிடுச்சு... டபிள் ரோலை வச்சு காமெடி பண்றது தமிழ் சினிமால புதுசு இல்லை..."

"பிரபு வித்தியாசமா நடிச்சிருக்காரே....

"இல்லேங்கலே. சினிமா டைரக்டரா வர்றதும், நெளிஞ்சு நெளிஞ்சு நின்னு நகத்தைக் கடிக்கறதும், சின்ன வீடை செட்டப் பண்ணிக்கிட்டுத் தடுமாறறதும் ஓகே. கிராமத் தானா வர்ற இன்னொரு பிரபுவுக்குத்தான் கேரக்டர் சரியா அமையலே. அதேபோல் அவங்க மனைவியா வர்ற ரேகா வுக்கும் வாய்ப்பே இல்லே..."

"படத்தில பின்ன என்னதான் ரசிச்சீங்க?"

"ரெண்டு மூணு காமெடி சீன் தான் சார். சினிமா டைரக் டர் பிரபுவோட மாமனார்தான் விசு. ஷூட்டிங் நடக்கற இடத்துக்கு வந்து, தன் மாப்பிள்ளையோட சின்ன வீடு யாருன்னு தெரிஞ்சுக்க, '4500 ரூபா — பட்டுப் புடைவை நீங்கதானே, நீங்கதானே'ன்னு மோப்பம் பிடிக்கறது; அப்புறம் லவ் சீனை டைரக்ட் பண்றப்போ மாப்பிள்ளை நடிகையைக் கட்டிப் பிடிச்சு சொல்லித் தர்றதுக்குப் பதிலா தன்னைக் கட்டிப் பிடிச்சு சொல்லித் தரணும்னு வம்பு பண்றது; கடைசில ஆரஞ்சு ஜூஸ்ல தூக்க மாத்திரையைக் கலந்து அவரைக் கீழே சாய்க்கிறது; அப்புறம் மனோரமா— கிஷ்மு வர்ற படப்பிடிப்பு — இந்த ஸீன்லாம் மனசு விட்டுச் சிரிக்க முடியுது. அதேபோல, க்ளைமாக்ஸ்ல ரெண்டு பிரபு வையும் கல்யாண வீட்ல வச்சுக்கிட்டு மாத்தி மாத்தி சமாளிக்கற build up ஜோர்... ஆனா...."

"ஆனா?"

"நார்மலா விசுவோட புத்திசாலித்தனமான நறுக் நறுக் (?) டயலாக்ஸ் எங்கே? கம்பி மேலே நடக்கற மாதிரி கதை எடுத்திட்டுப் போவாரே, அந்த சாமர்த்தியம் எங்கே? ஒவ்வொரு கேரக்டருக்கும் வித்தியாசமா முக்கியத்துவம் கொடுத்து மனசில பதிய வைக்கற விசுவை இந்தப் படத்தில ஏன் காணலே? படம் முடிஞ்ச பிறகு மனசுல நிறை வில்லே யே ஏன்? விசு சார், தயவு செஞ்சு இனிமே உங்க ரசிகர் களை இப்படி ஏமாத்தாதீங்க!"

— ஜெயமன் மதன்

இன்று ரொக்கம்; நாளை கடன்!

கதை: சிவதர்ஷிணி
படம்: உமாபதி




அதெல்லாம் எனக்குத் தெரியாது. என் கடமையை நான் செய்யறேன். நீங்க இளம்பரிங்களா? நாளை இன்டர்வியூவுக்கு நான் படிக்கணும்.
மறுநாள் இன்டர்வியூ.. மானேஜர் அறைக்குள் நுழைந்த தமிழரசி திருக்கிட்டாள்....
வாம்மா, வா! காஷியர் வேலை இன்டர்வியூக்கு வந்திருக்கிறதா நேற்று நீ சொன்னப்பவே இங்கே நான் வருவேன்னு எதிர்பார்த்துக் காத்திருக்கேன்!
ஸாரி ஸார்! நான் வரேன். எனக்குத் தான் வேலை கிடைக்காதே; அப்புறம் இன்டர்வியூ எதுக்கு?
இரும்மா, அவசரப்படாதே! அப்படி பழி வாங்கற மனுஷன் இல்லே, நான்..
..மேலும் பண விஷயத்திலே இரண்டே ரூபாய் தான்னாலும் நீ நேற்று காட்டிய கண்டிப்பு எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு...
அப்படீன்னா..
காஷியர் வேலை உனக்குத் தான்!
தாங்க் யூ ஸார்!

"தண்ணீர்ப் பஞ்சத்தைத்தான் சமாளிச்சுடலாம்னு மினிஸ்டர் சொல்லிட்டாரே?"

"அவர் சமாளிச்சுக்குவார். நாம எப்படிச் சமாளிக்கிறதாம்!"

— கீழை அ. கதிர்வேல்





"சொல்லாமல் கொள்ளாமல் நாம கட்சி மாறினதுக்குத் தலைவர் ரொம்பக் கோவிச்சுக்கிட்டாராமே?"

"ஆமாங்க; ஒரு வார்த்தை சொல்லியிருந்தால், நானும் உங்களோடேயே வந்திருப்பேனேன்னு வருத்தப்படறார்!"

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

கிங்ஸ்டன் என்ற இடத்திலுள்ள பாங்க் ஒன்றில் மேரி மில்லர் என்ற அம்மாளின் கணக்கில் பல வருஷங்களாக ஒரு பென்னி நாணயம் மிச்சமிருந்தது.

அரசாங்கத்துக்கு இது பெரிய தலைவேதனையாக இருந்ததோ, என்னவோ, 'லண்டன் கெஜட்' பத்திரிகையில் விளம்பரம் செய்தார்கள். 'மேரி மில்லர் இன்னும் ஒரு வருஷ காலத்துக்குள் தமது ஒரு பென்னி நாணயத்தைக் கேட்டு வாங்கிக் கொள்ளாவிட்டால், அதை இழக்க நேரிடும்'' என்பதுதான் விளம்பரத்தின் வாசகம். விளம்பரத்துக்கு ஆன செலவு பத்துப் பவுண்ட்! (ரூ2 1 0/—).

ஆதாரம்: உலகம் பலவிதம்
தொகுப்பு: ஆர். சம்பத்குமாரன்





"அமைச்சர் முடி வெட்டப் போறப்போ, எதுக்குப் பத்துப் பேரைப் பின்னோடு கூட்டிக்கிட்டுப் போறார்?"


"சலூன்லே, போர்வை போர்த்தறப்போ கைத் தட்டத்தான்..."

— ஆர். வசந்தகுமார்

மனைவி: நல்லவேளை.... பெண் பார்க்க வந்திருந்த மாப்பிள்ளைப் பையன் ஏற்கெனவே ஜெயில்ல இருந்தவன்னு எப்படி கண்டு பிடிச்சீங்க?

கணவன்: உள்ளே நுழையும்போதே வெளி கேட்டுக்குப் போட்டிருக்கிற கம்பிகளையெல்லாம் எண்ண ஆரம்பிச்சுட்டான்.

— இரா. சம்பத்குமார்



பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543 434157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—; வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—; விமானத் தபால் ரூ 650/—. (ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)

“தாங்க முடியாத வலின்னு சொன்னியே— இப்ப என்ன ஆச்சு?”





மேம்படுத்தப்பட்ட அமிர்தாஞ்சன் மிருதுவானது; எனவே தடவுவதற்கு எளிதானது. மேலும் மென்மையானது; எனவே தேய்ப்பதற்குச் சுலபமானது.

மேம்படுத்தப்பட்ட அமிர்தாஞ்சன் தலைவலி, உடல்வலி, தசைவலி, சுளுக்கு... எதையும் விரைவில் போக்குகிறது — முன்பு எப்போதையும் விட விரைவாக!

மேம்படுத்தப்பட்ட

அமிர்தாஞ்சன்

மீண்டும் புன்னகை மலரச் செய்கிறது — விரைவாக!

OBM 149 TM

Registered No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

